நிச்சயமாக அல்லாஹ் விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும். வானங்களும், பூமியும் படைக்கப்பட்ட நாளிலிருந்தே அல்லாஹ்வின் ஏட்டில் இது உள்ளது.
**(அல்குர் ஆன் 9 : 36)**


**வைகறை வெளிச்சம்**

ஜனவரி 2011 முஹர்ரம் 1432

**Volume : 3 Issue : 12**

ஆசிரியர்
**மு. குலாம்முஹம்மது,** M.A.
(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

தனி இதழ் ரூ. 15/-

**ஆண்டுச் சந்தா**
உள்நாடு ரூ.180/-
வெளிநாடு ரூ. 1500/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**தாருல் இஸ்லாம் டிரஸ்ட்**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு : 9444239594



VAIGARAI VELICHAM
52/1, Mannadi Street,
4th Floor, Room-7, Mannadi,
Chennai - 600 001.
**Phone: 044-45566909**
**Mob: 9444239594**
E-mail: darultrust@yahoo.com
Website : www.darulislam.in


# உள்ளே



**கவர் ஸ்டோரி**

## கஷ்மீர் பிரச்சனை பின்னணி என்ன?


பக்கம் **47**

| | |
|---|---|
| தரீக்குல் குர்ஆன் ................................ | 4 |
| நபி மொழி விளக்கம் ........................... | 9 |
| நாம் பிரிந்துவிட வேண்டாம் ................. | 11 |
| 60 வயதுக்கு பிறகு ............................ | 16 |
| நீதித் துறையின் இமாலய விளையாட்டு ... | 18 |
| பாபரி பள்ளிவாசல் தீர்ப்பு: ....................... | 21 |
| அலைக்கற்றை ஊழலும், பாரதீய ஜனதா கட்சியும். . . ! ......................... | 25 |
| சமச்சீர் கல்வியில் உருது, அரபி, மலையாளம், தெலுங்கு, கன்னடம் .................. | 30 |
| அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள் - காலம் வென்ற காட்சிகள் - அகழ்ப்போர் ........... | 38 |
| பேரறிஞர் அலீ மியான் (ரஹ்) ........................ | 44 |
| கர்கரேயை கொலை செய்தது யார்? ....... | 55 |
| கம்யூட்டர் கல்வி................................. | 57 |
| பெய்ரூத்லிருந்து ஜெரூசலம் வரை ......... | 60 |



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Private circulation to promote the Original Issue.

# தலையங்கம்

# எது எல்லோரும் பின்பற்ற வேண்டிய காலண்டர்?

இறைவன் மனிதனைப் படைத்தான். மனிதன் பூமிக்கு வருவதற்கு முன்னரே மனிதனுக்குத் தேவையான அனைத்தையும் பூமியில் அமைத்தான்.

தாயின் கர்ப்பத்தில் உள்ள குழந்தைக்கு உயிர் கொடுக்கும் போதே அது உலகத்தில் அனுபவிக்கப் போகும் அனைத்தையும் நிர்ணயித்து விடுகிறான். அதற்குத் தேவையானதை பூமியில் வைத்து விடுகிறான். வல்ல இறைவன்.

அப்படி இறைவன் மனிதனுக்காகத் தந்துள்ள அருள் கொடைகளின் அணிவகுப்பில் ஒன்றுதான் காலண்டரும். மனிதன் ஒரு சமுதாயமாக வாழத்தொடங்கும் போது அவன் தன் வரலாற்றைப் பதிவு செய்திட வும் நிகழ்வுகளையும் வைபவங்களையும் மனதில் இருத்திக் கொள்ளவும் மனிதனுக்கொரு நாட்காட்டி தேவை என்பதற்காக இறைவன் பனிரெண்டு மாதங்கள் என வகுத்தான்.

அல்லாஹ் கூறுகிறான் : நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பனிரெண்டு ஆகும். வானங்களும், பூமியும் படைக்கப்பட்ட நாளிலிருந்தே அல்லாஹ்வின் ஏட்டில் இது உள்ளது. (9:36)

மனிதன் படைக்கப்படுவதற்கு முன்னரே வானங்களும், பூமியும் படைக்கப்பட்டுவிட்டன. அவை படைக்கப்பட்ட நாளிலிலேயே ஒரு வருடத்துக்கு பனிரெண்டு மாதங்கள் என்று ஏகன் அல்லாஹ் முடிவு செய்துவிட்டான். அதை ஆதி மனிதர் தொட்டு அனைவரும் பின்பற்றிவந்தனர்.

மாதங்கள் எனும் போது அவை சந்திரனின் ஓட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திட வேண்டும் என்பதும் அல்லாஹ்வின் ஏற்பாடு.

முஅத்பின் ஜபல் (ரழி) ஸஅலபா பின் கன்மா (ரழி) ஆகிய இரு நபித் தோழர்களும் அண்ணல் நபி ஸல் அவர்களிடம் கேட்டனர் "வானில் தோன்றும் பிறை மெல்லிய நூல்போல் தோன்றி பிறகு வளர்ந்து பெரிதாகி முழுவட்டமாகிறது. பிறகு மெல்லக் குறைந்து முன்பு போல (மெலிதாக) ஆகிவிடுகிறதே... ஏன் அது ஒரே மாதிரி எப்போதும் இருப்பதில்லை" என்று.

அப்போது திருக்குர்ஆன் வசனம் இறங்கிற்று. (நபியே) பிறைகள் பற்றி உம்மிடம் அவர்கள் விசாரிக்கின்றனர். "அவை மக்களுக்கு காலம் காட்டுபவையாகவும் ஹஜ்ஜுக்குரிய காலம் காட்டியாகவும் உள்ளன" என்று கூறுவீராக. (2:189) என்ற வசனம் இறங்கியது. (நூல்: இப்னு அபீஹாத்தம், இப்னு அஸாகிர்).

இந்த வேதத்தை நம்புகின்ற முஸ்லிம்களுக்கு மட்டும் என்றில்லாமல் மக்கள் அனைவருக்குமான காலங்காட்டியாகவும் ஹஜ், நோன்பு, ஸகாத், இத்தா எனும் காத்திருப்புக்காலம் ஆகிய வணக்கங்களுக்கான காலங் காட்டியாகவும் பிறைகள் திகழ்கின்றன. குறிப்பாக முஸ்லிம்கள் தமது வணக்கங்களை மட்டுமல்லாமல் தம் அன்றாட வழக்கங்களையும் சந்திரக் காலண்டர் படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அவ்வசனம் சொல்லும் செய்தி.

உலகின் பெரும்பான்மை நாடுகளில் நடைமுறையிலிருந்து வரும் சூரியக் கணக்கின் படி அமைந்த காலண்டர் சுமார் 500 ஆண்டு காலமாக நடைமுறையிலிருந்து வருகின்றது. ஜார்ஜியன் காலண்டர் எனப்படும் இக் காலண்டர் பல மாற்றங்களுக்கும் திருத்தங்களுக்கும் உட்பட்டு இந்த வடிவத்தை அடைந்திருக்கின்றது.

மெசபடோமியா நாகரீகத்தின் காலத்தில் மார்ச் மாதம் 25ம் நாளை வருடத்தின் தொடக்க நாளாகக் கருதி அக்காலத்தவர் புத்தாண்டு கொண்டாடினர். மர்யம் (அலை) என்ற அன்னை மேரி அவர்கள், தான் கர்ப்பமுற்றிருப்பதாக அன்று தான் உணர்ந்தார் என்றார்கள். அவர்கள் பயன்படுத்திய காலண்டரில் 10 மாதங்கள் தாம் இருந்தன. ஜனவரியும், பிப்ரவரியும் அதில் இல்லை.

பிறகு ரோமர்களின் நாகரிகம் தலையெடுத்த போது அந்த இரண்டு மாதங்களையும் இணைத்தார்கள். அவை இரண்டும் எங்களின் கடவுள்களின் பெயர்கள் என்றார்கள். வருடத்துக்கு பனிரெண்டு மாதங்கள் என்று அமைத்தார்கள்.

*சூரியனின் ஓட்டத்தை அடிப்படையாக கொண்டது எங்கள் காலண்டர் என்றார்கள். சந்திரக் காலண்டரை உதறிவிட்டு மனிதன் சூரியக் காலண்டரை ஏற்றெடுத்துக் கொண்டான்.*

*தான் கண்டுபிடித்த சூரியக் காலண்டரில் குறைகள் வந்தபோதெல்லாம் அந்தக் குறைகளைச் சரி செய்திட அதில் மனிதன் மாற்றங்களைச் செய்தான். சூரியக் காலண்டரைத் தொடர்ந்து கடைபிடித்து வந்தார்கள்.*

*கடந்து ஐநூறு ஆண்டுகளாக அவன் பயன்படுத்தி வரும் காலண்டரில் பல திருத்தங்களைச் செய்த பின்னரும் கூட அது முழுமை அடையவில்லை. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ஒருநாள் மிச்சமாகி விடுகிறது. அதை பிப்ரவரி மாதத்துடன் இணைத்து அதை லீஃப் வருடம் என்கிறான்.*

*ஆக இந்தக் காலண்டரும் இறுதி வடிவம் பெறவில்லை. திருத்தம் தேவைப்படுகிற நிலையில்தான் இருக்கிறது.*

*இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால், அடிப்படையிலேயே மனிதன் ஒரு தவறு செய்துவிட்டான். சூரியன் நம் கண்ணில் தினமும் தோன்றி உதித்து தினமும் மறைகிறது. இதை வைத்து நேரம் என்ன என்று தான் கணிக்க முடியுமே தவிர நாள்களையோ மாதத்தையோ கணக்கிடமுடியாது. கணக்கிடக் கூடாது. இன்றும் கூட கிராமங்களில் வானத்தில் சூரியன் இருக்குமிடத்தை பார்த்து மணி (Time) சொல்லும் வழக்கம் இருக்கிறது. இது இயற்கையானது.*

*வளர்ந்து தேய்ந்து மாதம் ஒரு முறை ஒரு சுழற்சி என்றமைந்துள்ள சந்திரன்தான் மாதத்தைக் கணக்கிட சரியான கருவி. வானில் தெரியும் சந்திரனின் அளவை வைத்து இன்று பிறை (தேதி) என்ன என்று கூறிவிடமுடியும். இது இயற்கையானது.*

*இதை இப்படியும் சொல்லாம். உலகத்திலுள்ள எல்லாக் கடிகாரங்களும் ஒரு நாள் நின்று போய்விட்டன. காலண்டர் என்று எதுவும் இல்லாமல் போய் விட்டது என்றால், பகலில் வானில் தெரியும் சூரியனைப் பார்த்து நேரத்தையும், இரவில் தெரியும் சந்திரனைப் பார்த்து நாளையும் எளிதாகக் கூறிவிட முடியும்.*

*எனவே தான் இஸ்லாம் அன்றாட வணக்கமான ஐவேளைத் தொழுகைக்கான நேரங்களை சூரிய ஓட்டத்தின் அடிப்படையிலும் ஹஜ், ஸகாத், நோன்பு உள்ளிட்ட வருடாந்திர வணக்கங்களை சந்திர ஓட்டத்தின் அடிப்படையிலும் அமைத்துள்ளது. இதுவே இயற்கையானது.*

*எனவே சந்திரக் காலண்டரும் சூரியக் காலண்டரும் வேறு வேறானவை. வித்தியாசமானவை.*

*சந்திரக் காலண்டர் மனிதனுக்கு இறைவன் வழங்கியது. மனிதனுக்கு முன்னரே வந்தது. என்றும் மாறாதது. (லீஃப் வருடம் போன்ற) குறைகள் ஏதுமற்றது. இயற்கையானது.*

*சூரியக் காலண்டர் மனிதன் கண்டுபிடித்தது. காலத்தால் பிந்தையது. மாறிக் கொண்டே இருப்பது. குறைகள் உள்ளது. இயற்கைக்கு எதிரானது.*

*ஆதி மனிதர் தொட்டு எல்லாக் காலங்களிலும் சந்திரக் காலண்டர் நடைமுறையில் இருந்து வந்து கொண்டேயிருக்கிறது. இறைத்தூதர்கள் அனைவரும் பயன்படுத்தியது சந்திரக் காலண்டரே. ஏன்? எந்த ஜீஸஸ்-இன் பெயரால் சூரியக் காலண்டரை மனிதன் அறிமுகப்படுத்தினானோ அநத் ஈஸா (அலை) கூட சந்திரக் காலண்டரைத் தான் நடைமுறைப்படுத்தினார்கள்.*

*இறைவன் மனிதனுக்காக அவர்களின் நலன்களுக்காக வகுத்தளித்த விதிகளையும் நெறிகளையும் மீறும் போதெல்லாம் மனிதன் தோல்வியடைந்திருக்கிறான். தனக்கென ஒரு நாள்காட்டியைத் தேடிக் கொள்வதிலும் மனிதன் தோல்வியே கண்டான்.*

*இந்த விஷயம் தான் என்றில்லை. எல்லாவற்றிலும் இறைவனின் வழியை நோக்கித் திரும்புவதே மனிதனை வெற்றி பெற வைத்திடும். இதை விடுத்து தான்தோன்றித்தனமான ஒரு வழியை மனிதன் தனக்கென உருவாக்கிக் கொண்டால் அதை வைத்து கொஞ்ச நாளைக்கு 'என்னைப் பார் என் கண்டுபிடிப்பைப் பார்' என மார்தட்டிக் கொள்ளலாம். ஆனால் முழுமதிபோல் உண்மை வெளிவரும்போது தனக்குத் தானே அநீதி இழைத்துக் கொண்டதாக மனிதன் உணருவான்.*

*500 ஆண்டுகால தவறுகளிலிருந்து மட்டுமல்ல. ஆண்டாண்டு கால அநீதிகளிலிருந்தும் மனிதனைக் காப்பாற்றி கடைத்தேற்றும் கொள்கை இஸ்லாம். அதை ஏற்கும் வழி திறந்தேயிருக்கிறது அனைவருக்கும்.*




45 وَاسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ ۚ وَاِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَ ۙ

**வசனம் -45**

**பொறுமை மற்றும் தொழுகையின் மூலம் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள் நிச்சயமாக அது (அல்லாஹ்வுக்கு) பணிந்து நடப்போரைத் தவிர மற்றவர்களுக்கு (பெரும்) பாரமாகவே இருக்கும்.**

46 الَّذِيْنَ يَظُنُّوْنَ اَنَّهُمْ مُّلٰقُوْا رَبِّهِمْ وَاَنَّهُمْ اِلَيْهِ رٰجِعُوْنَ ۠

**வசனம் -46**

**அவர்கள் தம் இறைவனைச் சந்திப்போம் என்றும் அவனிடமே திருப்பிச் செல்வோம் என்றும் உறுதியாக நம்புவார்கள்.**

இவ்விருவசனங்களிலும் பனீ இஸ்ராயீல்களை நோக்கியே பேசப்பட்டாலும் இங்கே கூறப்படும் உபதேசங்கள் அனைவருக்கும் பொதுவானதே. மரணத்துக்கு பின்னர் வரும் மறுமையின் வாழ்க்கையை லட்சியமாகக் கொண்டு உழைத்திடும் நல்லடியார்கள் பொறுமை, தொழுகை இவற்றை முறையாகக் கடைப்பிடித்து அதன்மூலம் தன்னிடம் உதவி தேட வேண்டும் என அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

**சப்ர் - பொறுமை**

அருள்மறை குர்ஆனில் எல்லாம் வல்ல அல்லாஹ் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பொறுமையின் அவசியம் பற்றி வலியுறுத்துகிறான்.

ஹழ்ரத் உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: “பொறுமை இரு வகைப்படும். 1. சோதனையின் போது பொறுமை காப்பது. இது அழகிய பொறுமை. 2. அல்லாஹ்வால் தடை செய்யப்பட்டவற்றைக் கைவிடுவதால் ஏற்படும்

கஷ்டங்களில் பொறுமை காப்பது. இது மிக அழகிய பொறுமை.''

**(நூல்: இப்னு கதீர்)**

பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவீ அவர்கள் திருக்குர்ஆனில் பொறுமையைப் பற்றிப் பேசுகின்ற வசனங்களை ஆய்வு செய்து (அஸ்ஸப்ருஃபில் குர்ஆன்) திருக்குர்ஆனில் பொறுமை என்றொரு நூலை எழுதியுள்ளார்கள். அதில் திருமறை வசனங்களின் ஆதாரத்துடன் பொறுமை ஆறு வகைப்படும் என வரிசைப்படுத்தியுள்ளார்கள்.

1. **உலகத்தின் சோதனைகளை தாங்கிக் கொண்டு பொறுமையுடனிருப்பது.**
2. **மனோ இச்சைகளை அடக்கி பொறுமையுடனிருப்பது.**
3. **அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடப்பதால் ஏற்படும் இழப்புகளை பொறுமையுடன் எதிர் கொள்வது.**
4. **அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைத்திடும் தூய பணியில் ஏற்படும் சங்கடங்களை பொறுமையுடன் ஏற்பது.**
5. **போர்க்களத்தில் நிலைகுலையாமல் பொறுமையுடன் நிற்பது.**
6. **சமூக வாழ்விலும் குடும்பத்திலும் ஏற்படும் இன்னல்களில் பொறுமையுடன் சகிப்புத் தன்மையுடன் இருப்பது.**

**(நூல்: அஸ்ஸப்ரு ஃபில்குர்ஆன்)**

பொறுமை நபிமார்கள் மற்றும் நல்லடியார்களின் உயர் குணமாகும். ஹழ்ரத் அலீ(ரழி) அவர்கள் கூறினார்கள்: “உடலுக்கு தலை எவ்வளவு முக்கியமோ அது போல் ஈமானுக்கு பொறுமை அவசியம்.'' அறிஞர் திப்ரீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: “ஹழ்ரத் அலீ (ரழி) அவர்கள் கூறியது மிகச்சரியானதே. ஏனெனில் ஈமான் என்பது ஓரிறை நம்பிக்கையை உள்ளத்தால் விளங்கி நாவினால் உறுதியாக மொழிந்து உறுப்புக்கள் மூலம் செயல்படுத்துவதாகும். உறுப்புக்களின் செயல் பாட்டில் பொறுமை இல்லையெனில் அதை ஈமான் எனக் கூற இயலாது. எனவே அல்லாஹ் காட்டிய வழியில் நின்று செயல்படும் போது அதில் பொறுமை காப்பது மனித உடலுக்கு தலை போல் மிக அவசியமானது. தலை இன்றி உடல் முழுமை பெறாது. பொறுமை இன்றி ஈமான் முழுமை பெறாது.''

**(நூல்: குர்த்துபீ)**

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள பொறுமை என்பதன் பொருள் நோன்பு ஆகும் என ஹழ்ரத் முஜாஹித் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். இதனால் தான் (நோன்பின் மாதமான) ரமழான் மாதத்திற்கு பொறுமையின் மாதம் என்றொரு பெயரும் கூறப்படுகிறது. எனவே இவ்வசனத்தில் தொழுகையும் நோன்பும் வலியுறுத்தப்படுகின்றன. நோன்பு நோற்றும் தொழுகையை நிறைவேற்றியும் என்னிடம் உதவி தேடுங்கள் என்பதே இதன் பொருள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் மனிதன் செய்யும் நற்செயல்களின் கூலியை வரையறுத்துவிட்டான். ஒருவர் ஒரு நன்மை செய்தால் அதுபோல் பத்துமடங்கு அவருக்கு கூலி உண்டு என்று (6:160 வசனத்தில்) கூறிய அல்லாஹ். தம் செல்வங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவளிப்போருக்கு எழுநூறு மடங்கு நன்மை உண்டு என்று (2:261 வசனத்தில்) கூறிய அல்லாஹ் பொறுமையாளர் களுக்கு கணக்கின்றி கூலி வழங்கப்படும் என்று (39:10வசனத்தில்) கூறியுள்ளான்.

39:10வது வசனத்தில் கூறப்பட்டுள்ள அஸ்ஸாபிரூன் (பொறுமையாளர்கள்) என்பதன் பொருள் நோன்பாளிகள் என்றும் விளக்கமளிக்கப் பட்டுள்ளது. ஏனெனில் “நோன்பு எனக்காகவே நோற்கப்படுகிறது. நானே அதற்கு கூலி தருவேன்'' என்று அல்லாஹ் கூறுவதாக வந்துள்ள ஹதீஸிலும் (புகாரீ எண்1904) நோன்பின் கூலி எவ்வளவு என்ற அளவை அல்லாஹ் கூறவில்லை.

**(நூல்: குர்த்துபீ)**

**அஸ் ஸலாத் – தொழுகை**

இஸ்லாம் வலியுறுத்தும் கடமைகளில் மிக முக்கியமானது தொழுகை. இதன் மூலம் இறைவனின் அன்பைப் பெற்று மறுமை லட்சியத்தை அடையமுடியும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒரு அடியார் தன் இறைவனுடன் மிகவும் நெருங்கிய தொடர்பில் இருப்பது ஸஜ்தாவின் நிலையில் தான். எனவே நீங்கள் (ஸஜ்தாவில்) அதிகமாக துஆ செய்யுங்கள்.''

**(நூல்: முஸ்லிம்)**

“இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு ஏதேனும் ஒரு பிரச்னையால் கஷ்டம் ஏற்பட்டால் உடனே தொழுகைக்கு விரைந்து செல்வார்கள்”

**(நூல்:அபூதாவூத்)**

ஹழ்ரத் அலீ(ரழி) அவர்கள் கூறினார்கள்: பத்ருப் போருக்கு முந்தைய இரவில் அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தவிர மற்ற அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மட்டும் பொழுது விடியும் வரை தொழுது கொண்டும் துஆ செய்து கொண்டும் இருந்தார்கள். ஹழ்ரத் ஹுதைஃபா (ரழி) கூறினார்கள். அகழ்ப்போர் நடந்த இரவில் நான் அண்ணல் (ஸல்) அவர்களிடம் வந்தேன். அவர்கள் ஒரு போர்வையால் மூடிக்கொண்டு தொழுது கொண்டிருந்தார்கள்.

**(நூல்:இப்னு கதீர்)**

ஹழ்ரத் அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் வயிற்றுவலி காரணமாகபடுத்திருந்தார்கள். அதனைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் என்ன வயிறு வலிக்கிறதா? எனக் கேட்டார்கள். ஆம் என்றார் அபூ ஹுரைரா (ரழி) அவர்கள். அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள். எழுந்து தொழுவீராக. ஏனெனில் தொழுகை ஒரு மருந்தாகும்.

**(நூல்: இப்னு ஜரீர், இப்னு கதீர்)**

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் ஒரு பயணத்தில் இருந்தபோது அவர்களின் சகோதரர் குஸம் பின் அப்பாஸ் (ரழி) அவர்கள் இறந்துவிட்டார் என்ற செய்தி அவர்களிடம் கூறப்பட்டது. உடனே இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் (நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். அவனிடமே திரும்பிச் செல்வோம்) என்று கூறிவிட்டு பாதையிலிருந்து சற்று விலகி நின்று தம் வாகனத்தை மண்டியிட வைத்துவிட்டு இரண்டு ரத்அத்துகள் தொழுதார்கள். அவ்விரண்டிலும் அத்தஹிய்யாத் அமர்வை நீட்டினார்கள். பின்னர் எழுந்து பொறுமை, தொழுகை இவற்றின் மூலம் உதவி தேடுங்கள் என்ற (2:45) வசனத்தை ஓதிக் கொண்டே தன் வாகனத்தை நோக்கி நடந்தார்கள்.

**(நூல்: இப்னு கதீர்)**

தொழுகை, பொறுமை, இவ்விரண்டும் அல்லாஹ்வின் அன்பைப் பெறவும் மறுமை இலட்சியத்தை அடையவும் மிகவும் உறுதுணையாக இருக்கும். எனவே அவ்விரண்டின் மூலம் உதவி தேட வேண்டும் என்பதையே மேற்கண்ட சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

> *தொழுகை, பொறுமை, இவ்விரண்டும் அல்லாஹ்வின் அன்பைப் பெறவும் மறுமை இலட்சியத்தை அடையவும் மிகவும் உறுதுணையாக இருக்கும். எனவே அவ்விரண்டின் மூலம் உதவி தேட வேண்டும் என்பதையே மேற்கண்ட சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.*

**இன்னஹா – நிச்சயமாக அது**

2:45 வசனத்திலுள்ள இன்னஹா - “நிச்சயமாக அது” என்ற வார்த்தை தொழுகையைக் குறிக்கும். நோன்பை விட தொழுகை தான் மிக பாரமானது. ஏனெனில் நோன்பில் சாப்பிடுவது, அருந்துவது, இன்பம் துய்ப்பது ஆகிய இச்சைகள் அடக்கப்படு கின்றன. ஆனால் தொழுகையில் அம்மூன்று இச்சை கள் போக நடப்பது, அங்குமிங்கும் பார்ப்பது பேசுவது உள்ளிட்ட பல இச்சைகள் அடக்கப் படுகின்றன. ஒருவர் தொழுகையில் இருக்கும் போது அவரின் அனைத்து உறுப்புக் களும் எல்லா வித இச்சைகளை விட்டும் தடுக்கப்படுகிறது. எனவே நோன்பைவிட தொழுகையை நிறை வேற்றுவதே மிக பாரமானது.

மேலும் (கட்டுப்பாடு) பொறுமை என்பது தொழுகையின் ஓர் அங்கமாகும். எனவே அவ் விரண்டும் (தொழுகையும் பொறுமையும்) மிக பாரமானது என்று கூறுவதற்கு பதிலாக அது என்று ஒருமையில் கூறப்பட்டுள்ளது.

**(நூல்: குர்த்துபீ)**

**பணிந்து நடப்போர்**

சுப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: பணிவு என்றால் என்ன என்று நான் அஃமஷ் (ரஹ்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு ஸவ்ரீ (ரஹ்) அவர்களே பணிவு என்றால்

என்னவென்று தெரியாமல் மக்களை வழி நடத்தும் இமாமாக ஆகிவிட விரும்புகிறீர்களா? நான் இப்றாஹீம் அந்நஹயீ (ரஹ்) அவர்களிடம் பணிவு என்றால் என்ன என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் அஃமஷ் அவர்களே பணிவு (ஹுஷூஃ) என்றால் என்னவென்று தெரியாமல் மக்களை வழிநடத்தும் இமாமாக ஆக விரும்புகிறீகளா? என என்னிடம் கேட்டுவிட்டு கடினமான உணவை உண்பதும் கடினமான ஆடைகளை அணிவதும் தலை கவிழ்ந்திருப்பதும் பணிவு அல்ல. உரிமை களைப் பெறுவதில் உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் சமம்தான் என நீ கருதுவதே பணிவு ஆகும். அல்லாஹ் உன் மீது விதித்துள்ள கடமைகளை பணிந்து நிறைவேற்றுவது பணிவு ஆகும் என்றார்கள் இப்றாஹீம் அந்நஹயீ (ரஹ்) அவர்கள்.

ஒரு இளைஞன் தன் தலையைத் தாழ்த்திக் கொண்டிருந்ததைக் கண்ட உமர் (ரழி) அவர்கள் அவரிடம் இளைஞனே! தலையை நிமிர்த்து. இந்த பணிவு இதயத்தில் உள்ள பணிவை அதிகமாக்கி விடாது என்றார்கள்.

ஹழ்ரத் அலீ(ரழி) அவர்கள் கூறினார்கள்: தம் தொழுகையில் பணிவுடன் இருக்கின்ற இறை நம்பிக்கையாளர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். (23:1,2) எனவே தன் உள்ளத்தில் உள்ளதைவிட அதிக அளவு பணிவை ஒருவன் வெளிக்காட்டினால் அவன் மேலும் மேலும் நயவஞ்சகத்தையே வெளிப் படுத்துகிறான்.

ஸஹ்ல் பின் அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள் : திருக்குர்ஆனில் (39:23 வசனத்தில்) அல்லாஹ் கூறுகிறான், “அல்லாஹ் தான் அழகிய செய்தியை வேதமாக இறக்கினான். அதன் எல்லாப் பகுதிகளும் ஒரே சீராக உள்ளன. அது திரும்பத் திரும்ப ஓதப்படுகிறது. (அதைக் கேட்டால்) தம் இறை வனுக்குப் பணிந்து நடப்போரின் தோல் (ரோமங்)கள் சிலிர்த்து விடுகின்றன.” (39:23)

எனவே ஒருவரின் தோல் ரோமங்கள் சிலிர்க்கும் வரை அவர் பணிவுள்ளவராக ஆக முடியாது.

**(நூல்: குர்த்துபீ)**

இந்த 2:45 வசனத்திற்கு ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) அவர்கள் தரும் விளக்கம்: ‘இன்னஹா நிச்சயமாக அது’ என்ற வார்த்தை தஃவத் எனும் அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைக்கும் பணியைத் தான் குறிக்கிறது என்று கருத மிகையான வாய்ப்புள்ளது. அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைத்திடும் தஃவத் பணி அல்லாஹ்வுக்குப் பணிந்து நடக்கின்ற அவனை மறுமையில் சந்திப்போம் என்று உறுதியாக நம்புகின்றவர்களுக்குத் தவிர மற்றவர் களுக்கு மிக பாரமானது தான்.

பொறுமையின் மூலம் உதவி தேடுதல் என்பது குர்ஆனில் திரும்பத்திரும்ப வலியுறுத்தப் பட்டுள்ளது. அனைத்து கஷ்டங் களையும் எதிர்கொள்ள மிக அவசிய மான முன்னேற்பாட்டுப் பொருள் பொறுமை தான். இந்த உண்மை மார்க்கத்தை ஏற்பதால் ஏற்படும் இழப்புக்களை பொறுமையுடன் சகித்திட வேண்டும். உலக பயன்களையும் சம்பாத்தியங்களை யும் தலைமைத் துவத்தையும் இழக்க நேரிடுவதும் கூட தூய மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதால் ஏற்படும் முக்கிய இழப்பு ஆகும். (இந்த இழப்புக்களை சகிப்புத்தன்மை யுடன் ஏற்பது அல்லாஹ்வை பணிந்து நடப்ப வர்களுக்கு தவிர மற்றவர்களுக்கு மிக பாரமானது.)

**(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)**

*இந்த 2:45 வசனத்திற்கு ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) அவர்கள் தரும் விளக்கம்: ‘இன்னஹா நிச்சயமாக அது’ என்ற வார்த்தை தஃவத் எனும் அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைக்கும் பணியைத் தான் குறிக்கிறது என்று கருத மிகையான வாய்ப்புள்ளது. அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைத்திடும் தஃவத் பணி அல்லாஹ்வுக்குப் பணிந்து நடக்கின்ற அவனை மறுமையில் சந்திப்போம் என்று உறுதியாக நம்புகின்றவர்களுக்குத் தவிர மற்றவர் களுக்கு மிக பாரமானது தான்.*

**வசனம் 2:46 ன் விளக்கம்**

இது முந்தைய வசனத்தின் தொடர்ச்சிதான். அல்லாஹ்வை நாம் சந்திப்போம். அவனிடம் திரும்பிச் செல்வோம் என்பதில் உறுதியான நம்பிக்கை கொள்கின்ற எவரும் நற்செயல் புரிவதை பாரமாகக் கருதமாட்டார். மறுமைச் சிந்தனை மட்டுமே ஒரு மனிதனை நன்மை செய்யத் தூண்டும் உந்து சக்தியாக இருக்கிறது.

நற்பணிகள் ஆற்றுவதால் ஏற்படும் இடர்பாடு களை இன்முகத்துடன் ஏற்றிடும் மனோபலத்தையும் வழங்குகிறது. எனவே நன்மையை ஏவி தீமையைத் தடுத்திடும் பணியில் ஈடுபடுவோருக்கு தொழுகை, பொறுமை, மறுமை நம்பிக்கை ஆகியன அவசியப் பண்புகளாகும்.

இந்த வசனத்தில் உறுதியாக நம்புவார்கள் என்பதைக் குறிக்க "யழுன்னூன" என்ற வார்த்தை கூறப்பட்டுள்ளது. இதன் நேரடியான பொருள் "கருதுவார்கள்" என்பதுதான். எனினும் திருக்குர் ஆனிலும் அரபுக்களின் பேச்சுவழக்கிலும் உறுதியைக் குறிக்க இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

ஹஜ்ரத் முஜாஹித் (ரஹ்) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ள 'ழன்னு' (எண்ணுதல்) எனும் (வேர்ச் சொல்லில் இருந்து வரும்) சொல் இடம் பெறும் வசனங்களில் உறுதி என்றே அதற்கு பொருள்.

மறுமை நாளில் ஒரு அடியானிடம் அல்லாஹ் "உனக்கு நான் மனைவியைத் தரவில்லையா? நான் உன்னை கண்ணியத்துக்குரியவனாக வாழவைக்க வில்லையா? குதிரைகளையும், ஒட்டங்களையும் உனக்கு வசப்படுத்தி தரவில்லையா? செல்வமும் செல்வாக்கும் உள்ளவனாக வாழவைக்க வில்லையா?" என்று கேட்பான். அதற்கு அம்மனிதன் "ஆம்" என்பான். அப்போது அல்லாஹ் "என்னை சந்திப்பாய் என்று நீ நம்பினாயா?" என்று அவனிடம் கேட்பான். அம் மனிதன் "இல்லை" என்பான். அப்போது அல்லாஹ் "உலகில் நீ என்னை மறந்தது போல் இன்று நான் உன்னை மறந்துவிடுகிறேன்" என்று கூறுவான் என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

**(நூல் : முஸ்லிம்)**

இந்த நபி மொழியில் நம்பினாயா? என்பதற்கு ழன்னு - கருதுதல் எனும் வேர்ச்சொல்லில் இருந்து வரும் ழனன்த்த என்ற வார்த்தையே கூறப்பட்டுள்ளது.

**(நூல்: இப்னு கதீர்)**

2:40 வசனம் முதல் 2:123 வசனம் வரை அஹ்லுல் கிதாப் எனும் வேதம் கொடுக்கப்பட்ட (யூத, கிறிஸ்தவ) சமுதாயம் பற்றியே பேசப்படுகிறது என்று முன்பே கூறியிருந்தோம். எனவே இங்கே கூறப்படும் உபதேசங்கள் நேரடியாக வேதக்காரர்களுக்கே கூறப்பட்டிருப்பினும் அவர்களை முன்வைத்து அனைவருக்கும் கூறப்பட்ட உபதேசமாகவே அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

யூதர்கள் இந்த உண்மை மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் வாழ்ந்து கொண்டி ருந்த மதீனாவிலேயே எளிதாகவும், இலகுவாகவும் அவர்களை வந்தடைந்த ஏகத்துவ தூய கோட்பாட்டை ஆரத்தழுவிட வேண்டும். மற்ற மக்களையும் அவர்கள் ஈமானை நோக்கி அழைத்திட வேண்டும். இதற்காக அவர்களுக்கு (ஏற்படவிருக்கும் தலைமைப் பதவி பறிபோகுதல் உள்ளிட்ட இழப்புக்களைத் தாங்கிட) துணிச்சலும் தைரியமும், மனோபலமும் தேவை. அந்த மனோபலத்தைப் பெற்றிட பொறுமையின் மூலமும் தொழுகையின் மூலமும் அல்லாஹ்விடம் உதவி தேடிக் கொள்ள வேண்டும் என்று யூதர்களிடம் கூறுவதே இவ்வசனத்தின் கருத்து

**(ஃபீழிலாலில் குர்ஆன்)**

**- தொடரும், இன்ஷா அல்லாஹ்**


# தமிழன் தொலைக்காட்சியில் தரீக்குல் குர் ஆன்

**வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி இல்யாஸ் ரியாஜி-யின் திருக்குர் ஆன்விரிவுரை தமிழன் தொலைக்காட்சி யில் ஒளிபரப்பாகிறது.**

**வாரந் தோறும் செவ்வாய்க் கிழமை இரவு 10.00 மணி முதல் 10.30 வரை ஒளிபரப் பாகும் இந்நிகழ்ச்சியை RSD நிறுவனம் நடத்துகிறது. காணத் தவறாதீர்கள்!**

**இது வரை ஒளிபரப்பான உரைகள் குறுந் தகடுகளாகவும் (DVD) கிடைக்கும்**

தொடர்புகளுக்கு : **காயல் தர்வேஷ்**
**9841898044**

## நபி மொழி விளக்கம் –30

# விருப்பும் வெறுப்பும் அல்லாஹ்வுக்காக

அண்ணல் நபி(ஸல்) கூறுகினார்கள்: -

**எந்த முஸ்லிமுக்கும் தன் (கொள்கைச்) சகோதரனை மூன்று இரவுகளுக்கும் மேலாக வெறுப்பதற்கு அனுமதியில்லை. இருவரும் சந்திக்கும்போது ஒருவரையொருவர் புறக்கணிக் கக் கூடாது. முதலில் முகமன் கூறுபவரே அவ்விருவரில் சிறந்தவர்.**

عن ابى أيوب الأنصارى ، أن رسول الله صلى الله عليه وسلم قال : لايحل لمسلم أن يهجر أخاه فوق ثلاث ليال ، يلتقيان فيُعرض هذا ويعرض هذا . وخيرهما الذى يبدأ بالسلام

*(அறிவிப்பாளர் : அபூஅய்யூபில்அன்சாரி(ரழி)*
*நூல்: புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மதி)*

முஸ்லிம்கள் அனைவரும் ஒருவர் மற்றவருக்குச் சகோதரர். அவர்கள் தமக்கிடையே அன்பை பரிமாறிக் கொள்ள வேண்டும். பாசத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். சந்திக்கும் போது முகமலர்ச்சியுடன் சந்திக்க வேண்டும். அறிமுகமானவருக்கும், அறிமுகமில்லாதவருக்கும் அன்புடன் ஸலாம் (முகமன்) கூறிக் கொள்ள வேண்டும். இவை அல்லாஹ்வும் அவனின் திருத்தூதருக்கும் நமக்கிட்ட கட்டளை.

இவை நற்பண்புகள் வளர்ந்திட வழிவகுக்கும். இதற்கு மாறாக இறுக்கமான கடுத்த முகத்துடன் சமூகத்தில் வலம் வருவதுதான் பெருமை என்று கருதிக் கொண்டு அதற்கு 'கம்பீரம்' என்றொர பெயரை போலித்தனமாக சூட்டிக் கொள்வது அறியாமை மட்டுமல்ல. இம்மையிலோ மறுமையிலோ எந்த நற்பலனையும் தராத வீண் வேலையும் கூட.

எந்த இரண்டு மனிதர்களும் ஒன்று போல் சிந்திப்பதில்லை. கருத்து வேறுபாடும் கருத்து முரண்பாடும் சமூகத்தில் இயல்பானவை. அது வெறுப்பாக மாறக்கூடாது முரண்பட்ட கருத்துடையவர்கள் மீது வெறுப்பு ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. அது மனிதனின் பலஹீனம் என்பதை நன்கறிவார்கள் நம்மைப் படைத்த அல்லாஹ்வும் அவனின் திருத்தூதரும்.

அதனால் தான் "ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை வெறுக்கவே கூடாது" என்று கூறவில்லை. மாறாக உள்ளத்தில் ஏற்படும் அந்த வெறுப்பை மூன்று இரவுகளுக்கு மேல் நீடிக்கவிடக் கூடாது என்று கூறினார்கள். அவ்விருவரில் யார் முதலில் வெறுப்பை மறந்து, துறந்து அன்பின் தூதுவனாகத் திகழும் "அஸ்ஸலாமு அலைக்கும்" என்ற முகமன்ஐ கூறுகிறாரோ அவரே சிறந்தவர் என்றும் கூறினார்கள்.

இந்த நபிமொழிக்கு விளக்கம் தந்த பேரறிஞர் அந்நவவி(ரஹ்) கூறுகின்றார். மூன்று இரவுகளுக்கு மேல் வெறுக்கக் கூடாது என்பதிலிருந்து அதிகப் பட்சம் மூன்று இரவுகள் வரை ஒருவர் மீதான வெறுப்பு நீடித்திருந்தால் அது மன்னிக்கப்படும் என விளங்க முடிகிறது. கோபமும் இன்ன பிற தீய பண்புகளும் மனித இயல்பில் கலந்தவை. (தன்னுடைய முஸ்லிம்) சகோதரன் மீது வந்த அந்தக் கோபம் உடனடியாக அகன்று விட வேண்டும் என எதிர்பார்ப்பது மனித இயல்புக்கு எதிரானது. அதற்கொரு அவகாசம் தேவைப்படுகிறது. எனவே அதை நீக்கிக் கொள்ள

அல்லாஹ் வழங்கும் வாய்ப்புத்தான் அந்த மூன்று இரவுகள்.

ஸலாம் கூறி பேசத் தொடங்குவதற்கான அவகாசம் தான் அந்த மூன்று இரவுகள். இருவரில் ஒருவர் ஸலாம் கூறி (மூன்று நாட்களுக்குள்ளாகவே ) பேச முற்பட்டால் ஸலாமுக்கு பதில் கூறாமலிருப் பதும் பேச முற்படுவதைத் தவிர்ப்பதும் அறவே கூடாது என்று ஏராளமான அறிஞர்கள் விளக்கமளித் துள்ளனர்.

"வெறுப்பதற்கு அனுமதியில்லை"என்று ஹதீசில் கூறப்பட்டுள்ளது. வெறுப்பது என்பதன் பொருள் அவரிடம் பேசுவதையும் அவருக்கு ஸலாம் கூறுவதையும் தவிர்ப்பதாகும். எனவே யாரை வெறுத்தாரோ அவருக்கு ஸலாம் மட்டும் கூறிக் கொண்டு அவசியமான நேரத்தில் கூட பேசுவதை வேண்டுமென்றே தவிர்த்துக் கொண்டிருந்தால் அதுவும் பாவம்தான். இருவருக்குமிடையே ஏற் கெனவே நிலவிவந்த நல்லுறவு மீண்டும் ஏற்பட வேண்டும் என்று விளக்கமளித்துள்ளார்கள் இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள்.

"இருவரும் சந்தித்துக் கொள்ளும் போது ஒருவரையொருவர் புறக்கணிக்கக் கூடாது" என்கிறது ஹதீசின் வாக்கியம்.

இருவரும் சந்தித்துக் கொள்ளும் போது ஸலாமும் பதில் ஸலாமும் பரிமாறிக் கொள்ளப் படுகிறது. ஆனால் புறக்கணிப்பும் வெறுப்பும் தொடர்கின்றன என்றால் அதுவும் பாவம்தான். ஏனெனில் வெறுப்பு நீங்கி அன்பு மலர்ந்து அதன் விளைவாக அந்த சலாம் கூறப்படவில்லை. உள்ளத் தில் வெறுப்பும் நாவில் சலாமும் இருப்பது அகமும், புறமும் முரண்பட்டிருப்பதைக் காட்டுகிறது. அகமும், புறமும் நேரெதிராக இருப்பது முஸ்லிமின் பண்பல்ல.

ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமை மூன்று இரவுகளுக்கு மேல் வெறுக்கக்கூடாது என்று நபி மொழியில் கூறப்பட்டி ருப்பது உலகக் காரியங்களால் ஏற்படும் வெறுப்பை மட்டுமே குறிக்கும்.

ஒருவர் செய்யும் குற்றச் செயல்களின் காரணமாகவோ அவரிடமுள்ள ஏதேனுமொரு பாவத்தின் காரணமாகவோ அவரை மூன்று நாட்களுக்கு மேல் வெறுத்தால் அது பாவமல்ல. ஏனெனில் இது உலகக் காரியங்களால் ஏற்படும் வெறுப்பல்ல. அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று மீறப்பட்டதால் ஏற்பட்ட வெறுப்பு.

தபூக் யுத்தத்தில் பங்கேற்க வாய்ப்பிருந்தும் அதில் பங்கேற்காத நபித் தோழர்களான கஅப்பின் மாலிக் (ரழி) ஹிலால் பின் உமையா (ரழி) முராராபின் ரபீவு(ரழி) ஆகிய மூவரிடமும் ஸஹாபாக்கள் யாரும் பேசக் கூடாது என்று நபி - ஸல் கட்டளையிட்டி ருந்தார்கள். சுமார் ஐம்பது நாள் வரையாரும் அம்மூவரிடமும் பேசவில்லை. ஸலாம் கூறவில்லை. இது உலகக் காரியங்களால் ஏற்பட்ட வெறுப்பல்ல. ஜிஹாதுக்கு வரவில்லை என்பதால் ஏற்பட்ட வெறுப்பு என்கிறார் அறிஞர் இப்னு அப்தில் பிர்.

ஒருவரிடம் கலந்துறவாடுவதால் நம்முடைய மார்க்கச் செயல்பாடுகளுக்கோ உலக விவகாரங்களுக் கோ ஏதேனும் இடையூறு ஏற்படும் என்றிருந்தால் நீண்ட காலத்துக்கு அம்மனிதரைச் சந்திப்பதைத் தவிர்ப்பது அனுமதிக்கப்பட்டது என்கின்றனர் மார்க்க அறிஞர்கள். ஏனெனில் தீய கலந்துறவாடலை விட அழகிய முறையில் ஒதுங்கிவிடுவது சிறந்தது.

சுருக்கச் சொன்னால், நம் சொந்தக் காரணங் களுக்காக ஒருவர் மீது வெறுப்பு ஏற்பட்டால் மூன்று நாட்களுக்குள்ளாக அந்த வெறுப்பை அகற்றி அன்பைப் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

ஒருவரிடமுள்ள தீய செயலின் காரணமாக அவர்மீது வெறுப்பைக் காட்டினால் அல்லது நாம் அவரை வெறுப்பதாக அவர் உணர்ந்தால் அவர் திருந்துவதற்கு வாய்ப்புள்ளது என்பதற்காக வெறுத்தால் அந்த வெறுப்பு மூன்று நாட்களை விட அதிகமாக நீடிப்பது தவறல்ல.

தபூக் போரில் பங்கேற்காத மூன்று நபித் தோழர்களை நபி-ஸல் அவர்கள் வெறுத்தார்கள். (காண்க: புஹாரீ 4677). தன் மனைவிமார்களிடம் நபி-ஸல் - அவர்கள் ஒரு மாத காலம் பேசாமலிருந்தார் (காண்க: புஹாரீ 5289). அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் தன் சகோதரியான அஸ்மா (ரழி) வின் மகன் அப்துல்லாஹ்பின் சுபைர் (ரழி) விடம் பேசாமலிருந் தார்கள் (காண்க:புஹாரீ 6073).

இந்த வெறுப்புக்களெல்லாம் தடை செய்யப் பட்ட வெறுப்புக்களல்ல. ஒழுக்கப் பயிற்சியின் ஒரு பகுதியாகவே இவை உள்ளன.

**(முஸ்லிம் என்ற நூலின் விரிவுரையான தக்மிலா என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டது)**

**- இல்யாஸ் ரியாஜி**

# நாம் பிரிந்து விட வேண்டாம்




## ஒத்த கருத்துள்ள விஷயங்களில் பரஸ்பர ஒத்துழைப்பு வேண்டும்!

இஸ்லாமிய எழுச்சிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருப்போரில் சிலர் இஸ்லாமிய பணிகளில் ஈடுபாடு காட்டிக் கொண்டிருக்கும் சிலர் கருத்து வேறு பாட்டுக்குரிய பிரச்சனைகளில் தீவிர அக்கறை காட்டுகின்றனர். இரவு பகலாக இதில் கவனம் செலுத்துகின்றனர். இதற்காக ஆராய்ச்சிகளை நடத்துகின்றனர். போதனை வகுப்புகள் விவாதக் களங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. சூடு பறக்கும் சொல் யுத்தங்களை அரங்கேறுகின்றன.

கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்சனைகளில் ஆராய்ச்சியே நடைபெறக்கூடாது என்று நான் கூறவில்லை. இரண்டு ஆராய்ச்சிகள் அல்லது பல ஆராய்ச்சிகளில் எது சரியானது என்று தேர்ந் தெடுப்பதில் அறிவார்ந்த தேடல் நடப்பதை நான் வெறுக்கவில்லை. நேர்மைத் திறன், ஒழுக்கம், சட்ட அறிவு ஆகிவற்றை ஒருங்கே பெற்ற அறிவுஜீவிகள் தகுதியுள்ள கல்வியாளர்கள் இந்தத் தேடலில் ஈடுபடலாம்.

ஆனால் இதுவே நமது நேரங்களையெல்லாம் விழுங்கி விடுகின்ற பெரும் பிரச்சினையாக, நம் சக்தி முழுவதையும் அதற்காகவே செலவிடுவதாக, நாம் பெற்ற கல்வியின் இறுதிலட்சியமாகக் கருதப்படு வதையே நான் வெறுக்கிறேன்.

நமது ஆற்றலும் வலிமையும் கல்வியும் நேரமும் நமது தீன் கலாச்சாரம் நாகரிகம் ஆகியவற்றின் சிதைந்த பகுதிகளை கட்டமைப்பதை நோக்கித் திருப்பப்பட வேண்டும் என்று தான் நான் கூறுகிறேன். அறவே கருத்து வேறுபாடு இல்லாமல் முடிவு

செய்யப்பட்டுவிட்ட விஷயங்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

முஸ்லிம்கள் எல்லோரும் தாடி வளர்ப்பதை மன விருப்பத்துடன் செய்திட வேண்டும் என்று விரும்புகிறேன். இதன் மூலம் அவர்கள் “சுனனுல் பித்ரா” எனப்படும் இயற்கை வழிமுறைகளில் ஒன்றுக்கு உயிரூட்டுகின்றனர். தாடி வளர்ப்பது கட்டாயக்கடமை என்று வலியுறுத்தியுள்ள இமாம்களின் கருத்தில் நமக்கு மாற்றுக் கருத்து இருப்பினும் கூட எல்லோரும் தாடி வைத்திருப்பதால் இது பற்றி வீண் விவாதம் தவிர்க்கப்படுகிறது. இதர சமுதாயத்தவர்களிடமிருந்து வேறுபாட்டு தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள முடிகிறது. தாடிதான் இஸ்லாத்தின் அதிமுக்கிய அடையாளம் என்று கூறி அது பற்றிய விவாதங்களை நடத்திக் கொண்டிருப்போருக்கு (மேலும் விவாதங்கள் செய்திட) வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

தாடி வளர்க்காதவன் பெரும்பாவி என்று கூறுவதையும் அது பற்றிய விவாதங்களில் மூழ்கு வதையும் நான் விரும்பவில்லை. இது சமுதாயத்தைச் சூழ்ந்துள்ள பெரும் சோதனை.

எனவே தான் நம்பிக்கைக்குரிய சில இளைஞர் கள் என்னிடம் வந்து, “கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்சனைகளில் அதி தீவிர அக்கறை எடுத்துக் கொள்ளும் ஒருவர், தாடி வளர்ப்பது கட்டாயக் கடமை. அதில் சிறிதளவு குறைந்தாலும் அது ஹராம் என்பது பற்றி ஒன்பது கருத்தரங்குகளை நடத்தி யுள்ளார்” என்று கூறிய போது நான் வருத்தப் பட்டேன்.

தொழுகையில் சுஜூதுக்குச் செல்லும் போது முதலில் முழுங்காலுக்கு முன்னர் கைகளையே ஊன்ற வேண்டும் என்று ஒருவர் ஒரு சிற்றேடு எழுதி யுள்ளாராம். இது தொழுகையின் உள் செயல்களில் ஒன்று. இது பற்றி ஏற்பும் மறுப்பும் உண்டு.

இன்னொருவரோ (முதல் ரக் அத்தை அல்லது மூன்றாம் ரகஅத்தை முடித்துவிட்டு எழும்பும் முன் லேசாக அமரும்) இஸ்திராஹத் இருப்புபற்றி ஆராய்கின்ற ஒரு சிற்றேடுத் எழுதியுள்ளாராம். இதையெல்லாம் கேட்டு நான் வருத்தப்பட்டேன்.

இவ்வாறாக சரி என்றும் தவறு என்றும் இமாம்கள் எதில் கருத்து வேறுபாடு கொண்டுள் ளார்களோ அப்படிப் பட்ட விஷயங்களில் கருத்தரங் குகளும் சொற்பொழிவுகளும் சிற்றேடுகளும் வெளி யாகிக் கொண்டேயிருந்தால் மக்களிடையே பிரி வினை நீடித்துக் கொண்டுதானிருக்கும்.

கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்சனைகள் மைய இடத்தைப் பிடிப்பதும் நீக்குப் போக்குடன் நடந்து கொள்ள வாய்ப்புள்ளவற்றில் மாற்றுக் கருத்துடையவர்களிடம் கடுமை காட்டுவதும் பெரும் கவலைக்குரிய கைசேதத்துக்குரியதாகும். இச் சமுதாயத்தின் முன்னோர்களின் பண்புக்கு இது எதிரானது.

குர்ஆன் ஹதீசை ஆராய்ச்சி செய்யும் தகுதியுள்ள ஒருவர் கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்சினைகளில் சரியான முடிவுக்கு வந்தால் அவருக்கு இரண்டு கூலியுண்டு. தவறான முடிவுக்கு வந்தால் அவருக்கு ஒரு கூலியுண்டு.

எனவே கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்சனைகளில் எந்த முடிவுக்கு முன்னுரிமை தேர்ந்தெடுத்தாலும் அது இரு கூலியைப் பெறும் முடிவா? ஒரு கூலியைப் பெறும் முடிவா? என்பதுதான் இக்காலக்கட்டத்தில் இஸ்லாமிய சமுதாயத்தின் முக்கியப் பிரச்சனை என நினைப்பது பெரும் கவலையளிக்கிறது.

ஆனால் எல்லா மத்ஹபுகளும் கல்வி நிலையங்களும் ஒருமித்து ஏற்றுக் கொண்ட விஷயங் களே கைவிடப்பட்டுக் கிடப்பதுதான் இப்போது உண்மையிலேயே முஸ்லிம்களுக்குள்ள பிரச்சினை.

அல்லாஹ்வின் (சிபாத்) பண்புகளை விவரிக்கும் வசனங்கள் ஹதீஸ்கள் பற்றி முன்னோர்களான ஸலப்களின்வழிமுறையே சிறந்தது சரியானது என்பது ஒரு புறமிருக்க அதுபற்றிய நுண்மான் நுழைபுல விளக்கங்கள் அல்ல இப்போதுள்ள பிரச்சனை. மாறாக கிழக்கு மேற்கு நாடுகளிலிருந்து இறக்குமதி யாகிக் கொண்டிருக்கும் கொள்கைகளுக்கு அடிமை யாகி அல்லாஹ்வின் பண்பை மட்டுமல்லாது அவனையே மறுக்கும் போக்கு ஏற்பட்டுக் கொண்டி ருப்பதுதான் மிக முக்கிய பிரச்சனை.

“அர்ரஹ்மானுஅலல் அர்ஷிஸ்தவா” (20:5) அல்லாஹ் அர்ஷின் மீது அமைந்துள்ளான் என்ற வசனத்திலுள்ள ‘இஸ்தவா’ என்ற சொல்லுக்கு நேரடியான பொருளைத்தருவதா? அல்லது அது உணர்த்தும் பொருளான ஆதிக்கம் அதிகாரம் எனும் பொருளைத் தருவதா? என்பதல்ல பிரச்சனை.

**இன்று முஸ்லிம்களின் பிரச்சனை என்னவென்றால் அவர்கள் தம் சுயவிருப்பத்தை ஆற்றலை குழி தோண்டிப் புதைத்துவிட்டனர். சிந்தனைத்திறன் உயிரிழந்து விட்டது. பகுத்தறிவு பாழாய்ப் போனது. அவர்களின் உரிமைகள் சாகடிக்கப்பட்டு சுதந்திரம் கொல்லப்பட்டுவிட்டது. அவர்கள் தமது கடமைகளை மறந்து விட்டனர். எங்கும் இறுமாப்பு மண்டிக்கிடக்கிறது. உலகிலும், சமுதாய அமைப்பிலும் அல்லாஹ்வின் வழிமுறைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. குடிமக்களை விட ஆட்சியாளர்களுக்கே முன்னுரிமை. உண்மையை விட உடல் வலிமைக்கே முன்னுரிமை. கடமையை விட உலகப் பலாபலன்களுக்கே முன்னுரிமை என்றாகிவிட்டது.**

அல்லாஹ்வையும் அர்ஷையும் மொத்தமாக மறுப்பவர்களைப் பற்றியே சிந்திக்க வேண்டும்.

தொழுகையில் பிஸ்மில்லாஹ்வை சப்தமாக ஓதுவதா? மெதுவாக ஓதுவதா? அல்லது ஓத வேண்டியதில்லையா? தொழுகையில் நிற்கும் போது கைகளைக் கட்டிக்கெள்வதா? தொங்கவிடுவதா? ருகூவுக்குச் செல்லும் முன்னரும் பின்னரும் கைகளை உயர்த்துவதா வேண்டாமா? என்பன போன்ற ஏராளமான பிரச்சனைகள் உள்ளன. இவையெல்லாம் எல்லோரும் அறிந்தவைதான்.

முஸ்லிம் சமுதாயத்தின் முன் உள்ள பிரச்சனை இவையல்ல. ஒரு நாள் கூட அல்லாஹ்வுக்காக குனியாமல் நெற்றியைத் தரையில் வைக்காமல் பள்ளிவாசலுக்கு வழி தெரியாமல் பள்ளிவாசல் என்றால் என்ன வென்றே தெரியாமல் வாழ்வோர்தான் பிரச்சனை.

ரமழான் ஷவ்வால் மாதப் பிறைகளை ஏதேனுமொரு அங்கீகரிக்கப்பட்ட மத்ஹபைத் தழுவி அறிந்து கொள்வோர் அல்ல பிரச்சனை. ரமழானையும் இதர மாதங்கள் போலவே கருதிக் கொள்கின்ற, நோன்பு இரவுத் தொழுகை என்றால் என்னவென்றே தெரியாத, வெட்கமோ, அச்சமோ இல்லாமல் வேண்டுமென்றே பகிரங்கமாக பகலில் நோன்பின்றி அலைவோர் தான் பிரச்சனை.

சிலர் கருதுவது போல பெண்கள் நிகாப் எனும் முகத்திரையும் கையுறையுமின்றி (புர்காவில் மட்டும்) இருப்பது பிரச்சனை அல்ல. தலை, கழுத்து, முதுகு இவற்றை பகிரங்கமாகக்காட்டி இழிந்த கீழ்தரமான ஆடைகளையும் உடலின் வளைவு நெளிவுகளை வெளிக்காட்டுகின்ற ஆடைகளையும் அணிந்து திரியும் பெண்கள் தான் பிரச்சனை.

இவ்வாறான பிரச்சனைகள் ஏராளம் ஏராளம் உள்ளன.

இஸ்லாமிய நம்பிக்கை பலஹீனப்பட்டிருப்பதும் ஷரீஅத் கைவிடப்படுவதும் குணக்கேடுகளும் தொழுகையின்மையும் ஸகாத் தரமறுப்பதும் மனோ இச்சையின்படி வாழ்வதும் லஞ்சமும் மானக்கேடான பாலியல் குற்றங்களும் பல்கிப் பெருகி பரவிக்கிடப்பதும் பொறுப்புணர்ச்சி பாழ்பட்டுப் போயிருப்பதும் தீய நிர்வாகமும் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் கண்டு கொள்ளப்படாமல் ஹராம்கள் அரங்கேறுவதும் அல்லாஹ், ரசூல், முஃமின்கள் ஆகியோரின் எதிரிகள் உயிருக்குயிரான நண்பர்களாகக் கருதப்படுவதும்தான் இப்போதுள்ள உண்மையான பிரச்சனை.

இன்று முஸ்லிம்களின் பிரச்சனை என்னவென்றால் அவர்கள் தம் சுயவிருப்பத்தை ஆற்றலை குழி தோண்டிப் புதைத்துவிட்டனர். சிந்தனைத்திறன் உயிரிழந்து விட்டது. பகுத்தறிவு பாழாய்ப் போனது. அவர்களின் உரிமைகள் சாகடிக்கப்பட்டு சுதந்திரம் கொல்லப்பட்டுவிட்டது. அவர்கள் தமது கடமைகளை மறந்து விட்டனர். எங்கும் இறுமாப்பு மண்டிக்கிடக்கிறது. உலகிலும், சமுதாய அமைப்பிலும் அல்லாஹ்வின் வழிமுறைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. குடிமக்களை விட

ஆட்சியாளர்களுக்கே முன்னுரிமை. உண்மையை விட உடல் வலிமைக்கே முன்னுரிமை. கடமையை விட உலகப் பலாபலன்களுக்கே முன்னுரிமை என்றாகிவிட்டது.

பிரபலமான ஸஹீஹான ஹதீசில் கூறப்பட்ட படி ஜிப்ரில் (அலை) எந்த முக்கிய விஷயங்களைக் கேட்டார்களோ அந்த மூன்று விஷயங்களான இஸ்லாம், ஈமான் இஹ்சான் ஆகியவற்றின் கடமை களையும் அடிப்படைகளையும் அஸ்திவாரங் களையும் இந்தச் சமுதாயம் பாழ்படுத்தியிருப்பது கண்ணில் சூரியன் தெரிவது போலத் தெளிவாகத் தெரிகிறது.

பிரபலமான அந்த ஹதீசின் இறுதியில் நபி-ஸல் "இவர் ஜிப்ரீல். உங்களின் மார்க்கத்தை உங்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக உங்களிடம் வந்துள்ளார்" என்று கூறினார்கள்.

ஜிப்ரீல் (அலை) கேள்விதான் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் அவர் கற்றுக் கொடுக்க வந்தார் என்று நபி-ஸல் - கூறினார்கள். அகீதா எனும் கொள்கை, அந்தரங்க அமல், வெளிரங்க அமல் ஆகிய மார்க்கத்தின் அடிப்படை விஷயங்களைப் பற்றி மூன்று கேள்விகளைக் கேட்டார். ஆம் அழகிய கேள்வியும் கற்பித்தலின் ஒரு வகைதானே?

எனவே இஸ்லாமிய அழைப்பாளர்களுக்கு ஒரு கடமையுண்டு. எல்லாவற்றுக்கும் முன்னதாக அவர்கள், ஒன்றுபட்டுப் பணியாற்ற வேண்டிய களங்களை மையப்படுத்தியே விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். அப்படி கருத்தொருமித்த விஷயங்களில் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டியதன் அவசியத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும். இதை மார்க்கமும் வலியுறுத்துகிறது. காலத்தின் கட்டாயமும் கூட.

நாம் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டிய விஷயங்கள் குறைந்தவையோ லேசானவையோ அல்ல என்று நான் உறுதியாக நம்புகிறேன். இடையறாத கடின முயற்சியும் சடைவில்லாத உழைப்பும், சோர்வில்லாத ஈடுபாடும் இதற்குத் தேவைப்படுகிறது. கூர்த்த மதியும் உறுதியான வலிமையும் அர்ப்பணிப்பு உணர்வும் தேவைப்படுகிறது. அவற்றை நாம் தந்தாக வேண்டும்.

திருக்குர்ஆன் அல்லாஹ்வின் வேதம். முஹம்மது நபி ஸல் - அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்பதில் நாம் ஒன்றுபட்டுத்தானே இருக்கிறோம்.

அல்லாஹ் நற்பண்புகள் நிறைந்தவன் குறைகளற்றவன் என்பதில் ஒருங்கிணைந்து தானேயிருக்கிறோம்!

திருக்குர்ஆன் உயர்ந்த இறைவனாம் அல்லாஹ்வை எப்படி வருணிக்கிறதோ அந்த அழகிய திருநாமங்களுக்கு (அஸ்மாவுல்ஹுஸ் னாவுக்கு) உரித்தானவன் தான் அவன் என்பதில் நமக்கிடையே மாற்றுக்கருத்து உண்டா? இல்லையே!

அப்படியானால் திருக்குர்ஆன் கூறியுள்ள ஈமானின் கருத்தை நம்முடைய வளரும் தலை முறையிடமும் இளம் தலைமுறையிடமும் விதைப் பதற்காக பரஸ்பரம் ஒத்துழைக்கலாமே! கொள் கையை விளக்கும் போது தத்துவ மோதல் களிலிருந்தும் சொற்சண்டைகளிலிருந்தும் விலகி நின்று இந்த ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இதர சமுதாயங்களுடன் கலந்திருப்பதால் நாம் அடைந்துள்ள குழப்பங்கள் அவர்களிடமிருந்து நமக்கு வந்துள்ள கொள்கை சச்சரவுகள் இவைதான் நம் சமுதாயத்தைப் பிளந்துள்ளன.

மனித குலத்தை அச்சுறுத்தும் மிகப் பெரும் ஆபத்து நாத்திகம் தான். இதில் நமக்குள் எந்த முரண்பட்ட கருத்துமில்லை. எனவே நாத்திகம் என்ற கொள்ளை நோயிலிருந்தும் அதன் முன்னோட்ட மான சந்தேகத்திலிருந்தும் கொள்கை நம்பிக்கையைக் குழப்பி சிந்தனைகளை சிதறடிக்கின்ற ஐயங்களி லிருந்தும் இளைஞர்களைப் பாதுகாத்திட வேண்டி யது அவசியம். இப்பணியில் பரஸ்பரம் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

**தமிழில்: இல்யாஸ் ரியாஜி**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

சர்வீஸ்
விமான டிக்கெட்
விசிட் விசா
குவைத், புருனை,
ஸ்டாம்பிங்
டூர் பேக்கேஜ்

பயண உலகில் சிறந்த வழிகாட்டி

# ஏரோ ஓய்டு டிராவல்ஸ்

சவுதி விசா வைத்திருப்பவர்கள் கவனத்திற்கு

SAUDI WAKALA CARD

بطاقة الوكالة السعودية

رسنا إنتربرائز

المعترف لدى حكومة الهند وزارة الشؤون الخارجية

* Saudi Arabian Consulate, Mumbai accept wakalah from any Recruitments office.

## RASNA ENTERPRISES

GOVERNMENT OF INDIA,
MINISTRY OF LABOUR
REGD.CERTIFICATE NO.
A0310/MUM/PER/300/4 3/4/7870/2006

எங்கள் வக்கலாவில் சிறந்த முறையில் சர்வீஸ் செய்து அனுப்புகிறோம்!

தலைமை அலுவலகம்

எண் 6, முதல் மாடி, சிந்தூர் பிளாஸா, 42, மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை-8.
தொலைபேசி : +91 44 42148723 / 42146552

கிளைகள் :

மயிலாடுதுறை
3/43, வண்டிக்கார தெரு,
மயிலாடுதுறை-1.
தொலைபேசி : 04364-225780/225740
தொலைநகல் : 0091 4364 242100

கூத்தாநல்லூர் - லட்சுமாங்குடி
1, முதல் மாடி, எம்.ஜி.காம்ப்ளக்ஸ்,
திருவாரூர் மெயின்ரோடு.
தொலைபேசி : 04367-230341
இ.மெயில் : aerowidetravel@yahoo.com

# அதீத உடல் பருமன் (Obesity)

***சாதாரண உடல் பருமனுக்கும், அதீத உடல் பருமனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?***

*உடலில் எவ்வளவு அதிகமாக கொழுப்புச் படிகிறது என்பதுதான் சாதாரண உடல் பருமனுக் கும், அதீத உடல் பருமனுக்கும் உள்ள வித்தியாசம். தன் உயரத்துக்கு ஏற்ற எடையைத் தெரிந்து கொள்வதன் மூலம் எடையைக் கட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம்.*


*உடல் எடையை கீழ்கண்டவாறு பிரிக்கலாம்.*

**சாதாரண எடை**

*இருக்க வேண்டிய எடையைவிட 10 சதவீதம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பது.*

**குறைந்த எடை:**

*இருக்க வேண்டிய எடையைவிட 10 சதவீதம் குறைவாக இருப்பது.*




**அதிக எடை:**

*இருக்க வேண்டிய எடையைவிட 10 முதல் 20 சதவீதம் அதிகமாக இருப்பது.*

**அதீத பருமன்:**

*இருக்க வேண்டிய எடையைவிட 20 சதவீதம் அதிகமாக இருப்பது.*

***முதுமையில் உடல் எடை அதிகரிப்பது ஏன்?***

*இதற்கு, இதுதான் காரணம் என்று எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனாலும் கீழ்க் கண்ட காரணங்களால் உடல் எடை அதிகரிக்கலாம்.*

**பரம்பரை**

*தைராய்டு சுரப்பி குறைவாகச் சுரப்பது*

*உடல் உழைப்பு இல்லாமை*

*அதிகமாகச் சாப்பிடுவது*

*ஸ்டீரய்டு, மருந்துகள் மற்றும் இன்சுலின் ஊசிகள்*

***அதீத உடல் பருமனால் ஏற்படும் பிரச்னைகள் என்னென்ன?***

*முதுமையில் உடல் பருமனால் பல்வேறு பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் தரமும் பாதிக்கப்படும். நடந்து செல்வதே சிரமமாக இருக்கும். இதனால் அடிக்கடி கீழே விழ நேரும். மன அழுத்தம் அதிகரிக்கும். உடல் பருமனால் வாழ்நாளில் 25 சதவீத நாள்கள் குறைந்து போகும்.*

*உடல் பருமனால் தோன்றும் பிற பிரச்னைகள்:*

*ஆண்களின் பெருங்குடல் மற்றும் ப்ராஸ்டேட் உறுப்புகளில் புற்றுநோய் ஏற்படும்.*

*பெண்களுக்கு கருப்பை, மார்பகம், கருப்பை வாய், மற்றும் சூலகங்களில் (Overy) புற்று நோய் ஏற்படும்.*

*இதய நோய்கள் ஏற்படலாம். இதயம் பழுதடையலாம்.*

*கால் நரம்புகளில் ரத்தம் கட்டிக்கொள்ளும்.*

*நீரிழிவு நோய் ஏற்படலாம்.*

*பித்தப்பைகளில் கற்கள் உருவாகலாம்.*

*மூட்டு நோய்கள் வரலாம்.*

*ரத்த அழுத்தம் கூடலாம்.*

*உடல் இயக்கத்தில் மாறுபாடுகள் ஏற்படலாம்.*

*தோல் நோய்த்தொற்று ஏற்படலாம்.*

*மனஅழுத்தம் உண்டாகலாம்.*

*இடுப்புச் சுற்றளவு அதிகரிக்காமல் பார்த்துக் கொண்டால் பிரச்னைகள் குறைவு. இடுப்புச் சுற்றளவு அதிகரிப்பது என்பது ரத்த அழுத்தம், நீரிழிவு, இதயநோய்கள் போன்றவற்றுக்கு வழி வகுக்கும். ஆண்களைவிட பெண்களின் இடுப்புச் சுற்றளவு குறைவாக இருக்க வேண்டும்.*

***உடல் பருமனைக் குறைப்பது எப்படி?***

*முறையற்ற உணவு முறையால்தான் பெரும்பாலும் முதுமையில் உடல் பருமன் ஏற்படுகிறது. உணவு முறையில் பெரும் மாற்றம் கொண்டு வர வேண்டும்.*

*முதல் நடவடிக்கையாக, தினமும் சாப்பிடும் உணவுப் பொருள்களின் மொத்த கலோரி 800 முதல் 1000 கி. கலோரி அளவுக்கு இருக்க வேண்டும். துணை உணவாக வைட்டமின் மற்றும் தாதுக்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.*

*முதுமையில் உடல் உழைப்பு குறைவதும் உடல் பருமனுக்கு முக்கியக் காரணம். அதனால், உடற்பயிற்சி செய்ய வேண்டும். தினமும் 2 கிலோமீட்டர் தூரம் நடந்தால் உணவுக் கட்டுப்பாடும் இருந்தால் உடல் பருமன் குறையும்.*

*உடல் பருமனைக் குறைக்க மருந்துகள் உதவாது, அவற்றால், பிரச்னைகள்தான் அதிகமாகும்.*


**இறைவனின் அழகிய வழி காட்டுதல் அனைவருக்கும்!**

மனிதன் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும்?

இந்த வினாவிற்கான முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை. அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பை பெற்றிட கீழ்காணும் முகவரிக்கு எழுதுங்கள்!

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**

235, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,

சென்னை - 600 014

**குறிப்பு :**

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கில்லை.**





அலஹாபாத் நீதிமன்றம் அழுகிப் போயிற்று:

# நீதித்துறையின் இமாலய விளையாட்டுக்கள்

**ஷாந்தி பூஷன்:**

இவர் இந்தியாவின் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவர் மட்டுமல்ல. இந்திய வரலாற்றில் ஒரு பிரதமரை எதிர்த்து அதிலும் இந்திரா காந்தி என்ற அரசியல் சாணக்கியம் நிறைந்த ஒரு - பிரதமரை எதிர்த்து வாதாடி பதவி இறக்கம் செய்த மாவீரர்.

இவர் எடுத்து வைத்த வாதங்களால் அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியை ரேபரேலி தொகுதியிலிருந்து நாடாளும் மன்றத்திற்குச் தேர்ந்தெடுத்தது செல்லாது என்றொரு தீர்ப்பைப் பெற்றார்.


தனது நாடாளும்மன்ற பதவி பறிபோகின்றது எனப் பதறி இந்திராகாந்தி எமெர்ஜென்சி என்ற நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தினார்.

தொடர்ந்து நடந்த தேர்தலில் ஜனதாதளம் என்ற மக்கள் தளம் ஆட்சியில் அமர்ந்தது.

இந்த ஆட்சியில் இந்த நாட்டின் சட்ட அமைச்சராக அமர்ந்தார் ஷாந்தி பூஷன்.

டிசம்பர் 13, 2001 இல் நமது நாராடாளுமன்றம் தாக்கப்பட்ட போது பல முஸ்லிம் அப்பாவிகள் கைது செய்யப்பட்டார்கள்.

SAR. ஜீலானி என்ற டெல்லிப் பல்கலைக்கழக பேராசிரியர்தான் நாடாளுமன்ற தாக்குதலின் மூளை என அப்போதைய இந்திய உள்வுதுறை அமைச்சர் லால் கிஷன் அத்வானி அவர்களின் நண்பர் ரோபிர் சிங் என்ற டெல்லி காவல் துறை துணை ஆணையர், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார். ஒரு பெரும், நாடகத்தை அத்வானி



யின் ஏற்பாட்டில் அரங்கேற்றினார்.

இந்த வழக்கில் அதாவது நாடாளும்மன்ற தாக்குதல் வழக்கில், இதே SAR. ஜீலாணிக்காக முன்னாள் சட்ட அமைச்சர் இதே ஷாந்தி பூஷன் அவர்கள் வாதாடினார்கள். தனது வாதத்தில் கீழ் நீதிமன்றத்தில் SAR. ஜீலானிக்கு மரண தண்டனை தந்து தீர்ப்பு வழங்கிய நீதிபதி திங்காரவையும் வழக்கில் பொய் சாட்சியங்களையும் போலி சாட்சியங்களையும் தயார் செய்து தந்த ரோபிர் சிங்ஜயும் தண்டிக்காத வரை (IPC 195/7). இந்த நாட்டில் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு நீதி கிடைக்காது என்று பொட்டில் அறைந்தாற் போல் டெல்லி ஹை கோர்டில் வாதாடினார் ஷாந்தி பூஷன் அவர்கள். இதே ஷாந்தி பூஷன் அவர்கள், 2010 ஆகஸ்ட் திங்களில் ஒரு பெரும் மனுவை உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்தார். அதில்; இதுவரை 16 நீதிபதிகள் தலைமை நீதிபதிகளாக இருந்திருக்கின்றார்கள். அதில் 8 பேர் லஞ்சம் வாங்கியவர்கள் இரண்டு பேரின் நேர்மையை பற்றி எதுவும் சொல்ல முடியாது. ஆறுபேர்

நேர்மையானவர்கள் எனக் குறிப்பிட்டார்.

இந்த மனுவைப் பெற்ற உச்ச நீதிமன்றம் இப்படியெல்லாம் உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதிகளின் மேல் புழுதியை தூற்றினால் தண்டிப்போம் எனத் தண்டோராப் போட்டது.

ஷாந்தி பூஷன் இந்த தண்டோராவுக்கு தயங்கவில்லை. தாராளமாக என்னை சிறையில் அடையுங்கள். உச்சநீதிமன்றம் ஊழலுக்கு அப்பால் நிற்க வேண்டும். நீதிபரிபாலனம் நேர்மையாக அமைய வேண்டும் எனக் குரல் கொடுத்தற்காக, ஒரு நாள் சிறையிலிருக்க வேண்டுமென்றால் அதனை புண்ணியமாகக் கருதுவேன் எனக் கூறிவிட்டார்.

இப்படி நமது இந்திய நீதிமன்றங்கள் ஊழலின் உறைவிடங்களாக மாறிவருகின்றன.

இந்த லட்சனத்தில் தான் அலஹாபாத் நீதிமன்றம் ஒரு இராமாயண தீர்ப்பை வழங்கிற்று பாபரி மஸ்ஜித் வழக்கில்.

நாட்டு மக்கள் அனைவரும் நமது நீதிமன்றங்கள் - குறிப்பாக அலஹாபாத் நீதிமன்றம், கோமாளிகளின் கூடாரமாக மாறி வருகின்றன என ஆதங்கப்பட்டார்கள்.

தங்களது ஆதங்கங்களை கட்டுரைகள், பத்திரிகைகளுக்கு எழுதும் வாசகர் கடிதங்கள் வழியாக வெளிப்படுத்தினார்கள்.

தொலைக்காட்சி ஊடகம் நாங்கள் சங்கப் பரிவாரத்தின் வாய்கள் எனக் காட்டின.

சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லிம்கள் வெகுண்டெழுந்தார்கள்.

இப்படி அலஹாபாத் நீதிமன்றத்தின் தீர்ப்பு நகைச் சுவையாக மாறிக்கொண்டிருந்தபோதுதான் அலஹாபாத் நீதிமன்றம் வழங்கிய இன்னொரு தீர்ப்பு பளிச்சென தெரியவந்தது.

இந்தத் தீர்ப்பை உச்சநீதிமன்றம் கண்டித்தது.

**வக்ப்போர்டு சொத்தும் – சர்கஸ் திடலும்**

வக்ப்போர்டுக்குச் சொந்தமான இடத்தில் சர்கஸ் கம்பெனியொன்று சர்கஸ் கூடாரமும் மனமகிழ் மன்றமும் அமைத்திட ஒருவர் தாக்கல் செய்த மனுவில் ‘எடுத்துக்கோ’ உனக்கே சொந்தம் நீ கேட்குமிடம் என்று தீர்ப்பு வழங்கிற்று அலஹாபாத் நீதிமன்றம்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உச்சநீதிமன்றம் “இந்தத் தீர்ப்பை வழங்கியவர்கள், அதிகப்படியான ஆதாயத்தைச் பெற்றுக் கொண்டுதான் தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள்” எனக் கூறி இருக்கின்றது.

இதில் உச்சநீதிமன்ற நீதிபதி, “டென்மார்க்கில் ஏதோ, கெட்டுப் போய்விட்டது என ஷேக்ஸ்பியர் தனது ‘ஹேம்லட்’ என்ற நாடகத்தில் சொல்லுவார். அதையே நாம் இப்போது அலஹாபாத்க்கும் சொல்லலாம். அலஹாபாத் ஹைகோர்ட்டிலும் ஏதோ அழுகிப் போய்க்கிடக்கின்றது” என்று கூறி உள்ளார். உச்சநீதிமன்ற நீதிபதிகள் மேலும் இப்படிச் கூறுகின்றார்கள்.

அலஹாபாத் நீதிமன்றங்கள் இடும் ஆணைகளால் சாதாரண மனிதர்கள் நீதிமன்றங்கள்மேல் வைத்திருந்த நம்பிக்கை துகள் துகளாகப் போய்விட்டது. நாங்கள் மெத்த வருத்தத்தோடு ஒன்றை கூறிக் கொள்கின்றோம். அலஹாபாத் நீதிமன்ற நீதிபதிகள் சிலரின் மேல் அவர்களின் யோக்யதைப் பற்றிய புகார்கள் வந்தவண்ணமிருக்கின்றன. நீதிபதிகள் தங்கள் சொந்த பந்தங்களை அதே உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களாகப் பணியாற்றிட வைத்துள்ளார்கள். வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கியவுடனேயே இந்த நீதிபதிகளின் மகன்களும், உறவினர்களும், கோடீஸ்வரர்களாக ஆகிவிடு கின்றார்கள். இவர்களின் வங்கிக்கணக்குகள் ஊதிப் பெருத்து விடுகின்றன. உல்லாச ஊர்களில் இவர்கள் இராஜ பவனி வருகின்றார்கள். வாழ்க்கையில் போக சுகம் நிரந்தரமாக ஒட்டிக் கொள்கின்றது. மாட மாளிகைகளாக தங்கள் இல்லங்களை அமைத்துக் கொள்கின்றார்கள். ஒரு காலக் கட்டத்தில் நீதிபதிகளின் மகன்களும் உறவினர்களும் எந்த நன்மையையும் பெற்றிட இயலவில்லை. அவர்களும் ஏனைய வழக்கறிஞர்களைப் போல் நீதிமன்றங்களில் வாதாடி, வருவதைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். (ஆனால் இப்போது நீதிபதிகளின் மகன்களும் உறவினர்களும் வாழ் வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.)

எல்லா நீதிபதிகளின் மகன்களும், உறவினர்களும் இப்படித் தான் இலாபமடைந்து கொண்டிருக்கின்றார்கள் என நாங்கள் கூறிடவில்லை. சில நீதிபதிகள் தங்களுக்கெதிராக யாரும் விரல்களை உயர்த்திடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றார் கள். ஆனால் பலர் நீதிபதிகளோடு இருக்கும்

உறவுகளை வெட்க மின்றி பயன்படுத்திக் கொள்கின் றார்கள். இன்னும் சில நீதிபதிகள் மீது மிகவும் கேவலமான குற்றச் சாட்டுகள் வந்துள்ளன. நிச்சய மாக இந்த உயர்நீதிமன்றம், சுத்தம் செய்யப்படவேண்டும். (இதில் அலஹாபாத் நீதிமன்றம் மட்டுந் தான் சுத்தம் செய்யப்பட வேண் டும், என்றில்லை மாறாக மொத்த லக்னோவ் உயர்நீதிமன்றமும் சுத்தம் செய்யப்படவேண்டியதே!) நாங்கள் (உச்சநீதிமன்ற நீதிபதிகள் மார்கண்டேயே கொச்சும், கியான் சுதா மிஸ்ரா ஆகியோர்) இந்த நீதிமன்றங்களின் (அலஹா பாத், லக்னோவ் நீதிமன்றங்கள்) தலைமை நீதிபதிகளை இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். இதில் திருந்திடவே மாட்டோம் எனக் கூறும் நீதிபதிகள் மீது கடுமையான நடவடிக்கைகள், எடுத்திட வேண்டியது வந்தாலும் சரியே. தேவையானால் அவர் களை இடமாற்றங்கள் செய்ய லாம்.

இந்தத் தீர்ப்பை வழங்கிய வர்கள், அதாவது வக்ஃப் வாரியத் திற்கு சொந்தமான சொத்தை, தனியாருக்கு - சர்கஸ் கம் பெனிக்கு தாரை வார்த்துத் தரும் தீர்ப்பு - முதன் முதலில் அலஹா பாத் உயர்நீதிமன்றத்தின் எல்லைக்கு உட்பட்டதல்ல. மாறாக அது லக்னோவ் நீதி மன்றத்தின் எல்லைக்கு உட் பட்டது. அதனால் இந்த வழக்கை அலஹாபாத் நீதிமன்றம் ஏற்றே இருக்கக் கூடாது. (ஆனால் வாங்க வேண்டியதை வாங்கிவிட்டு வழக்கை ஏற்று தீர்ப்பும் வழங்கிவிட்டார்கள்). இதையும் உச்சநீதிமன்ற நீதிபதி கள் மார்க்கண்டேயே கொச்சு அவர்களும், கியான் சுதா மிஸ்ரா அவர்களும் கண்டித்துள்ளார்கள்.

### மக்கள் மகிழ்ச்சி

இதே அலஹாபாத் நீதி மன்றம் தான், வக்ஃப் போர்டுக்குச் சொந்தமான பாபரி மஸ்ஜித் மற்றும் அதற்குச் சொந்தமான இடங்களைப் பிய்த்து பங்கு வைத்து தந்தது. இந்த நீதி மன்றத்தை உச்ச நீதிமன்றம் கண்டித்துள்ளது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

இந்த மகிழ்ச்சி அர்த்த மற்றது. அலஹாபாத் நீதிமன்றம் மட்டுமல்ல உச்சநீதிமன்றத்தின் மீதும் ஊழல் குற்றச்சாட்டை ஷாந்திபூஷன் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்கள்.

மட்டுமல்ல, பாபரி மஸ்ஜித் குறித்து உச்சநீதிமன்றம் சென்ற போதெல்லாம் முஸ்லிம்கள் அதிர்ச்சியான ஏமாற்றத்துடன் தான் திரும்பி வந்திருக்கின்றார்கள்..

ஹேஸ்பெட் சுரேஷ் என்ற மும்பை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அவர்கள் “பாபரி மஸ்ஜித் சம்மந்தப்பட்ட வழக்கு களை இத்தனை நாள் உயிர் தந்து அதனை ஒரு பிரச்னை யாகவே வைத்துக் கொண்டிருந் தது. இதில் உச்சநீதிமன்றத்தின் பங்கு அலாதியானது. இதனை நாம் விளக்கமாக வைகறை வெளிச்சம், டிசம்பர் 2010ல் தந்துள்ளோம்.

இந்துத்துவாவை உலகமெல் லாம் தீவிரவாதம் என அழைத்து அதனை மக்கள் மன்றத்திலிருந்து அகற்றிட வேண்டும் என அனை வரும் அழைத்துக் கொண்டிருந்த போது, “அது ஒரு வாழ்க்கை நெறி” என வாய்ப்பந்தல் போட் டது உச்சநீதிமன்றந்தான்.

இந்த நாட்டில் மதத்தை அரசியலில் தொடர்ந்து கலந்து இராமரையும் - இராமர் கோயிலையும் அரசியல் ஆதாயந் தேடிட இந்துத்துவ வாதிகள் , பாரதீய ஜனதா கட்சியினர் பயன்படுத்தி வருகின்றார்கள். இது கூடாது. அரசியலை மதத்தோடு சேர்த்து பிரச்சாரம் செய்தது அடாத செயல். அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு எதிரானது என பல மாராட்டிய மாநில சட்டசபை உறுப்பினர் களை பதவி நீக்கம் செய்தது மும்பை உயர்நீதிமன்றம். அவர் களை மீண்டும் பதவியில் அமர்த்தியது இதே உச்ச நீதிமன்றந்தான். இதற்காக அது வெள்ளறிக்காவில் வெண்ணைத் தடவியதுபோல் வழங்கிய தீர்ப்பை மக்கள் குறிப்பாக முஸ்லிம்கள் மறந்துவிடவில்லை.

ஆகவே ஏதோ அலஹா பாத் நீதிமன்றத்தை உச்ச நீதிமன்றம் “சாடி”யது என்பது மகிழ்ச்சியைத் தந்திட வேண்டாம். அது பாபரி மஸ்ஜித் வழக்கில் எப்படி நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**ஆதாரம்:**
**தி ஹிந்து 27.11.2010,**
**கம்யூனலிசம் காம்பேட்**
**செப்டம்பர் 2002**

**வைகறையில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்**

# பாபரி பள்ளிவாசல் தீர்ப்பு:

## அலஹாபாத் நீதிமன்றத்தின் ஆன்மிக விளையாட்டு

## அனுபம் குப்தாவின் கருத்து!


பாபரி மஸ்ஜித் குறித்து அனுபம் குப்தாஎன்ற வழக்கறிஞரின் கருத்துக்களை இங்கே தருகின்றோம்.

எத்தனையோ வழக்கறிஞர்கள் இதில் கருத்துக்களைத் தந்திருக்கும் போது, அனுபம் குப்தாவின் கருத்துக்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏன்?

அனுபம் குப்தாவிற்கு ஒரு சிறப்பு உண்டு. அவர்தான் லிபர்கான் விசாரணை குழுவின் அரசு வழக்கறிஞர்.

இந்த லிபரான் ஒரு நீதிபதி. இவரது தலைமையின் கீழ்தான் பாபரி மஸ்ஜித் இடிப்புக் குறித்து ஓர் விசாரணை கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்த விசாரணை கமிஷனின் முக்கிய பணி, பாபரி மஸ்ஜித் இடிப்பிற்குப் பின் சூழ்ச்சி ஏதும் உண்டா? என்பதைக் கண்டு பிடிப்பதும் பாபரி மஸ்ஜித் இடிப்பதில் உண்மையான குற்ற வாளிகள் யார்? யார் என்பதைக் கண்டு பிடிப்பதும் தான்.

இந்த விசாரணை கமிஷனுக்கு அரசு ஓர் வழக்கறிஞரை நியமித்தது. அந்த வழக்கறிஞரின் பணி லிபரான் கமிஷன் முன் சாட்சியங்கள் சொல்ல வருபவர்களைக் குறுக்கு விசாரணை செய்து, உண்மையைக் கண்டறிய கமிஷனுக்கு உதவி செய்வது.



அதே போல் யார் யாரை விசாரணை கமிஷன் விசாரித்தாக வேண்டும் என்பதையும் முடிவு செய்து அவர்களுக்கு "சம்மன்" அனுப்பி அவர்களை வரவைத்து அத்தோடு, அவர்களைக் குறுக்கு விசாரணை செய்வது.

இந்த வகையில் பள்ளி வாசலை இடிக்கும் போது உள்துறை அமைச்சராக இருந்த அத்வானிக்கும் சம்மன் அனுப்பப்பட்டு அவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

அவரிடம் "நீங்கள் பள்ளி வாசல் இடிக்கப்பட இருக்கின்றது என்பதை முன்னரே அறிவீர்கள். அத்தோடு பள்ளி வாசலை இடிப்பது எப்படி? எப்படி நடந்திட வேண்டும் என்பது குறித்து நடந்த விரிவான ஆலோசனை கூட்டத்திலும் நீங்கள் கலந்து கொண்டிருக்கின்றீர்கள் என்றெல்லாம் கேள்விகளைக் கேட்டார் அனுபவம் குப்தா அவர்கள். உடனேயே நீதிபதி லிபரான் குறுக்கிட்டு ஒரு உள்துறை அமைச்சரிடம் இவை போன்ற நெருடலான கேள்விகளைக் கேட்கக் கூடாது" என்றார்.

நீதிபதி லிபரான் விசாரணையை நேர்மையாக நடத்த விரும்பவில்லை. அவர் பாபரி மஸ்ஜித் சம்மந்தப்பட்ட உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்க விட வழி தேடுகின்றார் என்பதை புரிந்து கொண்டார் ஆனுபம் குப்தா. அத்தோடு லிபரான் விசாரணை குழுவின் அரசு வழக்கறிஞர் என்ற பதவியை இராஜினாமா செய்தார்.

### தீர்ப்பை முழுமையாக முதன் முதலில் படித்தவர்

லிபரான் விசாரணை கமிஷனில் தனக்கு அரசு தந்தப் பதவியை இராஜினாமா செய்தாரே அல்லாமல் , விசாரணை கமிஷனில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைக் கண்காணித்துக் கொண்டே வந்தார். அவ்வப்போது அது குறித்து பத்திரிகைகளுக்கும் பேட்டி அளித்தார். இவற்றையெல்லாம் நாம் அவ்வப்போது வைகறை வாசகர்களுக்குத் தந்திருக்கின்றோம்.

இப்போது அலஹாபாத் நீதிமன்ற தீர்ப்பு வந்துவிட்ட நிலையில், அதனை முழுமையாக 6564 பக்கங்களையும் (நீதிபதி சுதிர் அஹர்வால் 5098, நீதிபதி எஸ்.யூ.கான் 285, நீதிபதி தரம்வீர் ஷர்மா 1181) படித்தவர். தீர்ப்பை முழுமையாகப் படித்தவர் - என்பதனால் இன்னொரு முக்கியத் துவத்தையும் பெறுகின்றார். அவருடைய கருத்துக்களை இங்கே தருகின்றோம்.

**நீதிபதி ஷர்மா:**



நீதிபதி அகர்வால் அவர்களும் நீதிபதி ஷர்மா அவர்களும் தாங்களாகவே முடிவு செய்த ஒரு காலட்டத்திற்குள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த உலகம் சுதந்திர இந்தியாவிற்கு அப்பாற்பட்டது அதேபோல், மதசார்பற்ற உலகிலிருந்தே மாறுபட்டது. இதில் எனக்கு முழுமையான நம்பிக்கையுண்டு. நீதிபதி ஷர்மா அவர்கள் தான் ஒரு இந்து பக்தர் என்பதை மிகவும் தெளிவாகவே காட்டி இருக்கின்றார். அவர் (தீர்ப்பில்) பல்வேறு இடங்களிலும் அவர் சொல்லி இருப்பவை அயோத்தியா இயக்கவாதிகள் (அதாவது பாபரி பள்ளி வாசல் இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்டிட வேண்டும் என்பதற்காக இயக்கம் நடந்து பவர்கள்) லிபரான் விசாரணை கமிஷன் முன் என்ன சொன்னார் களோ அவையேதான்.

எடுத்துக்காட்டாக, பாபரி மஸ்ஜித் - ஐ ஒரு பள்ளிவாசல் என அழைப்பதா? அல்லது அதை ஒரு கட்டடம் என அழைப்பதா? என்ற கேள்வியை எடுத்துக் கொள்ளுங்கள்.

நீதிபதி ஷர்மா அவர்கள், பாபரி பள்ளிவாசல் இஸ்லாமிய நெறிமுறைகளுக்குட்பட்டுக் கட்டடப்பட்ட ஒரு பள்ளிவாசல் அல்ல என்கின்றார். ஏனெனில் அதில் மினாரக்கள் இல்லையாம்.

இந்த வாதத்தைத்தான் இந்து வன்முறை யாளர்கள் லிபரான் கமிஷன் முன் வைத்தார்கள்.

இப்போது, அது ஒரு பள்ளிவாசலே இல்லை என்றால் அவர்கள் அதை ஏன் எதிர்க்க வேண்டும்? ஏன் ஒரு பெரும் இயக்கத்தைக் கட்ட வேண்டும்? ஏன் அதை இடிக்க வேண்டும்? ஏன் பாபரி பள்ளி வாசலைக் காட்டி நாம் அடிமைகளாக வாழ்ந்த காலத்தில் நமது கோவிலை இடித்து விட்டு எழுப்பப்பட்ட அடிமை சின்னந் தான் பாபரி பள்ளிவாசல் என பாமர மக்களை உசுப்பி விட வேண்டும்? இதிலிருந்தே அது பள்ளிவாசலில்லை என விவாதிப்பது முட்டாள் தனமாகத் தோன் றிடவில்லையா?

நீதிபதி ஷர்மாவின் சொற்கள் கொச்சையானவை. இந்து வெறியின் வெளிப்பாடு. அவர் பயன்படுத்திய அந்த கொச்சையான சொற்கள் என்னைப் பெரிதும் பாதித்தன.

**நீதிபதி அகர்வால்:**



அதிகமான பக்கங்களைத் தீர்ப்பாகத் தந்தவர் நீதிபதி அகர்வால் அவர்கள்தாம். அவர் பிரயோகித்த சொற்கள் செம்மையானவை. கதையை அளந்தாலும் தொடராக அளந்திருக்கின்றார். 21 பாகங்களாக அவர் எழுதியுள்ள தீர்ப்பு சீராக இருக்கின்றது. கொச்சையான சொற்களை அவர் பயன்படுத்திடவில்லை, என்றாலும் அவரும் இந்துத்துவாவில் ஆழ மாக ஊறிப்போயிருக்கின்றார். இந்து வெறியில் கொஞ்சமும் குறைந்தவரல்ல.

**நீதிபதி சிப்கத்துல்லாஹ்கான்**



நீதிபதி எஸ்.யூ. கான் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர். அவர் பெரும்பான்மை நீதிபதி

களோடு ஒத்துப் போயிருக்கின்றார். இதன் மூலம்தான் அவர் அந்த நீதிபதி பதவியில் நீடிக்க முடியும் எனக் கருதுகின்றார்.

**தொல்லியல் ஆராய்ச்சியைப் பற்றி. . .**

நான் லிபரான் விசாரணைக் குழுவில் வழக்கறிஞராக இருந்த போது கடைசியாக கல்யாண் சிங்கிடம், இந்தத் தொல்லியியல் ஆராய்ச்சி அறிக்கையைப் பற்றித்தான் கேட்டேன். ஏனெனில் கல்யான் சிங் பள்ளிவசாலை இடித்ததை நியாயப்படுத்திட தொல்லியல் ஆராய்ச்சிகள் முடிவைத்தான் விசாரணை கமிஷன் முன் காட்டினார்.

இந்தத் தொல்லியல் ஆராய்ச்சி அறிக்கையின் தொடக்கப் பகுதியும், முடிவுரைக்கு முந்தைய பகுதிகளும் கோயிலைப் பற்றிச் சொல்லிடவில்லை. ஆனால் முடிவுரை அங்கே ஒரு ராமர் கோயில் இருந்ததாகச் சொல்லுகின்றது. The Last Chapter is a quantum jumb from the earlier narrative live chapter. அதாவது தொல்லியல் ஆராய்ச்சி அறிக்கையின் கடைசி அத்தியாயம் அதன் முந்தைய அத்தியாங்களிலிருந்து தலைகீழாக வேறு பக்கம் தாவுகின்றது. அஃது அப்போது ஆட்சி செய்த (தொல்லியல் ஆராய்ச்சிக்கு ஆணையிட்ட) பாரதீய ஜனதா கட்சி ஆட்சியின் கொள்கைகளுக்குச் சாதகமானதாக அமைந்தவை. தொல்லியல் ஆய்வு போன்றவற்றை மதவெறிக்கு முரட்டுத்தனமாகப் பயன்படுத்துவது மிகவும் ஆபத்தானபின் விளைவுகளைக் கொண்டது.

**மார்க்கிஸ்ட்டுகளோடும் கம்யூனிஸ்டுகளோடும் சண்டை. . .**

தொல்லியல் ஆய்வுகள், வரலாற்று ஆய்வுகள் இவற்றில் நீதிமன்றங்கள் தங்களை மூழ்கடித்துக் கொள்ள முடியாது. ஆனால் அவற்றையும் நீதி மன்றங்கள் முன் சமர்ப்பிக்கும் போது நீதிமன்றங்கள் அவற்றைப் புறக்கணிக்க முடியாது. நீதி மன்றங்கள் இது போன்றவற்றைச் கையாளும் போது கவனத்துடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ளவேண்டும்.

இந்தக் கவனம் கண்ணியம் எல்லாம் நீதிபதி அகர்வால் அவர்களால் தூக்கிவீசப்பட்டு விட்டன. இந்தத் தொல்லியல் ஆராய்ச்சி தில்லுமுல்லுகள் நிறைந்தது என்பதை தெளிவு படுத்திய தொல்லியல் ஆராய்ச்சி நிபுணர்கள் சுராஜ்பான், டி. மண்டல்,ஆகியோரை கடுமையாக விமர்சிக்கின்றார் நீதிபதி அகர்வால் அவர்கள். அவர்கள் இருவரையும் கம்யூனிஸ்ட்டுகள், மார்க்சிஸ்டுகள், இதுசாரிகள் என்றெல்லாம் வசைபாடுகின்றார்.

நீதிபதி அகர்வால் எடுத்தெறியும் சொற்கள், மார்கிஸ்ட்டாகவோ, கம்யூனிஸ்டாகவோ இடது சாரியாகவோ இருப்பது தண்டனைக் குரிய குற்றம் என்பதுபோல் இருக்கின்றது. முஸ்லிம்களால் வாடகைக்கு வாங்கப்பட்டவர்கள் இவர்கள் என வைகின்றார். அவர் நீதிமன்ற நெறிமுறைகளை தான் எற்றுக் கொண்டுள்ள இந்துத்துவ கொள்கைக்கு முன் பலி இட்டுவிட்டார்.

**இறுதியாக தீர்ப்பைப்பற்றி**

தீர்ப்பில் "இந்துக்களின் நம்பிக்கை யின் அடிப்படையில் என வார்த்தை அடிக்கடி கூறப்படுவது மிகுந்த வேதனையானது, நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தால் சகிக்க முடியாதது.

**ஆதாரம் : பிரண்ட்லைன், நவம்பர் 5, 2010.**

அன்பார்ந்த வாசகர்களே! பாபரி மஸ்ஜித் தீர்ப்பு வந்தவுடனேயே நாம், இந்தத் தீர்ப்பு, வரவிருக்கும் இந்து ராஷ்டிராவுக்காக எழுதப்பட்ட சாசனப்படி வழங்கப்பட்ட தீர்ப்பு. அல்லாமல் அஃது நாட்டில் நடப்பிலிருக்கும் சட்டங்களின் படியோ அல்லது உண்மைகளின் அடிப்படையிலோ வழங்கப்பட்ட தல்ல என்பதைத் தெளிவுப்படுத்தி இருந்தோம். (பார்க்க வைகறை செப்படம்பர் அக்டோபர் 2010).

இதைத் இப்போது மூத்த வழக்கறிஞர் அனுபவம் குப்தா அவர்கள் உண்மைப்படுத்தியுள்ளார்கள். இதையே வரலாற்று வல்லுநர் ரோமிலாதாப்பூர் அவர்களும், சமுதாய ஆர்வலர் மூத்தப் பத்திரிகையாளர் மாலினி பார்த்தசாரதி அவர்களும், நக்கீரனும் முன்னர் குறிப்பிட்டிருந்தார்கள்.

**எம்.ஜி.எம்.**

**வைகறை வெளிச்சம் சந்தாதாரர் ஆகுங்கள்!**

அல்லாஹ்வின் நல்லருளால். . .

இஸ்லாமை சகோதர சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு சொல்லிட அன்றாடம் நமக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. அவற்றை எப்படி பயன்படுத்துவது என்பதை நடைமுறை நிகழ்வுகள் மூலம் அறிய அழைக்கும் நூல். . .

மலேசியா "நம்பிக்கை" மாத இதழில் வெளிவந்த 35 உண்மைச் சம்பவங்களை உள்ளடக்கிய

# "தாஃவாவின் பன்முகங்கள்" நூல் அறிமுக நிகழ்வு

நாள் : 29.01.2011 சனி மாலை 6.00 மணி முதல்... இடம் : மண்ணடி, சென்னை

தலைமை : கவிக்கோ **அப்துல் ரஹ்மான்**

நூல் அறிமுகம் : கேப்டன் **அமீர் அலி**

பசுமையான நினைவுகள்

"தாஃவாவில் மார்க்க அறிஞர்களின் பங்கு" : **பேரா. இல்யாஸ் ரியாஜி**

"தாஃவாவின் மறுபெயர் மக்கள் சேவை" : **பேரா. ஜவாஹிருல்லாஹ்**

நூலின் பயன்பாடு

"அனுபவங்களும் படிப்பினைகளும்" : **பேரா. அப்துல்லாஹ் (பெரியார்தாசன்)**

"தாஃவாவின் உண்மையான முகவரி" :

**டாக்டர். கே.வி.எஸ். ஹபீப் முஹம்மது , எம். குலாம் முஹம்மது**

நோக்கம் : **ஆடிட்டர் பெரோஸ் கான் (இளையாங்குடி)**

**நிகழ்வில் பங்கேற்று பயன் அடைய அன்புடன் அழைக்கின்றோம்.**

## மக்கள் சேவை பதிப்பகம் வழங்கும் வாழ்வியல் நூல்கள்

1. அன்றாடம் வாழ்வில் இஸ்லாம் (நடைமுறை வாழ்வில் முஸ்லிம்களுக்கான வழிகாட்டுதல்கள்)
2. மணக்கும் மணவாழ்வு (திருமண வழிகாட்டுதல்கள்)
3. இஸ்லாமில் குழந்தைகளின் உரிமைகள் (பெற்றோர்களுக்கான வழிகாட்டுதல்கள்)
4. சிறுவர்களுக்கான திருக்குர்ஆன் வழிகாட்டுதல்கள்
5. சிறுவர்களுக்கான பெருமானார் (ஸல்) முன்மாதிரி
6. மாமனிதரின் குழந்தை நண்பர்கள்
7. படைப்பினங்களை நேசிப்போம்
8. இல்லங்கள் இனிமையாக
9. உன்னை அறிந்தால் (திருக்குர்ஆன் நபிவழி தூயவரலாறு கதைகள் வழியாக சிறுவர்களுக்கான வழிகாட்டுதல்கள்)
10. முத்துக் குவியல் (அரபி மூலத்துடன் ஒலியாக்கம் மற்றும் தமிழ், ஆங்கிலம் மொழிபெயர்ப்பும் விளக்கவுரையும்)

உலகளாவிய சிறந்த அறிஞர்கள் எழுதிய நூல்களின் மொழியாக்கங்கள். பெற்றோர், பிள்ளைகள், மணத்தம்பதியர் என அனைவருக்குமான வழிகாட்டதல்கள் நம்முடைய இல்லங்களையும் இதயங்களையும் அலங்கரிக்க வேண்டிய இனிய நூல்கள் எளிய நடையில் .... இனி மொழியில் ...

தொடர்புக்கு

**மக்கள் சேவை பதிப்பகம்**

ப.எண் 51, பு. எண்: 101, தம்புச் செட்டித் தெரு, சென்னை - 600 00 1.

தொடர்புக்கு : +91(0) - 9994600350, +91(0)-44-42164350 Web: makkalsevai.org

# அலைக்கற்றை ஊழலும், பாரதீய ஜனதா கட்சியும். . . !

ஆளும் கட்சிகள்தாம் ஊழலில் சிக்கிக் கொள்ளும் என நாம் கேள்வி பட்டிருக் கின்றோம். கண்கூடாகக் கண்டு வருகின்றோம்.

ஆனால் எதிர்கட்சிகளே தங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும், எதிர்கட்சி என்ற அந்தஸ்தை யும் லஞ்சம் வாங்கிடப் பயன்படுத்தும் என்பதை பாரதீய ஜனதாகட்சி ஒரு கலையாகவே வளர்த்து வருகின்றது.

அன்றொரு நாள் கேள்வி கேட்பதேற்கே பணம் வாங்கினார்கள் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதைக் கேள்விப்பட்டோம்.

ஆமாம்! எதிர்கட்சிகள் கேட்கும் கேள்விகளை ஆளுங் கட்சி மிகவும் அக்கறையுடன் கவனிக்கும். இது தொன்று தொட்டு உலகெங்கும் கடை பிடிக்கப்பட்டுவரும் வழக்கம்.

இந்த வகையில் நாடாளு மன்றத்தில் பாரதீய ஜனதா கட்சியினர் கேட்கும் கேள்விக்கு உடனுக்குடன் காங்கிரஸ் கட்சி பதில் தந்தது. அத்தோடு கேள்வியில் எழுப்பப்படும் விவகாரம் நாட்டுக்கு நன்மை பயப்பதாக இருந்தால் அதையும் என்னவென்று கேட்கும். நடவடிக்கை எடுக்கும். எடுத்தது.

இதைப் பயன்படுத்திக் கொண்டு கேள்விகேட்கவே பணம் வாங்கினர் பாரதீய ஜனதா கட்சியினர். இதில் 11 நாடாளு மன்ற உறுப்பினர்கள் தங்கள்



நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்தார்கள்.

இப்போது தங்கள் எதிர் கட்சி உறுப்பினர் பதவியை இன்னொரு விதத்தில் பயன்படுத்தி இருக்கின்றார்கள். மார்ச்சு, 2009 இல் நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் அரசு தனது பட்ஜெட் என்ற நிதிநிலை மதிப்பீட்டை தாக்கல் செய்தது.

எப்போதும், இந்த பட்ஜெட் தாக்கல் (நிதிநிலை தாக்கல்) என்பதைத் தொடர்ந்து காரசார மான விவாதங்கள் நடைபெறும். இதில் எதிர்கட்சிகளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் தரப்படும். அதே போல் இப்போது எதிர்கட்சியாக வீற்றிருக்கும் பாரதீய ஜனதா கட்சிக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டது.

இதிலும் 'முகேஷ் அம்பானி' என்ற பணமுதலையிடம் விலை போயிருக்கின்றார்கள். எதிர்கட்சிகள் வரிசையில் அமர்ந்திருக்கும் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள்.

பட்ஜெட் என்ற நிதிநிலை அறிக்கையில், பிரதானமான உரையை எதிர்கட்சிகளின் சார்பில், தகிடுதத்தம் அருண் ஷோரி என்பவர்தான் பேசிட வேண்டும் என பாரதீய ஜனதா கட்சியினர் முதலில் முடிவெடுத்துள்ளனர். இந்த அடிப்படையில் காங்கிரஸ் அரசு தாக்கல் செய்த பட்ஜெட்டின் நீள அகலங்களையெல்லாம் அளந்து ஓர் நிதிநிலை ஆய்வை தயார் செய்திருக்கின்றார் அருண் ஷோரி. இதில் முகேஷ் அம்பானி என்ற பணமுதலைக்குப் பல வரிவிலக்குகளும் அரசு ஒப்பந்தங்களும் அதில் சலுகைகளும் தரப்பட்டிருக்கின்றன. அரசுக்கு முகேஷ் அம்பானிகள் தரவேண்டிய பணத்தை அவர்கள் எப்போது வேண்டுமானாலும் கட்டலாம் என்ற முழு சுதந்திரம் தரப்பட்டிருக்கின்றது.

அரசுக்கு அவர்கள் மொத்தமாகக் கட்டிவேண்டிய பணத்தை சிறுக சிறுக கட்டலாம் என்றொரு ஒய்யார வசதி தரப்பட்டிருக்கின்றது என்பதையெல்லாம் பட்டியல் போட்டிருக்கின்றார் அருண்ஷோரி.

அருண் ஷோரி பேசிய ரகசிய உரையாடல் குறித்துக் கிடைத்த தொலைபேசி பதிவுகள் அவர் முகேஷ் அம்பானியை பயங்கரமாக குறிவைத்திருக்கின்றார் என்பதைத் தெளிவுப் படுத்தி இருக்கின்றது.


அதே போல் பாரதீய ஜனதா கட்சி கூட்டமொன்றிலும் அருண்ஷோரி இதை நாசூக்காக சுட்டிக்காட்டி இருந்தார்.

ஆனால் பாரதீய ஜனதா கட்சி தலைவர்கள், முகேஷ் அம்பானிக்கு இழப்புகள் வரும் வகையில் யாரும் நாடாளு மன்றத்தில் உரையாற்றுவதை விரும்பவில்லை. அவர்கள், முகேஷ் அம்பானியிடம் எவ் வளவு வாங்கினார்கள் என்பது குறித்த துல்லியமான தகவல்கள் விரைவில் வெளிவரும். ஆனால் நிச்சயமாக செஞ்சோற்று கடனாற்றி இருக்கின்றார்கள்.

ஏழு நாள்கள் விழுந்து விழுந்து அருண்ஷோரி தயார் செய்த உரையை நிகழ்த்த விடாமல் கடைசி நேரத்தில் அதுவும் அருண்ஷோரி நாடாளு மன்றம் வந்தபின் வெங்கையா நாயுடு உரையாற்றுவார் எனக் கூறி இருக்கின்றார்கள். அருண் ஷோரி அதிர்ந்து போயிருக் கின்றார். ஏனெனில் தன்னை பாரதீய ஜனதாவின் மூளைகளுள் ஒன்று என எண்ணிக் கொண்டி ருக்கும் அருண் ஷோரிக்கு அம்பானியிடம் வாங்கியதில் பங்கேதும் வர வில்லையாம்.

இப்படி எதிர்கட்சி என்ற நிலையில் பட்ஜெட் விவாதத்தில் கலந்து கொள்ள கிடைக்கும் வாய்ப்பையும் முகேஷ் அம்பானி களுக்கு விலைபேசி விற்கும் பாரதீய ஜனதா கட்சி ஊழலைப் பற்றிப் பேசிட எந்தத் தகுதி யுமில்லாத கட்சி.

இங்கே நாம்இன்னொன் றையும் கவனிக்க வேண்டும். முகேஷ் அம்பானிகளுக்கு பல சலுகைகள், தரப்படும் விதத்திலே தான் நம் நாட்டு 2009 பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்று அருண் ஷோரி கூறுவது உண்மையானால் நமது பட்ஜெட்



கள் பண முதலைகளின் பட்ஜெட் டா? அல்லது நாட்டு மக்கள் நல்வாழ்வு பட்ஜெட்டா?

ஆளும் கட்சிகளும் எதிர் கட்சிகளும், நாட்டை இப்படி கபளீகரபடுத்தினால் நாட்டில் பட்டினி சாவுகள்தாம் வளரும். அதுதான் நடந்து கொண்டிருக் கின்றது.

**யார் இந்த அருண்ஷோரி**

இவரைப் பற்றிப் பல கட்டுரைகளை நாம் வெளி யிட்டிருக்கின்றோம். இதில் பத்திரிகையாளர் அருண் ஷோரி எப்படி ஊழல்களுக்குஎதிராகத் தனது எழுத்தாற்றலைப் பயன்படுத் தினார் என்பதைத் தெளிவுப் படுத்தினோம்.

அதே போல் அவர் எப்படி தொடக்க நாள்களில் இந்து மதத்தை எதிர்த்தார்,இந்து அனுஷ் டானங்களையும் இந்து மத நம்பிக் கையையும் கேலியும் கிண்டல் செய்தார் என்பதையும் தெளிவு படுத்தி இருந்தோம்.

இந்து மதத்திற்கெதிராக அவர் எழுதிய நூலிலிருந்து பல மேற்கோள்களைக் காட்டி இருந்தோம்.

பின்னர் அவர் ஓர் வெறியர் என்பதையும் எடுத்துக் காட்டி யிருந்தோம்.

லஞ்சத்தை ஒழிக்கும் மா வீரனாகத் தன்னைக் காட்டிக் கொண்ட அருண் ஷோரி பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சியில் அமைச்சரானவுடன் அடித்த கொள்ளைகளுக்கு அளவே இல்லை. இதையும் நாம் விரிவாக உரைத்துள்ளோம்.

இப்போது அதே பிஜேபி யால் அவர் எப்படி அவமானப் படுத்தப்பட்டார் என்பதற்கு அவர் வாயாலே சில அத்தாட்சிகள்.. அவற்றை இங்கே தருகின்றோம்.

அண்மையில் சிஎன்என், ஐபிஎன் தொலைக்காட்சிக்குத் தந்த பேட்டி

**பேட்டியில் கேள்விக் கேட்ட கரன் தாப்பூர்:** நாம் நிரா ராடியாவின் டேப்களிலிருந்து நமது பேட்டியைத் தொடங்கு வோம். அந்தத் டேப்புளில் நீங்களும் ஓர் முக்கிய ஆளாக ஆகிவிட்டீர்கள். நீரா ராடியா தான் 2009 பட்ஜெட்டில் உங்க ளுக்குப் பதிலாக, வெங்கையா நாயுடுதான் பேசிடவேண்டும் என்ற ஏற்பாட்டை செய்தாராமே! நான் முதலில் ஒன்றை தெரிந்து கொள்ளலாமா? இது உண்மை தானா?

**அருண்ஷோரி தந்த பதில் :** ஆமாம் உண்மைதான். அது நடந்தது உண்மைதான். நான் தான் பட்ஜெட் - இல் முதன் முதலில் பேசி விவாதத்தை தொடங்கி வைத்திட வேண்டும்

எனக் கேட்டுக் கொள்ளப் பட்டேன். நான் நாடாளுமன்றத்தில் நுழைந்தபின் முந்திய நாள் இரவில் வெங்கைய்யா நாயுடு தானே பேசுவதாக தீடீரென முடிவு செய்து விட்டதாகக் கூறினார். அவர்தான் கட்சி யின் தலைவர் என்பதால் அவர் தான் பேசுவார் என முடிவானது. என்னுடைய முறை 13 அல்லது 14 ஆவதுதான் வந்தது. கட்சியைப் பொறுத்தவரை நான் இரண்டாவது பேச்சாளர்.

**கரன் தாப்பூரின் கேள்வி:** நீங்கள் முதலில் பேசி இருந்தால் முகேஷ் அம்பானிகளுக்கு அரசு வழங்கி இருக்கும் பெரிய சலுகைகளுக்கெதிராக கடினமான நிலைபாட்டை எடுத்திருப்பீர்கள் எனப் பேசப்படுகின்றது. உங்களை மாற்றிவிட்டு வெங்கையா நாயுடு பேசியபோது அவர் மிகவும் மிருதுவாகவே பேசினார்?

**அருண் ஷோரியின் பதில்:** உண்மையிலேயே அவர்களின் நோக்கம் அதுதான். அது வெளியாகியுள்ள டேப்பிலிருந்து தெளிவாகிறது. நான் அம்பானிகளுக்கு எதிராக ஓர் முழக்கத்தை முன் வைப்பேன் என்பதை அவர்கள் (அதாவது எனது கட்சியைச் சார்ந்தவர்கள்) யூகித்திருக்கக்கூடும். ஏனெனில், நான் ஒரு முறை இந்தக் கருத்தைப் எங்கள் கட்சி மீட்டிங்கில் பேசினேன். நான் நாடாளுமன்றத்தில் பேசி இருப்பேனா பேசி இருக்கமாட்டேனா என்பது எனக்குத் தெரியாது.

**கரன் தாப்பூரின் கேள்வி :** ஆனால் அவர்கள் அப்படித்தான் பயந்திருக்கின்றார்கள். (அதாவது அருண் ஷோரியை விட்டால், அவர் முகேஷ் அம்பானிக்கு எதிராகப் பேசிவிடுவார் என அவர்கள் பயந்திருக்கின்றார்)

**அருண்ஷோரியின் பதில் :** ஆமாம் அதுதான் அவர்களின் பயம்.

**தரன் தாப்பூரின் கேள்வி:** அந்த டேப்இல் நீரா ராடியாவுடன் பேசிய மற்றொரு குரல், யாருடையது என்று என்னால் யூகித்திட இயலவில்லை. அந்தக் குரலிடம் நான் அடிக்கடிப் பேசி இருக்கின்றேன். அந்தக் குரல் யாருடைய குரல் என்று உங்களால் அடையாளம் காண முடிகின்றதா?

**அருண் ஷோரியின் பதில் :** அந்த டேப்களை கேட்டவர்கள் யாராக இருந்தாலும் அதை அறிந்து கொள்வார்கள். அது யாருமில்லை என்னுடைய நண்பர் என்.கே. சிங்தான். அதில் என்ன பிரச்னை?

**கரன் தாப்பூரின் கேள்வி:** அதாவது ஒரு காலக்கட்டத்தில் வாஜ்பேயின் செயலாளராக இருந்தாரே அவர் தானே?

**அருண் ஷோரியின் பதில்:** ஆமாம், அவர் பிரதம அமைச்சரின் செயலாளராக இருந்தார். இன்னொரு காலக்கட்டத்தில் நிதி செயலாளராக இருந்தார். திட்டக் குழு உறுப்பினராக இருந்தார். என்னுடன் வேலை செய்தார் என்னுடைய நண்பர்.

*நன்றி:* **www.ibnlive.in.com**

## இரண்டு வினாக்கள்?

**ஒன்று,** இங்கே அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்துவது என்னவெனில் அருண்ஷோரி தன் கட்சித் தலைவருக்கு எதிராகவும் தன்கட்சிக்கு எதிராகவும் அறிக்கைகளையும் பேட்டிகளையும் தந்துள்ளார். பாரதீய ஜனதா கட்சிப் பீற்றிக் கொள்ளும் "கட்சி;க கட்டுப் பாட்டிற்கு" முற்றிலும் எதிரானது. அவர் ஏன் அப்படி கட்சிக் கட்டுப் பாட்டை மீற வேண்டும்?

**இரண்டு** கடைசி நேரத்தில் பட்ஜெட் மீதான உரை நிகழ்த்தும் பொறுப்பை வெங்கையா நாயுடு ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்?

முகேஷ் அம்பானி தனக்கு அரசு தரும் சலுகை சிறப்பு சலுகை வரிவிலக்கு இவற்றிற்கெதிராக யாரும் குரல் கொடுக்கக் கூடாது என்பதில் குறியாக இருந்திருக் கின்றார். அவரிடம் பெற வேண்டி யதைப் பெற்று விட்டு பாரதீய ஜனதா கட்சியின் அப்போதைய தலைவர் கடைசி நேரத்தில் தானே உரைநிகழ்த்திட முன் வந்துள்ளார்.

அருண் ஷோரி இந்தக் குட்டை உடைக்கக்காரணம் அவருக்குச் செல்ல வேண்டியது செல்லவில்லை.

### அம்பானிகள்:

அம்பானிகள் தங்களது அபார வியாபார உத்திகளால் தான் மிகப்பெரிய செல்வந்தர்களாக இருக்கின்றார்கள் என நினைத் தோம். யதார்த்தத்தில் அவர்கள் ஏழைப் பாளைகளின் வயிற்றில் அடித்துத்தான் வாழ்கிறார்கள். அதாவது வரிபணத்தை ஏய்த்து வாழ்ந்து கொண்டிருக்கும் யாசகர்கள்தாம்.

இந்த அம்பானிகளுக்கு காங்கிரசும் - பாரதீய ஜனதாவும் ஒன்று போலவே விலை போகின்றன.

**எம்.ஜி.எம்.**

டிசம்பர் – 6

# தலித்களும் முஸ்லிம்களும் இணைந்து நடத்திய எழுச்சி நாள்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் டிசம்பர் 6-ம் தேதி சென்னை தியாகராயர் நகர் சர் பி.டி. தியாகராயர் அரங்கில் “தீர்ப்பை திருத்து வோம்” என்ற தலைப்பில் கருத் தரங்கம் நடைபெற்றது.

அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் நிகழ்வுக்கு தலைமையேற்றார் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ் டின் பொருளாளர் இல்யாஸ் ரியாஜி. ஆவணப்பட இயக்குநர் ஆளூர் ஷா நவாஸ் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.




“இன்று முஸ்லிம்கள் பாபரி மஸ்ஜிதை இழந்து நிற்பதற்கு பாரதீய ஜனதா கட்சியும், இந்துத்துவா சக்திகளும் காரணமாக இருப்பதைப் போல காங்கிரஸ் கட்சியும் காரணம்” என்றார் ஆளூர்ஷா நவாஸ்.

“எட்டாயிரம் பக்கங்களில் பாபர் மஸ்ஜித் பற்றிய தீர்ப்பை வழங்கிய அலஹாபாத் உயர்நீதி மன்ற நீதிபதிகள் இந்து ராஷ்டிரா வுக்கு பாதை அமைத்து விட்டனர். இந்தத் தீர்ப்பை நீதியில் நம்பிக் கை கொண்ட எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை”.

“நானூறு ஆண்டுகாலமாக இந்த மண்ணில் கம்பீரமாக வீற்றிருந்த பாபரி மஸ்ஜிதை பட்டப்பகலில் இடித்துக் தகர்த்துவிட்டு அங்கே என்ன இருந்தது என்று பூமியைத் தோண்டிப்பார்க்கும் வினோத மான தேசம் இது”.

“பாபரி மஸ்ஜித் இருந்த இடம் முஸ்லிம்களுக்குச் சொந்தம். அந்த இடத்தில் வேறு எந்தக் கட்டடம் வந்தாலும் அது தகர்க்கப்படும். மீண்டும் அங்கே மிடுக்காக பள்ளிவாசல் எழுந்து நிற்கும். இதை முஸ்லிம்கள் கண்டிப்பாக செய்தே தீருவார்கள். இந்தத் தலைமுறை இதைச் செய்யாவிட்டால் அடுத்த தலை முறை செய்யும். இதை யாரும் எதுவும் தடுத்துவிட முடியாது” என்றார் இல்யாஸ் ரியாஜி.

தொல். திருமாவளவன் முஸ்லிம்களுக்கும் தலித்துகளு க்கும் இடையேயான உறவை விளக்கினார். மேலும் தனது உரை யில் அவர் கூறியதாவது:

தலைநகர் புதுதில்லியில் நான் தங்கியிருந்த போது என் அறைக்கு ஒருவர் வந்து தமிழில் “வணக்கம்” என்றார். பதில் வணக்கம் கூறிவிட்டு அமரவைத்து அவரிடம் உரையாடினேன். அவர் சில பிரச்சனைகளைக் கூறி அவற்றைப் பற்றி பாராளுமன்றத் தில் நான் பேச வேண்டும் என்றார். அவர் ஒரு தமிழ்நாடு ஆர்.எஸ்.எஸ். காரர் என்று புரிந்து கொண்டேன்.

“எனக்கு ராமன் மீது நம்பிக்கையில்லை. நாங்கள் ராமரை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று அவரிடம் நான் கேட்டேன்.

தெரியும் தெரிந்து தான் வந்தேன் என்றார். தேடி வந்த வரிடம் கடிந்து பேசுவது நாகரிக மாக இருக்காது என்பதால் அவரி டம் என் கட்சியின் கொள்கை களை விளக்கினேன். பின்னர் அவரை அனுப்பி வைத்தேன்.

இந்துத்துவா சக்திகள் இப்படி களப்பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றன. விடுதலைச்

சிறுத்தைகளும் இது போல் களப்பணி செய்ய வேண்டும். பதவிகளுக்காக அரசியலுக்கு வரக்கூடாது. லட்சியத்துக்காக வர வேண்டும். பதவிகள் நல்ல மனிதனை வழி கொடுத்துவிடும்.

ஒழுக்கமானவனுக்கு தீய பழக்க வழக்கங்களைக் கற்றுத் தந்து விடும். பேராசை, ஊழல், உள்ளிட்ட எல்லா தீமைகளுக்கும் நம்மை ஆளாக்கிவிடும். எனவே பதவி முக்கியமல்ல.

பதவி நம்மைத் தேடி வரும் அளவுக்கு நாம் நடந்து கொள்ள வேண்டும். நம் எதிரிகளை அறிவுப்பூர்வமாக எதிர்கொள் ளும் திராணியை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான ஒரு சமூகப் புரட்சியின் மூலம் நாம் லட்சியத்தை அடைய வேண்டும்.

"தீர்ப்பைத் திருத்துவோம்" என்றால் நான் நீதிபதியாகி தீர்ப்பைத் திருத்துவேன் என்ப தல்ல. இந்துத்துவ சக்திகளின் தீய சக்திகளையும் தீய பிரச்சாரங் களையும் முறியடித்து மதச் சார்பற்ற இந்தியாவைப் பாதுகாப் பதன் மூலம்தான் நீதிபாதுகாக்கப் படும் நீதி கிடைக்கும் நியாயமான தீர்ப்பும் கிடைக்கும்.

இழந்த பாபரி மஸ்ஜிதை மீண்டும் முஸ்லிம்கள் பெறு வதற்கு விடுவதலைச் சிறுத்தைகள் துணை நிற்பார்கள் என்றார் திருமாவளவன்.

நிகழ்வுக்கு முன்னிலை வகித்த அக்கட்சியின் பொரு ளாளர் யூசுப் அவர்கள் "பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட அதே டிசம்பர் 6ம் தேதிதான் அம்பேத்கர் நினைவு நாள். எனவே இந்த நாளை தலித்கள் முஸ்லிம்கள் எழுச்சி நாள்" என்று கடந்த ஏழு ஆண்டுகளாக விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கடைபிடித்து வருகிறோம்" என்றார்.

நிகழ்வில் இமாம் ஷம்சுதீன் உரையாற்றினார். அப்துர்ரஹ் மான் நன்றி கூறினார்.

**ந.நி.**

# அல்லாஹ்வின்பால் அறிஞர் கீரனூரி!

தமிழகத்தின் பிரபல மார்க்க அறிஞர், திண்டுக்கல் யூசுபிய்யா அரபுக் கல்லூரி முதல்வர் கலீல் அஹ்மது கீரனூரி மவ்லானா அவர்கள் வஃபாத் ஆனார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக சர்க்கரை வியாதியால் அவதிப்பட்டு வந்த அன்னார் 16.12.2010 வியாழன் மாலை திண்டுக்கல் அரபுக் கல்லூரியில் வைத்து மரணமடைந்தார்கள். மறுநாள் வெள்ளிக் கிழமை அன்னாரின் சொந்த ஊரான கீரனூரில் அடக்கம் நடைபெற்றது. ஜனாஸா தொழுகையில் ஏராளமான ஆலிம்களும் பொதுமக்களும் பங்கேற்றனர்.

கீரனூரிஹழ்ரத் என்ற பெயரில் புகழ் பெற்று விளங்கிய அவர் "அல்அஃப்லாக் வல் அவ்காத்" என்ற அரபு நூலையும், "நினைவுகள்" என்ற தன் வாழ்வில் நடந்த முக்கிய சம்பவங்களை கொண்ட தமிழ் நூலையும் எழுதி உள்ளார்கள். தப்லீக் ஜமாஅத்தின் பணிகளில் ஈடுபாடு கொண்டவர்கள்.

நமது இஸ்லாமிய பணிகளுக்கு தார்மீக ஆதரவை வழங்கி வந்த கீரனூரி ஹழ்ரத் அவர்கள், "தப்லீக் ஜமாஅத்தில் மக்களைத் தொழுகைக்கு அழைத்திட ஒரு குழு செல்லும். அவர்களுக்காக துஆ செய்து கொண்டு மற்றொரு குழு பள்ளிவாசலில் இருக்கும். அது போல் உங்களின் இஸ்லாமிய பணி வெற்றி பெற நான் துஆ செய்து கொண்டேயிருப்பேன். நான் இப்போது இளைஞனாக இருந்தால் உங்களைப் போல் தான் செயல்பட்டுக் கொண்டிருப் பேன்" என்று கூறுவார்கள் நம்மிடம்.

நம் மீது கெடுபிடிகள் ஏவி விடப் பட்ட காலங்களில் நாம் அவர்களைச் சந்திக்கும் போது கனிவோடு விசாரிப்பார்கள். நீண்ட நேரம் நம்மோடு அளவளாவி இஸ்லாமியப் பணிகள் பற்றி கேட்டறிவார்கள்.

அன்னாரின் இழப்பை அல்லாஹ் நமக்கு ஈடு செய்திடு வானாக. அவர்களின் மண்ணறை வாழ்வையும் மறுமை வாழ்வையும் ஒளி மிக்கதாக்குவானாக.

அன்னாரை இழந்து வாடும் அவர்களின் குடும்பத் தினருக்கும் மாணவர்களுக்கும் ஸப்ருன் ஜமீல் எனும் அழகிய பொறுமையை வழங்குவானாக.

**வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம்**

# சமச்சீர் கல்வியில் உருது, அரபி, மலையாளம், தெலுங்கு, கன்னடம் இடம் பெறும்!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில மாநாடு கோரிக்கையை ஏற்று முதல்வர் கலைஞர் ஆணை!

*2010 டிசம்பர் 11ஆம் தேதி சென்னை, தாம்பரம் ரயில்வே மைதானத்தில் நடைபெற்றது இந்திய யூனியன் முஸ்லிம்லீகின் மாநில மாநாடு.*

*தமிழக முதல்வர் கலைஞர் அம்மாநாட்டில் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.*

*இம்மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவை களில் பலவற்றை மேடையிலேயே ஏற்றுக் கொண்ட முதல்வர் கலைஞர், வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு நல வாரியம் அமைக்கப்படும். அலிகர் பல்கலைக்கழகக் கிளை தமிழகத்தில் அமைக்க முயற்சிக் கப்படும். முஸ்லிம்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசை வலியுறத்துவோம் என்ற அறிவிப்புகளையும் வெளியிட்டார்.*

*மாநாட்டில் தமிழக முதல்வருக்கு "நானிலம் போற்றும் நல்லிணக்க நாயகர்" விருது வழங்கப்பட்டது.*

*விருதினை பெற்றுக் கொண்டு முதல் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.*

*முதல்வர் தனது சிறப் புரையில்,*




இந்த மாநாட்டில் சில கோரிக்கைகள் வைக்கப்பட்டுள் ளன. அவைகளை யெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். மாநாட்டுத் தலைவர் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதை நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கை யோடுதான் நீங்கள் இந்தத் தீர்மானங்களை யெல்லாம் இன்றைக்கு எனக்கு அளித்தி ருக்கிறீர்கள்.

முதல் தீர்மானம் - சமச்சீர் கல்வியில் உருது மொழிக்கு உரிய பாதுகாப்பு வேண்டும் என்ற தீர்மானமாகும்.

மொழிக்கு பாதுகாப்பு வேண்டும். அதற்காக சிறை செல்லவும் தயாராக இருந்த இயக்கம் இந்த இயக்கம், திராவிட முன்னேற்றக்கழகம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்படி எங்கள் மொழிக்கு நாங்கள் போராடி வெற்றி கண்டபோது, இது உங்கள் மொழி என்று சொல்ல மாட்டேன். "நமது" மொழியான உருது மொழிக்கு பெருமை சேர்க்க அதை சிறப்பு செய்ய, அதற்கு உரிமைகளைப் பெற்றுத் தர எத்தகைய முயற்சி களை மேற்கொள்ள வேண்டுமோ அவற்றையெல்லாம் இந்த அரசு மேற்கொள்ளும்.

*தமிழ்நாட்டில் 2010-2011 கல்வியாண்டு முதல் சமச்சீர் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டத்தைத்*

தொடர்ந்து, அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்று முதல் 10 வகுப்புகளில் சிறுபான்மை மொழி பாடமாகச் சேர்க்க கோரி சிறுபான்மை மொழிச் சங்கங்களிலிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன. இது தொடர்பாக சிறுபான்மை மொழி பிரதிநிதிகளுடன் விவாதம் நடத்துவது குறித்து தேசிய சிறுபான்மை குழுமத்திடமிருந்து அறிவுரை பெறப்பட்டதன் அடிப்படையில் 27.10.2010 அன்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்துத் தரப்பிலிருந்தும் தெரிவிக்கப் பட்ட பொது கருத்துக்கள்; பாடத்திட்டத்தில் சிறுபான்மை மொழிகள் கற்பிப்பதற்கு 4 பாடவேளைகள் ஒதுக்கீடு செய்தல்; அனைத்து மொழி பாடங்கள் மற்றும் சிறுபான்மை மொழி வழியில் கற்பிக்கப்படும் பாடங்களுக்கான பாடநூல்கள் தயாரித்தல்; சிறுபான்மை மொழி பாடங்களுக்கான தேர்வு நடத்துதல்; மதிப்பெண் பட்டியலில் இடம் பெறச் செய்தல் - இதன்மீது உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த மாநாட்டில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## "வெளிநாடுவாழ் தமிழர் கள் நலவாரியம்"

தமிழ்நாட்டிலிருந்து ஏராளமானோர் வெளிநாடுகளில் பணிபுரிகின்றார்கள். அவர்களின் நலனுக்காகவும், வெளிநாடுகளில் பணிபுரிகின்றபோது அங்க அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கவும், மத்தியிலும், கேரளா போன்ற மாநிலங்களிலும் இருப்பதைப் போல், வெளிநாடு வாழ் இந்தியர் நலனுக்காக தனித்துறையை ஏற்படுத்தக் கோருகின்றது ஒரு தீர்மானம்.

இதற்கு நான் தருகின்ற விளக்கம்- தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏராளமானோர் வெளிநாடுகளில் பணிபுரிவதால் அவர்களின் நலனுக்காகவும் வெளிநாடுகளில் பணி புரிகின்ற போது அங்கு அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளில் இருந்து அவர்களை மீட்டிடவும், வெளிநாடு வாழ் தமிழர் நலனுக் காகத் தனித் துறையை ஏற்படுத் திட வேண்டும் எனும் கோரிக்கை ஏற்கும் வகையில் மறுவாழ்வுத் துறை இயக்குநரகத்தை "அகதி கள் மறுவாழ்வு மற்றும் வெளி நாடு வாழ் தமிழர்களின் நல ஆணையரகம்" எனப் பெயர் மாற்றம் செய்திடவும் அந்த ஆணையரகத்தின் கீழ் "வெளி நாடு வாழ் தமிழர்கள் நல வாரியம்" ஒன்றை ஏற்படுத் திடவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.

## தமிழகத்தில் அலிகர் பல்கலைக்கழக கிளை

உலகப் புகழ் பெற்ற அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தின் கிளைகள் மேற்கு வங்கம், கேரள மாநிலங்களில் அமைப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதைப்போல, தமிழகத்திலும் அமைக்க மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என்று ஒரு தீர்மானம். நிச்சயமாக மத்திய அரசை இதற்காக வலியுறுத்துவோம் - வெற்றி பெறுவோம் (கைதட்டல்) என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

## தமிழ் முஸ்லிம் அறிஞர்கள் நூல்கள் நாட்டுடமை

"தமிழகஅரசு தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரும் பணிபுரிந்து படைப்பிலக்கியங்களை உருவாக்கியுள்ள முஸ்லிம் கவிஞர்கள், எழுத் தாளர்கள், ஆன்மீக அறிஞர்கள் ஆகியோரின் படைப்புகளையெல்லாம் தொகுப்பதற்கும் அவற்றில் சிறந்தோங்கி நிற்கும் அறிஞர்களின் படைப்புகளை நாட்டு டைமை ஆக்குவதற்கும் தமிழக முதல்வர் அவர்களிடம் இம்மாநாடு கோரிக்கை வைக்கிறது" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளீர்கள்.

தமிழக அரசு தமிழ் வளர்த்த முஸ்லிம் தமிழறிஞர்களைக் கண்டறிந்து அவர்களின் நூல் களை நாட்டுடைமையாக்கி அவர் கள் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகை வழங்கி வருகிறது. இவ்வகையில் திரு. கா.மு. ஷெரிப், புலவர் முகம்மது நயினா மரைக்காயர் ஆகியோரின்த மரபுரிமையர்களுக்குத் தலா ஐந்து இலட்சம் ரூபாய்; புலவர் குலாம் காதிறு நாவலரின் மரபுரிமைக்கு ஆறு இலட்சம் ரூபாய்; சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் திரு. மணவை முஸ்தபா ஆகியோரின் மரபுரிமையர்களுக்குத் தலா 10 இலட்சம் ரூபாய்; டாக்டர் எஸ்.எம். கமால் அவர்களின் மரபுரிமையர்க்கு ஏழு இலட்சம் ரூபாய் என மொத்தம் 43 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கப் பட்டு; ஆறு முஸ்லிம் தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடமையாக்கப் பட்டுள்ளன. இது தொடர்பாக, மேலும் கோரிக்கைகள் வரப்பெறுமாயின் அதற்கும்

உரிய நடவடிக்கை மேற் கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தாம்பரம் சிறுவியாபாரி களுக்கு மாற்று இடம்

தாம்பரம் மேம்பாலம் சாலை விரிவாக்கம் என்ற பெயரில் அனைத்து சிறுகடை களையும் அப்புறப்படுத்தும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. சிறுகடை வியபாரிகளுக்கு நல வாரியம் அமைத்து பேருதவி புரிந்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இதில் தலையிட்டு இவர்களுக்கு மாற்று இடம் வழங்கி சாலையோர, சிறுகடை வியாபாரிகள் வாழ்வில் ஒளி யேற்ற இம்மாநாடு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது என்று ஒரு தீர்மானம் இயற்றியுள்ளீர்கள்.

இது பற்றி - தாம்பரம் மேம்பாலம் சாலை விரிவாக்கத் தின் போது போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டு தேசிய நெடுஞ்சாலை, சாலை ஓரங்களில் உள்ள சிறு கடைகள் அகற்றப் படும் நிலை ஏற்பட்டால், இச் சிறுகடை வியாபாரிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு இவர்களுக்கு மாற்று இடம் வழங்குவது குறித்து தனியே பரிசீலனை செய்யப்படும் (கைதட்டல்) என்ற உறுதியைத் தெ தெரிவித்துக் கொள்கிறேன்.

தாம்பரம் சாலையோர விரிவாக்கத்தால் பாதிக்கப்பட்ட சாலையோர சிறுகடை வியாபாரி களின் துயர் துடைக்க அவர் களின் எண்ணிக்கையில் கணக் கிட்டுத் தெரிவித்தால் தேவைப் படும் நிலத்தின் அளவு குறித்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சி யருடன் கலந்தாலோசித்து, முடிவு செய்து, அதற்கேற்ற இடத்தைத் தேர்வு செய்து அவர்கள் எந்தவித சிரமமுமின்றி வியாபாரம் செய்ய, தாம்பரம் நகராட்சியின் மூலம் கடைகளைக் கட்டி பாதிக்கப் பட்ட சிறு வியாபாரிகளுக்கு வழங்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

### முஸ்லிம்களுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்க மத்திய அரசை வலியுறுத்துவோம்

நீதியரசர் ரங்கனாத் மிஸ்ரா கமிஷன் அளித்துள்ள பரிந்துரை களையேற்று சிறுபான்மை சமுதாயத்திற்கு, குறிப்பாக முஸ்லிம் சமுதாயத்திற்கு பத்து சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்க இந்த மாநாடு மத்திய அரசை வலியுறுத்துருகிறது என்று தீர்மானம் நிறைவேற்றியிருக் கிறார்கள். மதம் மற்றும் மொழி வழி சிறுபான்மையினரில் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினரை இனம் கண்டறிவதற்கான அளவுகோல் கள் குறித்து ஆலோசனை வழங்குதல், பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் முன்னேற்றத்திற்காக கல்வி மற்றும் வேலை வாய்ப்பு களில் இட ஒதுக்கீடு உள்ளிட்ட நடவடிக்கைகளை பரிந்துரை செய்தல் - இவைகளுக்காக மிஸ்ரா கமிஷன் பத்து சதவிகிதம் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பரிந் துரையை நிறைவேற்ற வேண்டிய கடமை மத்திய அரசுக்கு இருக் கிறது.

இப்போது முஸ்லிம் களுக்கு இட ஒதுக்கீட்டாக தி.மு.கழக ஆட்சியில் வழங்கப் பட்டிருப்பது 3.5 சதவிகிதம். பத்து சதவிகிதத்தை மத்திய அரசு கொடுக்குமே யானால் அந்த பத்து சதவிகிதத் திற்குள் இந்த 3.5 சதகிவிதமும் இருககும் என்பதை உங்களுக்கு சொல்ல வேண்டிய அவசிய மில்லை. ஆகவே பத்து சதவிகிதத் திற்காகவும் நாம் அணி வகுப்போம். அந்த அணி வகுப்பில் வெற்றி பெற்றால் பத்துக்குள் ஐந்து கிடைக்கும். அதையும் பெற்றுக் கொள்வோம். சட்டியிலே இருந்தால் தான் அகப்பையிலே வரும் என்ற பழமொழியை சாதாரணப் பெண் கள் கூடச் சொல்வார்கள். அவ்வளவு தான் நான் சொல்ல முடியும். பத்து கிடைத்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். பெருமை அடைவோம். பரவா யில்லை, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாட்டிலே நிறைவேற்றிய தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது என்று நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். அந்த மகிழ்ச்சியை இந்த மாநாட்டிலே கலந்து கொண்டிருக்கின்ற உங்க ளுக்கும் எங்களுக்கும் அளிக்க வேண்டிய கடமை மத்திய அரசுக்கு இருக்கின்றது.

### மதவாத சக்திகளை தொடர்ந்து எதிர்ப்போம்

எனவே திராவிட முன் னேற்றக் கழகம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும் தோழமைக் கட்சிகள். இங்கே ஒரு நண்பர் பேசியதைப் போல இடையிலே பாரதிய ஜனதா கட்சியோடு நாங்கள் கூட்டணி அமைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது கூட, தமிழ் நாட்டு அரசியலில் முக்கியமான இடத்தைப் பெற்றவரான

சி. சுப்பிரமணியம் சொன்னார், "பாரதிய ஜனதா கட்சி மதவாதத்திற்கு இடமளிக்கலாம். ஆனால், கலைஞர் இருக்கிற இடத்திலே மதவாதம் நுழையாது என்று நம்பலாம்" என்று சுப்பிரமணியம் சொன்ன வார்த்தையை நாங்கள் ஊர்ஜிதப்படுத்தினோம். நாங்கள் அதை நிரூபித்துக் காட்டினோம்.

**முஸ்லிம் லீகுடான உறவு நிலைத்து நீடிக்கும்**

சிலர் இங்கே அவர்கள் சொன்னதுபோல, என்னுடைய பள்ளிப் பருவத்திலே நான் 10வது படிக்கும்போதே திருவாரூரில் நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாட்டில் கான்பகதூர் கலிபுல்லா சாகிப் தலைமையில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டில் பிறைக் கொடியை கையிலே பிடித்துக் கொண்டு, தொண்டர் படையில் ஒருவனாக இருந்தவன் நான். ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு முன்பே, பிறைக் கொடியை கையிலே பிடித்தவன் நான். அந்தப் பிறை - இங்கே நண்பர்கள் சொன்னதைப் போல வானத்திலே உள்ள சூரியனை விட்டு அகலாது அந்தப் பிறையை விட்டு சூரியனும் அகலாது என்பதை நிரூபிக்கும் வகையில் இந்த மேடையில் நாங்கள் அமர்ந்திருக் கிறோம். இது தொடரும் - தொடர்ந்து கொண்டேயிருக்கும். எந்த இடர்வரினும் அந்த இடரை இடறி எறிந்து விட்டு தொடரும் - தொடரும் தொடரும்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

2010 டிசம்பர் 11ம் தேதி காலை மஹல்லா ஜமாஅத் ஒருங்கிணைப்புக் கூட்டத்தை நடத்தியது இந்திய யூனியன் முஸ்லிம் லீக்.

சமுதாயத்தின் யதார்த்தமான பிரச்சனைகளை விளக்குவதாக மாநாட்டின் தீர்மானங்கள் அமைந்திருந்தன.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நானிலம் போற்றும் நல்லிணக்க நாயகர் விருது வழங்கி எதிர் வரும் சட்டமன்றத் தேர்தலை திமுக தலைமையின் கீழ் சந்தித்திட முடிவு செய்திருப் பதை முஸ்லிம் லீக் காட்டியிருக்கிறது கலைஞரும் அதை வழி மொழிந்திருக்கிறார்.

முஸ்லிம்கள் மத்தியில் திமுகவுக்கு எதிராக எந்த அலையும் இல்லை. இந்த அரசு நம்முடைய அரசு என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர். சமுதாயத்தின் இந்த உணர்வைப் புரிந்து முஸ்லிம் லீக் அரசியல் நடத்திக் கொண்டிருப்பது அதன் எதிர்கால வெற்றிக்கு வழி வகுத்துக் கொண்டிருக்கிறது.


மாநாட்டில் சிறப்புரையாற்றிய முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மைதீன் தனது உரையில் "சிறையில் பல ஆண்டுகளாக வாடும் முஸ்லிம் சிறைவாசிகளை விடுதலை செய்திட வேண்டும். அவர்கள் விடுதலை செய்யப்பட்டால் நேர்மையாக வாழ்வார்கள். அதற்கு நான் பொறுப்பேற்கிறேன்" என்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

இந்த மாநாடும் அதில் முதல்வர் ஆற்றிய உரையும் முஸ்லிம் லீக்குக்கு மகிழ்ச்சி அளித்திருக்கிறது. சமுதாயத்திற்கு நன்மை பயப்பதாக அது மாற வேண்டும்.

**ந.நி.**


வெளிவந்த மூன்றே மாதங்களில் முதல் இரண்டு பதிப்பின் பிரதிகள் விற்று தீர்ந்தன

**தற்போது பரபரப்பான விற்பனையில் (தமிழில் . . . )**



# கர்கரேயைக் கொலை செய்தது யார்?



**விரிவாக்கப்பட்ட மூன்றாம் பதிப்பு விற்பனையில்**

**விலை ரூ. 250/-**

தொடர்புக்கு : **வேர்கள் வெளியீட்டகம்,**

52/1, மண்ணடித் தெரு, 4வது மாடி, அறை எண் -7, மண்ணடி, சென்னை - 600 001.

தொலைபேசி : 044-45566909

மால்கம் எக்ஸ் நூல் வெளியீட்டு விழா:

# பகுத்தறிவு சிந்தனையின் எல்லை எங்கு முற்றுப் பெறுகிறதோ அங்கிருந்து இறைஞான வெளிப்பாடு துவங்குகிறது

## முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொகிதீன் பேச்சு


விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் எழுத்தாளர் ரவிக்குமார் எழுதி உயிர்மை பதிப்பகத்தின்சார்பில் மால்கம் எக்ஸ் வரலாற்று நூல் வெளியீட்டு விழா சென்னை தேவனேய பாவாணர் நூலக அரங்கில் 18.12.2010 அன்று நடைபெற்றது.

மால்கம் எக்ஸ் நூலினை வெளியிட்டு முஸ்லிம் லீக் தலைவர் கே.எம். காதர் மொகிதீன் பேசியதாவது:

மால்கம் எக்ஸ் என்று இதே தலைப்பில் சகோதரர் குலாம் முஹம்மது அவர்களும் ஒரு நூலினை எழுதி ஏற்கெனவே வெளியிட்டுள்ளார். இப்போது ரவிக்குமாரும் அதே தலைப்பிலான நூலினை எழுதி இன்று வெளியிடப்பட்டுள்ளது.

சகோதரர் குலாம் முஹம்மது நூலினையும், இந்த நூலினையும் படிக்கும்போது இரண்டுக்கும் இடையே சில வேறுபாடுகளை காண முடிகிறது.

மால்கம் எக்ஸ் அமெரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்காக பல்வேறு வகைகளில் உழைத்தவர். கடைசியில் அவர் பூரண விடுதலை பெறும் வழியாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறார்.





இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு அந்த கொள்கையை கறுப்பின மக்கள் அனைவருக்கும் எடுத்துரைத்து அவர்களை இஸ்லாத்திற்கு அழைக்கும் பணியினை இஸ்லாத்தை பரப்புரை செய்யும் பணியினை அவர் மேற்கொண்டார். சகோதரர் குலாம் முஹம்மது நூல் இந்த கோணத்தில் மால்கம் எக்ஸ் - ன் இஸ்லாமி வாழ்க்கையை இஸ்லாமிய பிரச்சாரத்தை முக்கியத்துவம் கொடுத்து விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஆனால் ரவிக்குமார் தனது நூலில் மால்கம் எக்ஸ்-ஐ ஒரு சமூக சீர்திருத்தவாதி என்ற அளவில் அறிமுகப்படுத்துகிறார். மால்கம் எக்ஸ் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம் ஆனதை பதிவு செய்துள்ள போதி லும், அவர் கறுப்பின மக்களுக்கு எவ்வாறெல்லாம் உழைத்தார். அந்த சமூகத்தில் எத்தகைய சீர்திருத்தம் மேற்கொண்டார் என்பதை முக்கியத்துவம் கொடுத்து இந்த நூலில் விளக்கியுள்ளார்.

ரவிக்குமார் மால்கம் எக்ஸ் குறித்த நூலினை எழுதும்போது அவருக்கு நமது இந்திய சூழலும், தமிழக சூழலும் நிச்சயம் கண்முன் வந்திருக்கும்.

தமிழகத்தில் குறிப்பிட்ட மக்களை தாழ்த்தப்பட்டவர்கள் -

தீண்டத்தகாதவர்கள் என்றெல்லாம் ஒதுக்கி வைத்து பல்வேறு துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாக்கியது போன்றே அமெரிக்காவில், கறுப்பின மக்களை இது போன்ற கொடுமைகளுக்கு ஆளாக்கி உள்ளனர்.

கறுப்பின மக்கள் ஆப்பிக்கா கண்டத்திலிருந்து அமெரிக்காவுக்கு கடத்தி வரப்பட்டு சந்ததைகளில் ஏலம் விடப்பட்டு வெள்ளைக்காரர்களுக்கு அடிமைகளாக பணிபுரிய வைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலும், ஆப்பிரிக்காவில் இருந்த அந்த கறுப்பின மக்கள் முஸ்லிம்களாக இருந்துள்ளனர். ஆனால், அவர்கள் அமெரிக்காவுக்கு கொண்டு வந்த பிறகு அவர்கள் மீது கிறிஸ்தவ மதம் திணிக்கப்பட்டு கிறிஸ்தவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

கறுப்பின மக்களின் துயர் மிகுந்த வாழ்க்கை குறித்தும், அவர்கள் அமெரிக்காவுக்கு ஏன் எப்படி கொண்டு வரப்பட்டார்கள் என்பது குறித்தெல்லாம் அலெக்ஸ் ஹேலி என்ற உலகப் புகழ் பெற்ற பிரபல எழுத்தாளர் எழுதியுள்ள "ரூட்ஸ்" என்ற நூலில் விரிவாக பதிவு செய்துள்ளார்.

அலெக்ஸ் ஹேலி எழுதிய இந்த ரூட்ஸ் நூலினை படித்தவர்கள் இதயங்கள் கனத்து கண்ணீர் வடிக்கும் வகையல் மிக உருக்கமான பல அதிர்ச்சிகரமான தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

ஆப்பிரிக்காவில் இருந்து கடத்தி வரப்பட்டோர்களின் வழித்தோன்றகளில் ஒருவராகத்தான் மால்கம் எக்ஸும் திகழ்கிறார்.

எக்ஸ். என்றால் அடையாள மற்றவர்கள் தனது வரலாறு இன்னது என்று தெரியாதவர்கள் என்ற பொருளில்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால்தான் மால்கம் தனது பெயரோடு எக்ஸ் என்பதை இணைத்து அழைக்கப்பட்டார்.

அவர், பள்ளி மாணவராக இருந்தபோது ஓர் ஆசிரியர் நீ படித்து என்ன ஆகப் போகிறாய்? என கேட்கிறார். அதற்கு மால்கம் "நான் வழக்கறிஞர் ஆவேன்" எனக் கூறுகிறார். அதற்கு அந்த ஆசிரியர் "நீயெல்லாம் ஏன் அதற்கு முயற்சிக்கிறாய்" தச்சர் தொழிலை படிக்க வேண்டியது தானே என கூறுவதாக இந்த நூலில் ஒரு செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதே போன்ற வார்த்தைகள், சிந்தனைகள் ஒரு 60 ஆண்டுகளுக்கு முன்பு நமது மண்ணிலும் நிகழ்ந்துள்ளது.

மூதறிஞர் ராஜாஜி கோலி விளையாடுவது மிகவும் சிறந்த விளையாட்டு அதனை விட்டு விடாதீர்கள் என தமிழக மக்களுக்கு அறிவுரை கூறியதும், குலக் கல்வி திட்டம் என ஒன்றை கொண்டு வந்ததையும் நாம் நினைத்துப் பார்க்கின்றோம்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக நமது இந்தியாவில் தமிழகத்தில் எத்தகைய எண்ணப் போக்குகள், சமுதாய நிகழ்வுகள் இருந்தனவோ அது போன்றே அதே கால கட்டத்தில் அமெரிக்காவிலும் இருந்துள்ளது.

இங்கு திராவிட இயக்கங்கள் எதற்காக பாடுபட்டனவோ, எத்தகைய சமுதாய மாற்றத்தை விரும்பி உழைத்தனவோ அது போன்றே அமெரிக்காவில் மால்கம் எக்ஸ் உள்ளிட்டவர்கள் உழைத்துள்ளனர்.

இந்த நூலில் எலிஜா முஹம்மது என்பவர் குறித்து ரவிக்குமார் சில தகவல்களை பதிவு செய்யும் போது அது இஸ்லாத்தின் அடிப்படை கொள்கைகளுக்கு மாற்றமாக அமைந்திருப்பதை உணர முடிகிறது.

மால்கம் எக்ஸ்-க்கு இஸ்லாம் மார்க்கத்தை அறிமுகப் படுத்தி அவருக்கு ஒரு ஆசானாக, வழிகாட்டியாக இருந்தவர் எலிஜா முஹம்மது. ஆனால் அவர் தன்னை இறைத்தூதராக நபியாக கூறிக் கொண்டார் என இந்த நூலில் காணப்படுகிறது.

முஸ்லிம்கள் நம்பிக்கைப் படி முஹம்மது நபி (ஸல்) அவர்கள்தான் இறுதி இறைத் தூதர். அவருக்கு பின் எந்த நபியும் வரமாட்டார். அப்படி எவராவது தன்னை நபி என்று சொன்னால் அதனை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அது போன்றே எலிஜா முஹம்மது அல்லாஹ் இறைவன் குறித்தெல்லாம் பேசும்போது, மனிதன் அல்லாஹ்வாக ஆக முடியும் என கூறுவதாக இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இஸ்லாமிய இறை நம்பிக்கையின் அடிப்படைவிதி இறைவன் என்பவன் அது அல்லாத, அவர் அல்லாத, அவள் அல்லாத ஒன்றிற்கு தான் அல்லாஹ் என இஸ்லாம் பெயர் சூட்டுகிறது.

ஆண் பெண் அஃறினை என எதுவும் இல்லாத எதனோடும் ஒப்பிட முடியாத பற்றுக் கோடு ஒன்றில்லாமல் தானே உருவான ஒரு தத்து வத்திற்கு பெயர்தான் அல்லாஹ் என இஸ்லாம் கூறுகிறது.

மனிதன் ஒருவன் அல்லாஹ் ஆக முடியும் என கூறுவது

இஸ்லாத்தின் அடிப்படை கொள்கைக்கு முரணானதாகும்.

தமிழ் நெறியின் சைவ சித்தாந்த நெறியின் முடிவான முழுமையான வடிவமாக அமைந்திருப்பது தான் இஸ்லாம் ஆகும்.

இன்று இஸ்லாத்தின் பெயரால் பல பல கொள்கைகள், பலவிதமான கருத்துகள் உலகம் முழுவதும் நிலவி வருகின்றன.

முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு இஸ்லாம் மார்க்கம் வஹி மூலமாக இறைவனால் அருளப்பட்டது. மக்காவில் பதிமூன்று ஆண்டுகள் முதலில் இறை செய்திகள் இறங்கின. இவை அனைத்தும் ஏகத்துவம் குறித்தும் மனித குல ஒருமை குறித்தும் தெளிவாக விரிவாக விளக்குகின்றன.

கலப்படமற்ற இந்த போதனைகள் நபிகள் நாயகம் (ஸல்) காலத்திலேயே இந்தியாவின் தென்பகுதியில் அறிமுகமாகி இங்குள்ள மக்களால் அன்று முதல் இன்று வரை தொடர்ந்து கடைபிடிக்கப் பட்டு வரப் படுகிறது.

நபிகளாரின் மதினா வாழ்க்கையில் 10 ஆண்டுகாலம் இறங்கிய இறைவசனங்கள் அரசியல் ரீதியான கோட்பாடுகளை விளக்குகின்றன. நபிகளாருக்கு பின் அவருடைய தோழர்களான கலீபாக்களின் ஆட்சி காலத்தின் போது இஸ்லாத்தின் அடிப்படை கொள்கைகளுக்கு பலவித விளக்கங்கள் தெளிவுகள் அளிக்கப்பட்டன.

அதன்பின், உமய்யாக்களின் ஆட்சிக்காலத்தில் கூறப்பட்ட விளக்கங்கள், அதன்பின் அப்பாசியாக்களின் காலத்தில் அதன் பின் உதுமானிய பேரரசு ஆட்சி காலத்தில் கூறப்பட்ட விளக்கங்கள் என இஸ்லாமிய வரலாறு குறித்து நான்கு விதங்களில் நாம் விரிவான தகவல்களை பெற முடிகிறது.

இவை அனைத்திலும் அடிப்படை விஷயங்கள் கொள்கைகள் ஒன்றாக இருந்த போதிலும் விளக்கம் சொல்வதில் பல விதமான முறைகள் பின் பற்றப்பட்டிருக்கின்றன.

அப்படித்தான் எலிஜா முஹம்மது தன்னை நபி என்று வாதிட்டதும் அடங்கியிருக்கிறது. மேலும், இந்த நூலில் மால்கம் எக்ஸ் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் போது தனது தலையை மொட்டை அடித்துக் கொண்டதுடன் தாடியையும் சிரைத்துக்கொள்ள வேண்டும் என்பதுபோல பதிவாகியுள்ளது.

ஹஜ்ஜின் போது தலையை மொட்டை அடித்துக் கொள்வதும், முடியை வெகுவா குறைத்து வெட்டிக் கொள்வதும் உண்டு. ஆனால் தாடியை எடுக்க வேண்டிய தேவை இல்லை.

ஆனால், இந்த நூலில் அப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இது போன்ற சில குறைபாடுகள் இந்த நூலில் இருந்த போதிலும் மற்றபடி மால்கம் எக்ஸ் ஒடுக்கப்பட்ட ஒரு சமூக மக்களின் விடுதலைக்காக உழைத்ததை ரவிக்குமார் அவர் பார்வையில் அவரது சிந்தனைக்கு ஏற்ப பதிவு செய்துள்ளார்.

ஜாதி - மதம் - இனம்- குலம் - மொழி - தேசம் என எந்த வேறுபாடும் இல்லாமல் படைத்த இறைவன் முன் மனிதர் குலம் அனைத்தும் ஒன்றிணையும் ஓர் நிகழ்ச்சி தான் ஹஜ் ஆகும்.

நமது தமிழகத்தில் கூட "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று தத்துவம் சொல்லப்படுவதுண்டு. தமிழக முதல்வர் கலைஞர் கூட இந்த தத்துவத்தை உலகெங்கும் பரப்பும் நோக்கில் தமிழ் செம்மொழி மாநாட்டினை நடத்தினார்.

நாம், பல ஜாதி பல மதம் என இருந்தாலும் அனைவரும் ஒரே தாய் தந்தையிலிருந்து பிறந்தவர்கள், ஒரே மூலத்தில் இருந்து வந்தவர்கள் என்பதுதான் இஸ்லாம் விளக்குகிறது.

பகுத்தறிவு சிந்தனையின் எல்லை எங்கு முடிவடைகிறதோ அங்கிருந்து இறைவனின் வல்லமை குறித்த ஞானம் துவங்குகிறது என்பார்கள்.

ரவிக்குமார் ஏதோ ஒரு தேடலின் காரணமாகவே தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார். இந்த நூலும் கூட அவருடைய தேடுதலின் வெளிப்பாடுதான்.

அவர் தேடுவது அவருடக்கு கிடைக்க இறைவன் அருள் செய்ய வேண்டும்.

இந்த நூலினை முடிக்கும் போது மால்கம் எக்ஸ் கூறியதாக ஓர் வாசகத்தை பதிவு செய்து முடித்துள்ளார்.

அதாவது நாம் அனைவரும் என்றாவது ஒரு நாள் புரிந்துணர்வு ஒளியின் கீழ் சந்திப்போமாக என்பதுதான் அந்த வாசகம்.

அந்த உண்மை ஒளியின் கீழ் நாம் அனைவரும் ஒன்றிணைய எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்வானாக என்று கூறி எனது உரையினை முடித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு

பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழக திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் நாகநாதன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன், உலகத் தமிழ் ஆராய்ச்சி இயக்க தலைவர் குணசேகரன், பத்திரிகையாளர் பகவான் சிங் உள்ளிட்டோரும் உரையாற்றினர்.

# நாகர்கோவிலில் இஸ்லாமிய கருத்தரங்கம்

தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் நாகர்கோவில் வைகறை வாசகர் வட்டம் ஆகியவை இணைந்து நடத்தியது.

இக்கருத்தரங்கம் 5.12.2010 அன்று நாகர்கோவில் பாவாகாசிம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில், "பாபரி மஸ்ஜித் நேற்று இன்று நாளை" என்ற தலைப்பில் வைகறை ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் உரையாற்றினார்கள். "முஸ்லிம் பெண்கள் நேற்று, இன்று நாளை" என்ற தலைப்பில் மதுரை நிஜாம் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

பெண்களும் ஆண்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு நாகர்கோவில் தாருல் இஸ்லாம் தலைவர் முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள் தலைமையேற்றார்கள்.

# தலாக் (மணவிலக்கு) எனும் பெருநோய்

**கேப்டன் என்.ஏ. அமீர் அலி**

அண்மையில் ஒரு செய்தியை எல்லா முஸ்லிம் இதழ்களிலும் வெளியிட்டிருந்தேன் என் பெயருடன் வெளியிட்டிருந்தேன். ஓர் இதழ் அடுத்த தளத்துக்குப் போய், தனிப்பட்ட பெயரில் போனால் பத்தாது என்று சொல்லி "சமுதாய ஆர்வலர்கள், கல்வியாளர்கள்"என்று வெளியிட்டிருந்தார்கள். மெத்த மகிழ்ச்சி. ஏனெனில் இது பரந்துபட் தமிழ்ச் சமுதாயம் பற்றியது என்பதால்.

நான் கடந்த 40 ஆண்டு காலமாக பல இதழ்களில் பல தலைப்புகளில் கட்டுரைகள் எழுதி வந்திருக்கிறேன். அவற்றைப் படித்தவர்களிடமிருந்து இரண்டு மூன்று பாராட்டுகள்தான் வரும் மகிழ்ந்து போவேன். மறைந்த சிராஜுல் மில்லத் அவர்கள் எனது "வன்முறை தேவைதானா?" என்ற கட்டுரையைப் படித்துப் பார்த்துவிட்டு மிக நுட்பமும் நுணுக்கமும் நிறைந்தது" (Subtle) என்று பாராட்டினார்கள். வட்டியைப் பற்றிய எனது கருத்துரையைப் படித்து விட்டு கவிக்கோ அவர்கள் "அறிவு ஜீவி" என என்னைப் பாராட்டி இருந்தார்கள். இவற்றை என் மனத்தில் பொன் போல் பொதிந்து வைத்திருக்கிறேன்.

ஆனால், நான் எதிர்பாராத முறையில் மேலே கூறிய அறிவிப்பைப் படித்தவர்கள், குறைந்தது ஒரு நூறு பேர். தமிழகமெங்கணுமிருந்து தொலைபேசி வழியாக தங்கள் கவலைகளை என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

இது எதனைக் காட்டுகிறது? உங்களுடைய சிந்தனைக்கும், முடிவுக்கும் விட்டு விடுகிறேன்.

இந்த அறிவிப்பின் பின்னணி சார்ந்து விரிவாக எழுத ஓர் உந்துதலை இது என்னில் ஏற்படுத்திருக்கிறது.

இன்ஷா அல்லாஹ் எழுதுவேன்.

# மஜ்லிசு நிசா நிகழ்ச்சி

25.11.2010 இல் திருச்சியில் மஜ்லிசு நிசாவின் மாலை நேர கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கத்தில் மௌலவீ ஹைதர் அலீ அவர்களும், வைகறை வெளிச்சம் ஆசிரியர் இலக்கியச் சுடர் மு. குலாம் முஹம்மத் அவர்களும் உரை நிகழ்த்தினார்கள்.

நிகழ்ச்சியில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டார்கள்.

**திருச்சியிலிருந்து நமது நிருபர்**

## அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்

# காலம் வென்ற காட்சிகள்

# அகழ்ப்போர்



இலக்கியச் சுடர்
ரஹ்மத் ராஜகுமாரன்
(கைபேசி: 9443446903)

நிலத்தை பள்ளமாக தோண்டி அதனையே அரணாக பயன்படுத்தி வெற்றி கண்ட போர். இந்த போர் புத்திசாலித்தனத்தை யுக்தியாக பயன்படுத்திய யுத்தம்.

மதீனாவின் மூன்று பக்கத்திலும் கோட்டை, கொத்தளங்கள் நிறைந்து அதனை அரண் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் வட திசை மட்டும் அரண் இல்லாது ‘ஹா’வென திறந்த வெளியாய் இருக்கிறது.

எதிராளிகள் இருபத்து நான்காயிரம் பேர்கள், வலிமையான ஆயுதங்கள் கொண்ட பெரும்படை. முஸ்லிம்கள் வெறும் மூவாயிரம் பேர்கள் சின்னச் சின்ன ஆயுதங்கள் கொண்ட சிறுபடை.

என்ன செய்வது. . . ? எதிராளிகள் பெரும்திரளாகத் திரண்டு வந்திருப்பதனால் அவர்களுடன் ஒரே நிலத்தில் நின்று ஒரே நிலையில் போரிடுவது அறிவுடைமையாகாது. எனவே வடதிசையின் வாயை அகழ்வெட்டி அரண் செய்து கொண்டு அகழின் பின்புறம் நின்று போரிடுவதே புத்திசாலித்தனம் என்பதாக ஸஹாபிகளில் ஒருவரான சல்மான் பாரிஸி (ரலி) என்னும் பாரசீக அறிஞர் யுத்த யுக்தியை வகுத்து கொடுத்தார்கள்.

மூவாயிரம் வீரர்களை பத்து பத்து பேர்கள் கொண்ட குழுவாக பிரிக்கப்படுகிறது. அதில் ஒரு குழுவின் உறுப்பினராக நபி (ஸல்) அதே குழுவில் இன்னொரு உறுப்பினராக சல்மான் பாரிஸி (ரலி) அவர்களும் பங்கேற்கிறார்கள். ஒவ்வொரு குழுவும் 10 கெஜ நீளமும் 10 கெஜ அகலமும் 5 கெஜ ஆழமும் கொண்ட பள்ளத்தை தோன்ட வேண்டும் மொத்த அகழையும் 20 நாட்களுக்குள் தோண்டி முடித்தாக வேண்டும். எதிரிகள் தயாராகிவிட்டதை உளவுப்படை அறிவித்துவிட்டது. சீக்கிரம் சீக்கிரமாக தோண்ட வேண்டும்.

ஆக மொத்த அகழின் நீளத்தையும் அதன் ஆழத்தையும் வாசகர்கள் கணக்கிட்டு கொண்டீர்களா...? உங்கள் மனத்திரையில் நீண்ட அகழ் தெரிகிறது. . .! கூடவே கூட்ட குழுவில் நாமும் ஒருவராக இருந்திடக் கூடாதா. . . என்ற ஏக்கமும் உங்கள் கண்களில் தெரிகிறது. . . ! நம்முடைய இந்த ஏக்கத்தை இறைவன் அங்கீகரிப்பானாக. . .!

முஸ்லிம் வீரர்களில் சிலர் ஒரு பகுதியில் அகழ் வெட்டிக் கொண்டு வரும் பொழுது அவர்களின் வேலை வேகத்தை ஒரு பெரிய பாறாங்கல் தடை செய்தது. அதனை உடைத்தெறிய அவர்கள் ஒருங்கு சேர்ந்து எவ்வளவோ முயன்றும் அவர்களால் இயலவில்லை. இதனை நபி (ஸல்) அவர்களிடம் தெரிவித்து அப்பகுதியை மட்டும் விட்டு விட்டு வேறு பக்கத்தில் அகழ் வெட்டிச் செல்லலாமா என்று வினவினர். ஆனால் நபி (ஸல்) அவர்களின் மனம் அதற்கு இசையவில்லை. கோடரியைக் கையிலே பிடித்துக் கொண்டு அவ்விடத்தை நோக்கி விரைந்து சென்றார்கள். அளப்பரும் மன உறுதியுடன், மனத்தை ஒருமுகப் படுத்திக் கொண்டு கோடரியை ஓங்கி அங்கிருந்த பாறை மீது அடித்தார்கள். பாறை சிறிது பிளந்து அதிலிருந்து அனற்பொறி பளிச்சிட்டது. அதைக் கண்டதும்

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று உரத்துக் கூவினர். அவர்களின் தோழர்கள் விண்ண திரும்படி அதற்கு எதிரொலி செய்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி, "சிரியா (ரோம்)நாட்டின் திறவு கோல் என்னிடம் கொடுக் கப்பட்டது" என்று கூறினர். அதன் பின் மறுபடியும் அக் கோடாரியால் அப்பாறை யின் மீது அடித்தார்கள். பாறை முன்னைவிட அதிகமாகப் பிளந்து அதிலிருந்து முன்பு போன்று ஓர் ஒளிப்பிழம்பு தோன்றி மறைந்தது "அல்லாஹு அக்பர்...! பாரசீக நாட்டின் திறவு கோல் என்னிடம் தரப்பட்டது" என்று நபி(ஸல்) உரத்துக் கூறினார். மீண்டும் ஒருமுறை அப் பெருங்கல்லை கோடரியால் ஓங்கி அடித்தார்கள். முன்பு போல் ஓர் ஒளிக்கதிர் மின்னி மறைந்தது. உடனே நபி (ஸல்) "யமன் நாட்டின் திறவுகோல் என்னிடம் அருளப் பெற்றது" என்று இயம்பினர். அதன் பின்னர் தம் தோழர்களைப் பார்த்து, "முத லாவது அடியின் போது சிரியா விலுள்ள ரோமப் பெருமன்னரின் அரண்மனையும், இரண்டாவது அடியின் போது பாரசீக பேரச சின் மணிமாடமும், மூன்றாவது அடியின் போது யமன் நாட்டுத் தலைநகரிலுள்ள கொலு மண்ட பமே என் கண்முன் பளிச்சிட் டன!" என்றும் அச்சமயத்தில் வானவரும் நம்முன் தோன்றி அவையெல்லாம் விரைவில் முஸ்லிம்களின் வயப்படும் என்று நன்மாராயம் கூறியதாகவும் அறிவித்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் இப் பொழுது செய்த முன்னறிவிப்பு கள் மூன்றும் பின்பு உண்மை யாயின. சிறிது காலத்தில் சிரியா (ரோம்), பாரசீகம், யமன் ஆகிய மூன்று நாடுகளும் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டன.

உதாரணத்திற்கு ரோம் நாட்டின் வரலாற்றை காண்போம். ரோமர்களுக்கும், பாரசீகர்களும் அரபு நாட்டின் எல்லைப் பகுதியில் ஆட்சி செய்து கொண்டிருந்தனர். அரபு நாட்டின் வடக்குப் பகுதி யுள்ள சிரியா, பாலஸ்தீன், டிரான்ஸ் ஜோர்டான் முதலிய நாடுகள் பல அரபு சிற்றரசர்களது ஆதிக்கதின் கீழ் இருந்தன. அச்சிற்றரசர்கள் மீது ரோமச் சக்கரவர்த்திக்கு செல்வாக்கிருந்தது. ரோமச் சக்கர வர்த்தியின் ஆதரவின் பேரில்தான் அவர்கள் ஆட்சி புரிந்து சக்கர வர்த்திக்கு கப்பங்கட்டிக் கொண்டி ருந்தனர். அரபு நாட்டின் வட கிழக்குப் பிரதேசத்தில் பாரசீகர் களுக்கு ஆதிக்கமிருந்தது. இவ் விருவரும் அக்காலத்தில் வல்லரசு களாக இருந்தனர். இவ்விரு வருக்கும் நபி(ஸல்) அவர்கள் காலத்தில் யுத்தம் மூண்டது. இந்த யுத்தத்தில் ரோமர்கள் தோல்வி யுண்டனர். பாரசீகர்கள் வெற்றி பெற்றனர். இதையே குர் ஆனில் அல்லாஹ்:

"நமக்குச் சமீபமான பூமி யிலுள்ள 'ரூம்' வாசிகள் தோல்வி அடைந்தனர். அவர்கள் இன்று தோல்வியடைந்த போதிலும் அதிசீக்கிரத்தில் வெற்றி அடை வார்கள்" குர்ஆன் (30:2,3) என்று கூறுகிறான்.

ரோமர்கள் கிருஸ்தவர்கள்; வேதக்காரர்கள், முஸ்லீம்களும் வேதக்காரர்களே. ஆனால் பாரசீ கர்கள் விக்கிரஹ வழிபாடு புரிவர்கள். திருமக்காவிலுள்ள முஷ்ரிக்குகளும் விக்கிரஹ வழிபாடு புரிபவர்கள். ரோமர் களை பாரசீகர்கள் வென்றதால் திருமக்காவிலுள்ள முஷ்ரிக்குகள் ஆனந்தமடைந்து விக்கிர வாழிபாடுக்காரர்களான எங்கள் சகோதரர்கள் வேதக்காரர்க ளாகிய உங்கள் சகோதரர்களை வென்று விட்டனர். நாங்களும் உங்களை வெல்வோம் என்று கூறினர். இது முஸ்லிம்களுக்கு மன வருத்தத்தையும் துக்கத்தை யும் அளித்தது. அவர்கள் கவலைப்பட்டனர். அப்பொழுது இறைவன் இவ்வசனத்தை அருளினான்.

"அதுவும் சில ஆண்டுகளுக் குள்ளாகவே வெற்றி அடை வார்கள். வெற்றி தோல்வி என்ற விஷயம். இதற்கு முன்னரும், இதற்கு பின்னரும் அல்லாஹ் வுக்கே சொந்தமானது. அவர்கள் வெற்றியடையும் அந்நாளில் நம்பிக்கையாளர்கள் அல்லாஹ் வின் உதவியைக்கண்டு மகிழ்ச்சி யடைவார்கள்" குர்ஆன் (30:04)

இவ்வசனம் அருளப்பட்டு ஏழாம் ஆண்டின் துவக்கத்தில் ரோமர்களுக்கும், பாரசீகர் களுக்கும் மீண்டும் யுத்தம் தொடங்கி அதில் பாரசீகர்கள் தோல்வியடைந்து ரோமர்களும் வெற்றி அடைந்தனர்.

"கலபத்தீர் ரூம், வஹும் மின் பஅதி கலஃபிஹிம் ஸயுஃல பூன்" என்றும் ஒரு கிராஅத் இருந்து வருகிறது. இக்கிரா அத்தின்படி ரோமர்களை (பாரசீகர்கள்) வென்றுவிட்டால் (பாரசீர்களர்காகிய) அவர்கள் தங்களது வெற்றிக்குப் பிறகு விரைவில் தோல்வி அடைவர்கள்" என்றும் பொருள் கொள்ளலாம். தவிர ரோமர்கள் வெற்றி பெற்று விட்டனர். ஆனால் அவர்கள்

தங்களது வெற்றிக்குப் பிறகு விரைவில் தோல்வி அடைவார்கள் என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விருவகை முன்னறிவிப்புகளும் பிற்காலத் தில் நிறைவேறியும் இருக்கின்றன என்பதுதான் வற்றாத ஆச்சரியமாக இருக்கிறது! அதாவது ரோமர்கள் மீண்டும் பாரசீகர்களை வென்றுவிட்டனர். அப்புறம் ஹளரத் உமர்ஃபாரூக் (ரலி) அவர்கள் காலத்தில் நிகழ்ந்த ஷாம் யுத்தத்தில் முஸ்லீம்களிடம் ரோமர் தோல்வி அடைந்தனர்.

நபி (ஸல்) அவர்கள் அகழ் யுத்தத்தில் கருங்கற் பாறையிலிருந்து பளிச்சிட்ட அனற் பொறியில் கண்ட சிரியா (ரோம்) நாட்டின் திறவுகோல் முஸ்லிம்களுக்கு கிடைத்துவிட்டது. நபி (ஸல்) மனத்தை ஒருமுகப்படுத்தி கண்ட காட்சி தத்ரூபமாக நிஜமாகியது. சற்று விஞ்ஞான ரீதியில் இதைப் பற்றி ஆய்வு செய்வோம்.

மனத்தால் ஒருமுகப்படுத்தப்பட்ட எண்ணங்களினால் உண்டாகும் பிம்பத்தை புகைப் படச் சுருளில் பதிய வைக்க முடியும் என்கிறது விஞ்ஞானம்..! இப்படி மனதில் உருவான பிம்பத்தை புகைபடமாக்கும் யுக்திக்கு "Thoughtography" எனப்படும்.

இத்தகைய திறமை முதன் முதலாக நிரூபித்துக்காட்டியவர் டெட் சீரியோஸ் (Ted Serious) என்கிற அமெரிக்கர்தான். 1958ல் ஹிப்னாடிசம் பற்றிய கருத்தரங்கில் பங்கேற்பதற்காக டெட் சீரியோஸ் சென்றிருந்தார். ஹிப்னாட்டிசம் பற்றி விளக்கிக் கொண்டிருந்த ஒருவர் ஹிப்னாட்டிசத்திற்கு உட்பட விருப்பம் உள்ளவர்கள் மேடைக்கு வரவும் என அழைப்பு விடுத்தவுடன் டெட் சீரியோஸ் மேடைக்குச் சென்றார். டெட் சீரியோஸ் ஹிப்னாட்டிச தூக்கத்தில் ஆழ்த்தப்பட்டான்.

ஹிப்னாடிசத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த டெட் சீரியோஸ் பிரபல கடற்கொள்ளைக்காரனான ஜூன் லாபிட்டி (Jean Lafitle)ன் ஆவியை சந்தித்தாகவும், புளோரிடாவின் கடலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மிக விலை மதிப்புள்ள புதையல் புதைந்து கிடப்பதாக அந்த ஆவி தன்னிடம் கூறியதாகவும் சொன்னார்.

புதையல் இருப்பதாக கடற்கொள்ளைக்காரனின் ஆவி தன்னிடம் கூறிய இடத்தை மிக விளக்கமாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டார் டெட் சீரியோஸ். அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் எல்லா பத்திரிகைகளிலும் அது மிகவும் பரபரப்பான செய்தியாக வெளியிடப்பட்டது. புதையலைத் தேடிச் செல்ல தேவையான பண வசதி டெட் சீரியோசிடம் இல்லாமல் இருந்ததால், அவர் ஒரு பெரும் பணக்காரரை தனது கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டு கிளம்பினார். ஆனால் செய்தியை வாசித்த பலரும் அவருக்கு முன்னதாக அந்த இடத்தில் தேடி புதையலைக்கண்டு பிடித்து விட்டனர்! டெட் சீரியோசும்அவர் கூட்டாளியும் ஏமாற்றத்துடன் திரும்பினர். மீண்டும் பலமுறை வேறு புதையல்கள் இருக்கும் இடங்களைத் தன் எண்ணங்களை ஒருமுகப்படுத்தி கண்டுபிடிக்கும் முயற்சியில் டெட் சீரியோஸ் இறங்கினார்.

பல முறை முயன்றும், குழப்பமான பல உருவங்கள் பகுதிகள் அவரது மனத்திரையில் தோன்றின. ஆனால் அவற்றை சரியாக டெட் சீரியோசால் விளக்கிக் கூற முடியவில்லை.

ஏமாற்றத்தால் பொறுமை யிழந்து வந்த அவரது கூட்டாளி ஒரு முறை வெறுப்பில் தன்னிடம் இருந்த போலராய்டு கேமிராவை டெட்டின் கையில் திணித்து "உன்னால் விளக்க முடியாவிட்டால் புகைப்படமாக எடுத்துக் கொடு" என டெட் சீரியோசின் கையில் திணித்தார்.

ஏன் முயற்சிக்க கூடாது என நினைத்த டெட் சீரியோஸ் இந்த காமிராவை தன் முகத்துக்கு நேராகப் பிடித்துக்கொண்டு தனது எண்ணங்களை ஒரு முகப்படுத்தி காமிராவை 'கிளிக்' செய்தார். வெளிவந்த போலராய்ட் படத்தைப் பார்த்த டெட் சீரியோஸ் அதிர்ச்சியில் உறைந்து போனார். அவர் மனதில் நினைத்திருந்த உருவம் சரியாக அப்படியே புகைப்படத்தில் வெளிவந்திருக்கிறது! இதில் ஆச்சரியமான ஒரு விஷயம் சில வேளைகளில் டெட் சீரியோஸ் தன் மனதை ஒரு முகப்படுத்தும் போது இதுவரையில் அவர் சென்று பார்த்திராத, கேள்விபடாத சில இடங்கள் கூட உருவங்களாக பிம்பமாக அவர் மனதில் தோன்றி புகைப்படங்களாக எடுக்கப்பட்டன!

பக்கத்தில் உள்ள புகைப் படம் வாஷிங்டனில் உள்ள பாராளுமன்றக் கட்டிடத்தை (Capital Building) டெட் சீரியோஸ் மனதில் நினைத்தபோது எடுத்த படம். இந்த படம் கனடாவில் உள்ள ராயில் கனாடியன் குதிரை வீரர் படையின் அலுவலகம் (The Royal Canadian Mounted Police) ஆனால் அதிலுள்ள எழுத்துக்களைக் கூர்ந்து பாருங்கள்.

*கனாடியன் (Canadian) என்பது எழுத்துப் பிழையுடன் சைனாடியன் (Sainadian) என்று பதிவாகியுள்ளது.*

*1965-ல் கொரோடோ நகரிலுள்ள ஒரு கடையின் படங்கள் டெட் சீரியோசின் எண்ணப் புகைப்படங்களாக பதிவாயின. அதுவரையில் டெட் சீரியோஸ் கொலரோடோ நகருக்கு சென்றதே இல்லை!*

*எண்ணப்புகைப்படங்களில் அந்த கடையில் பெயர் "The Old Gold Store" எனப் பதிவாகியிருந்தது. ஆனால் கொலரோடோ நகரில் சென்று பார்த்த போது, அந்த கடை அச்சாக அப்படியே அங்கே இருந்தது. ஆனால் பெயர் மட்டும் வேறு "The Old Wells Fargo Express Office" என்றுபெயர்பலகை இருந்தது.*

*பின்னர் பழைய ஆவணங்களைப் புரட்டி பார்த்த போது சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் அந்தக் கடை "The Old Gold Store" என்ற பெயரில் இயங்கி வந்திருக்கிறது என்பது கண்டு பிடிக்கப்பட்டது. . .!*

*டெட் சிரியோஸ் போலவே நினர் குலாஜினா என்ற பெண்மணி இவர் கட்டிடங்கள் இயற்கைக் காட்சிகள் போன் றவை இல்லாமல் கணித உருவங் களை (சதுரம், வட்டம், முக் கோணம்) மனதில் நினைத்து புகைப்படத்தில் பதிவு செய்யும் திறமை கொண்டவராய் இருந்தார். டெட் சிரியோஸ்க்கும் நினா குலாஜினாவுக்கும் இந்த திறமை கொஞ்ச ஆண்டுகளில் மாயமாக மறைந்தும் போய் விட்டது. . ! இருவரையும் எத்தனை யோ பரிசோதனைகள் செய்தும் போலி என நிரூபிக்க முடிய வில்லை.*

*பல விஞ்ஞானிகள் கடைசியில் அவர்களது திறமைகளை ஒத்துக் கொண்டனர்! ஆனால் இது எப்படி சாத்தியம் என்பதற்கான விஞ்ஞான விளக்கம்தான். இது வரையில் கிடைக்கவில்லை! விஞ் ஞானத்திற்கு அப்பாற்பட்ட நிகழ் வுகளும் உண்டு என்பதற்கு இவை சாட்சிகளாக உள்ளன. . . .வாசகர் கள்! உங்களிடம் போலராய்டு காமிரா இருக்கிறதா. . .? (ஆதாரம்: கலைக்கதிர் ஏப்ரல் 2009-பக்கம் 14)*

# ஹலால் இந்தியாவின் வெற்றி!

ஆரோக்கியமான உடலுக்கு, ஹலால் உணவு என்ற முழக்கத்தை முன் வைத்து உலகெங்கும் வெற்றி நடை போட்டுவருகின்றது ஹலால் இந்தியா நிறுவனம்.

இஃது இந்தியாவிலும் திறம்பட இயங்கிவருகின்றது. இப்போது இது உலக அரங்கில் பல அங்கீகாரங்களைப் பெற்றுள்ளது.

மலேசியாவில் இயங்கிவரும் சர்வதேச ஹலால் இன்டகிரிட்டி அலையன்ஸ் என்ற நிறுவனம் இப்போது இதனை அங்கீகரித்துள்ளது.

இஃது சவூதி அரேபியாவில் மையங்கொண்ட இஸ்லாமிக் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அண்டு இண்டஸ்டிரி என்ற இஸ்லாமிய நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனம்.

இப்போது இன்றர்டெக் டெஸ்டிங் கம்பெனி என்ற ஹலால் உணவுகளைச் சோதனை செய்யும் நிறுவனம் இதில் அங்கம் வகிக்கின்றது.

சிங்கப்பூர் நிறுவனங்கள் சிலவும் ஹலால் இந்தியா நிறுவனத்தில் இணைந்துள்ளது.

*ஆதாரம்: நெட்.ஹலால் இந்தியா*
*எம்.ஜி.எம்.*

**கண்டதும் கேட்டதும்**

# தினமணிக்கு மறுப்பு

**அன்பார்ந்த வாசகர்களே!**

**நம்முடைய தொடர் பிரச்சாரத்தின் மூலம் இந்து பயங்கரவாதத்தின் உண்மை முகம் அம்பலமாகி வருகின்றது. மும்பைத் தாக்குதல் பற்றியும் அதில் கர்கரே கொல்லப்பட்டது பற்றியும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திக்விஜய் சிங் ஐயங்களை எழுப்பி வருகிறார். இதுபற்றி தலையங்கம் எழுதிய தினமணி ஸ்பெக்ட்ரம் ஊழலை மறைக்கவே காங்கிரஸ் இந்து பயங்கரவாதம் பற்றிப் பேசுவதாகக் கூறியதோடு திக்விஜய் சிங் அவர்கள் எழுப்பிய ஐயங்கள் அனைத்தும் உளறல் என்று எழுதியிருந்தது. அதற்கொரு மறுப்புக் கடிதத்தை நமது துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி எழுதியிருந்தார். அதை தினமணி இருட்டடிப்புச் செய்து இந்துத்துவா சேவையைத் தொடர்கிறது. உண்மையை மக்களுக்கு விளக்கிட அக்கடிதம் இங்கே வெளியிடப்படுகிறது.**

*அன்புள்ள ஆசிரியருக்கு,*

*13.12.2010 தினமணியில் 'உதறலால் வருவல் உளறல்' தலையங்கம் படித்தேன்.*

*மாலேகான் குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்களை கர்கரே அவர்கள் விசாரித்துக் கொண்டிருந்த போதுதான், அவருக்கு மிரட்டல் வந்துள்ளது என்பதை அவரின் மனைவி கவிதா கர்கரே ஒப்புக் கொள்கிறார்.*

*கர்கரே கொல்லப்பட்ட உடனே பாராளுமன்றத்தில் "இதில் இந்துத்துவவாதிகளின் கை இருக்கிறதா?" என்று கண்டறிய வேண்டும் என்று சிறுபான்மை நலத்துறையின் அப்போதைய அமைச்சர் அந்துலே குரல் கொடுத்தார்.*

*கர்கரேயுடன் கொல்லப்பட்ட காம்தி என்ற காவல்துறை அதிகாரியின் மனைவி வினிதா காம்தி எழுதிய "கடைசி குண்டு வரை" என்ற நூலுக்கு கவிதா கர்கரே வழங்கியுள்ள முன்னுரையில் "என் கணவர் அணிந்திருந்த குண்டு துளைக்காத கவசம் சரியானதாக இருந்திருந்தால் அவர் காப்பாற்றப்பட்டிருப்பாரே. . . என்ற கேள்வி என்வாழ்நாள் முழுவதும் என்னைக் துரத்திக் கொண்டேயிருக்கும்" என்று கூறியிருக்கிறார்.*

*கர்கரே யாரால் கொல்லப்பட்டார் என்று அறிந்திட வேண்டும் என்றால் அவர் ஏன் கொல்லப்பட்டார் என்று அறிய வேண்டும்.*

*ஜனநாயகத்தையும் மதச் சார்பின்மையையும் இந்தியாவிலிருந்து அப்புறப்படுத்தி விட்டு இங்கே ஓர் இந்து ராஷ்டிராவை நிறுவிட இஸ்ரேல் நாட்டின் துணையை நாடும் அளவுக்கு தீவிரமான வேலைகளை அபிநவ் பாரத் என்ற இந்துத்துவா அமைப்பு செய்து வந்ததைக் கர்கரே கண்டு பிடித்தார். அவருக்கு மிரட்டல் வந்தது. கொல்லப்பட்டார்.*

*"அவர் கொல்லப்பட்ட சம்பவத்தின் போது நேர்ந்த குளறுபடிகளும் அந்தத் தேதியிலேயே பெரிதாக விவாதிக்கப் பட்டன" என்று தலையங்கத்தின் வரிகள் கூறுகின்றன. அவை ஏதோ ஒன்று நடந்திருப்பதை ஒப்புக் கொள்கின்றன.*

*மஹாராஷ்டிரா காவல் துறையின் முன்னாள் உயர் அதிகாரி எஸ்.எம். முஷ்ரிப் அவர்கள் "Who Killed Karkare?" என்றொரு ஆங்கில நூலை எழுதியுள்ளார். "கர்கரே-ஐ கொலை செய்தது யார்?" என்ற பெயரில் அதன் தமிழாக்கத்தை எங்களுடைய தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்-ன் வேர்கள் வெளியீட்டகம் சார்பில் வெளியிட்டோம்.*

*இதுவரை எட்டு மொழிகளில் அந்நூல் வெளிவந்துள்ளது. தமிழகத்தில் மட்டும் "கர்கரே-ஐ கொலை செய்தது யார்?" என்ற தலைப்பில் 16 கூட்டங்கள் நடத்தி மும்பை தாக்குதல் சம்பவத்தின்*

உண்மை முகத்தை மக்களுக்கு அடையாளம் காட்டி வருகிறோம்.

நேற்று 12.12.2010 அன்று சென்னை திருவல்லிக்கேணி ஷேக்தாவூது தெருவில் பொதுக் கூட்டம் நடத்தினோம். மக்கள் மன்றம் உண்மையை அறிந்து வருகிறது.

திக் விஜயசிங் அவர்கள் இக்கருத்தை திடீரென்று கூற வில்லை பத்திரிக்கையாளர் அஜீஸ் புர்னீ எழுதியுள்ள "ஆர்.எஸ்.எஸூம் 26/11-ம்" என்ற உருது மொழி நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றினார் திக் விஜயசிங். அதன் பின் இது சர்ச்சையாகி இருக்கிறது.

"கர்கரே -ஐ கொலை செய்தது யார்?" "கடைசி குண்டு வரை", "ஆர்.எஸ்.எஸூம் 26/11-ம்" ஆகிய மூன்று நூல்கள் இதுவரை மும்பைத் தாக்குதல் பற்றி வெளி வந்துள்ளன.

இந்நூல்கள் முறையே ஒரு காவல்துறை அதிகாரி, 26/11 தாக்குதலில் கொல்லப்பட்ட காவல் துறை அதிகாரியின் மனைவி, மூத்த பத்திரிகையாளர் ஆகிய மூன்று பொறுப்புள்ளவர்கள் எழுதிய நூல்கள்.

ஆனால் தினமணி தலையங்கம் 26/11 சம்பவம் பற்றி ஏதும் அறியாத ஒருவர் எழுதியது போலிருக்கிறது.

கசாப் துப்பாக்கி ஏந்தி யிருப்பது போல் நெருக்கமான புகைப்படத்தை எடுத்த பத்திரிக் கையாளர் நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வரவேயில்லை.

எல்லாக் கேள்விகளையும் சந்தேகங்களையும் உளறல் என்ற ஒற்றைச் சொல்லால் மூடிவிட தினமணி முயல்கிறதோ என்ற ஐயம் எழுகிறது.

தாங்கள் விரும்பினால் தங்களை நேரில் சந்தித்து மேலதிக விபரங்களைப் பகிர்ந்து கொள்ளவும் எங்கள் அறக்கட்டளை தயாராக இருக்கிறது.

உண்மையை நிலை நாட்டும் போராட்டத்தில் இணைந்து பணியாற்றுவோம். இந்தியாவைக் காப்போம்.

**இவ்வண்ணம்**

**கே.எம். இல்யாஸ்ரியாஜி**
**பொருளாளர்**
**தாருல் இஸ்லாம்**
**பவுண்டேஷன் டிரஸ்ட்**

**வாசகர்களே!**

**பத்திரிக்கைகளில் வரும் பொய்ச் செய்திகளை மறுத்து நீங்கள் உண்மையை விளக்கும் வகையில் அதற்கு கடிதம் எழுதி யிருந்தால் அதன் நகலை வைகறைக்கும் அனுப்புங்கள்.**

**சம்மந்தப்பட்ட பத்திரிக் கைகள் உங்கள் கடிதத்தை பிரசுரிக்கா விட்டால் உங்கள் விளக்கம் கருத்தாழம்மிக்கதாக இருக்கும் பட்சத்தில் 'வைகறை'யில் நாம் அதை வெளியிடுவோம்.**

**இன்ஷா அல்லாஹ்**


# வைகறை விஷன் - வீடியோ -சி.டி., டி.வி.டி

1. நாளைய முஸ்லிம் பெண்கள் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
2. இஸ்லாம் தாக்கப்படுவது ஏன்? (மு.குலாம் முஹம்மது)
3. இஸ்லாமிய நாகரிகம் (மு. குலாம் முஹம்மது)
4. முஸ்லிம்கள் பலமும், பலவீனமும் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
5. இஸ்லாம் சோதனைகள், சவால்கள், சாதனைகள் (மு. குலாம் முஹம்மது)
6. எதிர்காலம் இஸ்லாத்திற்கே (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
7. கர்கரேயை கொன்றது யார்? புத்தக வெளியீட்டு விழா (மதுரை)

தொடர்புக்கு : **வைகறை விஷன்**

52/1, மண்ணடித் தெரு, 4வது மாடி, அறை எண் 7, மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 044-45566909

# 10 ஆம் ஆண்டு நினைவேந்தல்:

# பேரறிஞர் அலீ மியான் (ரஹ்)

அபுல்ஹசன் ஆலீ நத்வீ (ரஹ்) டிசம்பர் - 31ம் நாள் 1999 ஆம் ஆண்டு (ரமழான் பிறை 22 ஹிஜ்ரி 1420) வெள்ளிக்கிழமை ஜுமுஆ தொழுகைக்காக குளித்து நறுமணம் பூசி தயாராகிக் கொண்டிருந்தார். வெள்ளிக்கிழமை பள்ளிவாசலுக்குக் கிளம்பும் போது யாசீன் ஓதுவார். அன்றும் ஓதினார். பள்ளிவாசலுக்குச் செல்ல முற்பட்டார். ஆனால் அல்லாஹ்வின் நாட்டப்படி அவனிடம் சென்றார் இன்னாலில்லாஹி. . .

ஹிஜ்ரி 1333 ஆம் ஆண்டு முஹர்ரம்பிறை 6-ஆம் நாள் (கி.பி. 1914) இந்தியாவின் உத்திரப்பிரதேச மாநிலம் ரேபரேலி எனும் ஊரில் தகிய்யா காலன் எனும் பகுதியில் பிறந்தார் அபுல் ஹசன் அல் நத்வீ. தன் ஒன்பதாம் வயதில் தந்தையை இழந்தார்.

இவர்களின் தந்தை மவ்லானா சய்யிது அப்துல்ஹை ஹசனி நத்வி அவர்கள் மிகச் சிறந்த மார்க்க அறிஞர். “இந்தியாவில் இஸ்லாமியக் கலாச்சாரம்”, “இஸ்லாமிய ஆட்சியில் இந்தியா” உள்ளிட்ட நூல்களை எழுதியுள்ளார்கள்.

அலீ மியான் என்பது அபுல் ஹசன் அலீ நத்வீ (ரஹ்) வின் செல்லப்பெயர். அவர்களின் தாயாரும் சிறந்த மார்க்க அறிஞர். திருக்குர் ஆனை மனனம் செய்துள்ளார். நூல்களும் எழுதியுள்ளார்.



அறிஞர் அலீ மியான் (ரஹ்) வின் முன்னோர்கள் அரபுலகத்தைச் சார்ந்தவர்கள். ஹிஜ்ரி ஏழாம் நூற்றாண்டில் அவர்கள் இந்தியாவில் குடியேறினார்கள்.

லக்னோவிலுள்ள ‘நத்வத்துல் உலமா’ கலாசாலையில் மார்க்கக் கல்வி கற்ற அலீமியான் (ரஹ்) 1934-ல் அங்கு ஆசிரியராகப் பொறுப்பேற்றார்கள். அப்போது அன்னாரின் வயது இருபது.

இந்தியாவில் பல்வேறு அடக்குமுறைக்கு இலக்காகி வரும் தலித் சமுதாயத்தினருக்கு அல்லாஹ்வின் மார்க்கமாம் தூய இஸ்லாத்தை எடுத்துரைப்பதில் பெரும் பங்காற்றினார்.

1935-ல் பம்பாய் சென்று அம்பேத்கருக்கு இஸ்லாத்தை எடுத்துரைத்தார். அது, ‘இந்து மதத்தைவிட்டு வெளியேறுவதான் தீண்டாமை ஒழிந்திட ஒரே தீர்வு’ என்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் முடிவு செய்திருந்த காலம். அப்போது அலீ மியான் (ரஹ்) வின் ஆசிரியரான அரபு நாட்டின் அறிஞர் அஷ்ஷைகு முஹம்மது அரப் அவர்கள் அம்பேத்கருக்கு அலீமியான் (ரஹ்) வின் வழியாக ஒரு செய்தியைச் சொல்லி அனுப்பினார்கள்.

அம்பேத்கர் அவர்கள் “இஸ்லாத்திற்கு வந்து விட்டால் பெண் தருவீர்களா?” என்று கேட்டால் “இறைத்தூதர் நபி - ஸல் அவர்களுக்கு உதவி செய்பவர்களாகத் திகழ்ந்த மதீனாவாசிகளான அன்சாரிகளின் வாரிசான நான் என் சொந்த மகளையே

திருமணம் செய்துவைக்கத் தயாராக இருக்கிறேன்" என்று கூறுங்கள். (ஆதாரம் : Young Muslim Digest April-2000)

அப்போது அலீமியான் (ரஹ்) வின் வயது இருபத்து ஒன்று.

தன் பதினாறாவது வயதிலிருந்து அரபுமொழிகளில் கட்டுரை எழுத ஆரம்பித்தார். அலீ மியான் (ரஹ்) அவர்கள். எகிப்து நாட்டிலிருந்து வெளிவரும் "அல்மனார்" எனும் இதழில் ஸய்யித் அஹ்மது ஷஹீது (ரஹ்) அவர்களின் வீரவரலாற்றை தொடராக எழுதி வந்தார்.

1944- 1945 ஆண்டு வாக்கில் அன்னார் எழுதிய "மாதா ஹசிரல் ஆலமு பிஇன்ஹித் தாத்தில் முஸ்லிமீன்" (முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?) எனும் நூல் உலகப் புகழைத் தேடித்தந்தது. அரபு மொழியில் வெளியான இந்நூல் அரபுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 1947ம் ஆண்டில் புனித ஹஜ் பயணத்தை மேற்கொண்டபோது சவூதி மன்னரின் வரவேற்பைப் பெற்றார்கள்.1951-ம் ஆண்டில் எகிப்து சென்ற போது அங்கு அந்நூல் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருப்பதைக் கண்டு அகம் மகிழ்ந்தார்கள்.

இஸ்லாத்தை நிலை நாட்டுவதை லட்சியமாகக் கொண்டு உழைத்திடும் இஹ் வானுல் முஸ்லிமூன் இயக்கத் தோழர்களுடன் அலீமியான் (ரஹ்) க்கு அப்பயணத்தின் மூலம் தொடர்பு ஏற்பட்டது.

பேரறிஞர் ஷஹீது ஸய்யிது குதுப் (ரஹ்) பேரறிஞர் முஹம்மது அல் கஸ்ஸாலி (ரஹ்) வாழும் அறிஞர் யூசுப் அல்கர்களாவீ உள்ளிட்ட போராளிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டார்கள்.

உலகத்தின் இதயமாம் இறையில்லம் கஅபத்துல்லாஹ்வை தன் கையால் திறந்து உள்ளே நுழைந்திடும் பெறற்கரிய வாய்ப் பை 1951-1952 ஆகிய இரு ஆண்டு களில் இருமுறைப் பெற்றார்.

அரபு நாட்டிலுள்ள எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் சென்று உரையாற்றியுள்ள அலீமியான் (ரஹ்) அங்குள்ள பாடத்திட்டங்களை நவீன காலத்துக்கு ஏற்ப மாற்றி அமைத்தார். அங்கிருந்து வெளியாகும் இஸ்லாமிய அறிஞர்கள் இஸ்லாத்திற்கு எதிரான நவீன சவால்களை எதிர் கொள்ளும் திறன்மிக்கவர்களாக திகழ்ந்திட வழி வகுத்தார்.

அரபி, பெங்காலி, உருது, ஃபார்சி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமைமிக்க அலீ. மியான் (ரஹ்) ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார்கள். 1963-ல் ஆக்ஸ் போர்ட், கேம்பிரிட்ஜ் ஆகிய உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழகங்களில் Islamic Studies ஐத் தொடங்கி வைத்தார்.

துருக்கியை மையமாகக் கொண்டு மீண்டும் கிலாஃபத் - ஐ நிறுவிடும் முயற்சியாக துருக்கி நாட்டுக்கு பலமுறை பயணம் மேற்கொண்டுள்ளார். அன்னார் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களில் பெரும்பாலானவை துருக்கியை நோக்கியே இருந்தன.

உலக நாடுகள் அணு சக்தியைத் திரட்டிக் கொண்டிருக்கும் சூழலில் இஸ்லாமிய நாடுகளுக்கு அது அவசியமா? என்றொரு விவாதம் எழுந்த போது,1980-ம் ஆண்டுகளில் ஈரான் சென்று ஆயத்துல்லாஹ் கொமைனி அவர்களைச் சந்தித்து முஸ்லிம் உலகம் அணுஆயுத பலம் பெற்றிட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்கள் அலீ மியான்(ரஹ்)

இன்று அமெரிக்கா முஸ்லிம் நாடுகளிடமுள்ள அணு குண்டுகளை எண்ணி கவலைப் படுகிறது. அஞ்சுகிறது. நடுங்குகிறது என்றால் அதற்கு விதை போட்டவர்களில் அலீமியான் (ரஹ்) ஒருவர்.

இந்தியாவில் குரல் தேசப் பிரிவினைக்கு எதிராக எழுப்பினார். தேசப் பிரிவினையை எதிர்த்து ஜவஹர்லால் நேருவுக்கு கடிதம் எழுதினார். பின்னர் அக்கடிதத்தை தான் எழுதிய "இலாமமஸ்ஸவில் பிலாதில் இஸ்லாமிய்யா" (இஸ்லாமிய நாடுகளின் சீரழிவை நோக்கி) என்ற நூலின் வழியாக வரலாற்றில் பதிவு செய்தார்.

பள்ளிக் கூடங்களில் வந்தே மாதரம் பாடலைக் கண்டிப் பாகப் பாடவேண்டும் என்று பாரதீய ஜனதா அரசு சட்டம் கொண்டுவந்த போது "அரசுப் பள்ளிக் கூடங்களுக்கு இனி முஸ்லிம் குழந்தைகள் செல்ல மாட்டார்கள். கூடாது என்ற ஒரேயொரு ஃபத்வாவின் மூலம் இந்துத்துவா அரசின் சட்டத்தை வீழ்த்தினார்."

முஸ்லிம் பெண்களின் சட்டம் Muslim Women's Bill என்றொரு சட்டத்தை ராஜீவ் காந்தி கொண்டு வரமுயன்ற போது அவரை நேரில் சந்தித்து இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை விளக்கினார். மறுநாள் செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் ராஜீவ் காந்தி "இந்து மதத்தை விட அதிகமான உரிமைகளை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளது" என்றார்.

முஸ்லிமாகப் பிறந்த சல்மான் ருஷ்டி இஸ்லாத்துக்கு எதிராக எழுதி வருவதற்குக் காரணம் அவன் பயின்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் பாடத்திட்டமே என்பதை அறிந்த அலீமியான் அங்கு பயில்வோர் இஸ்லாத்தை அறிந்திட வழி செய்தார்.

"பாபரீ மஸ்ஜித் கஹாங் ஹே" என்றொரு கட்டுரையை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதியிருந்தார் அருண் ஷோரி. அதில் பல பொய்களை அவிழ்த்து விட்டிருந்தார். அலீமியான் அவர்களின் தந்தை அவர்களே கூறியதாக அந்தப் பொய்களை அமைத்திருந்தார் அருண் ஷோரி. இதனைக் கண்ட அலீமியான் (ரஹ்) இந்தியன் எக்ஸ்பிரஸ்-ன் உரிமையாளர் கோயங்காவைச் சந்தித்து உண்மையை விளக்கினார். இதன் விளைவாக அருண் ஷோரி இந்தியன் எக்ஸ்பிரஸ்- இலிருந்து விலக்கப்பட்டார்.

இவ்வாறாக எதிரியின் கோட்டைக்கே போய் சந்தித்தார். எதிர்ப்பை வீழ்த்தினார்.

அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் தலைவராக அன்னார் இருந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான சட்டங்களை முடிவுகளை முளையிலேயே பிடுங்கி எறிந்தார்.

ஏராளமான நூல்களை பேரறிஞர் அலீமியான் எழுதியுள்ளார். அவரது உரைத் தொகுப்பு கட்டுரைத் தொகுப்பு என இஸ்லாமிய அறிவுலகுக்குச் சேவையாற்றியுள்ளார்.

உருது மொழியில் 290, அரபு மொழியில் 183 ஆங்கிலத்தில் 60 என நூல்களை எழுதியுள்ள அன்னாரின் நூல்கள் பிரஞ்ச், ஃபார்சி, பெங்காலி, டர்கீஷ், மலேயா, குஜராத்தி, மலையாளம், இந்தோனிஷியா, தமிழ் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இஸ்லாத்துக்காக இவர்கள் ஆற்றிய சேவைக்காக சவூதி அரேபியாவின் பெருமைமிகு விருதான "மன்னர் பைசல் விருது" 1980ல் இவர்களுக்கு வழங்கப் பட்டது.

1981-ல் காஷ்மீர் பல்கலைக் கழகம் இவர்களுக்கு "டாக்டர்" பட்டம் வழங்கிற்று.

விருதுடன் கிடைத்த பரிசுத் தொகை முழுவதையும் ஆஃப் கானிஸ்தானில் நடந்த 'ஜிஹாத்க் காகவும் புனித மக்காவிலுள்ள இரண்டு இஸ்லாமியக் கல்வி நிறுவனங்களுக்காகவும் நன் கொடையாக வழங்கினார்கள்.'

அன்னார் அல்லாஹ்விடம் சென்றடைந்து 10 ஆண்டுகள் இறைவடைந்து விட்ட பின்னரும் கூட அவர்கள் விட்டுச் சென்ற இடம் காலியாகவே இருப்பதாகத் தோன்றுகிறது.

இஸ்லாமிய உலகத்தில் இந்தியாவுக்கே பெருமை தேடித் தந்த அந்தப் பேரறிஞரை அவர் வாழும் போது இந்திய முஸ்லிம்கள் சரியாகப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. இறப்புக்குப் பின்னர் அவரின் இடத்தை இட்டு நிரப்பவுமில்லை.

அன்னாரின் நூல்கள் வாரிசாக இருந்து வழிகாட்டுகின்றன நமக்கு.

எல்லாம் வல்ல அல்லாஹ் அந்தப் பேரறிஞரின் இஸ்லாமியப் பணிகளை ஏற்றுக் அவர்களின் மறுமை வாழ்வை சிறப்பாக்கி வைப்பானாக.

**- இல்யாஸ் ரியாஜி**

# கர்கரே நூல் 17வது அறிமுக விழா!

26.12.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் வீனஸ் மஹாலில் "கர்கரே -ஐ கொலை செய்ததுயார்" நூலின் 18-வது அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

'ஜமாஅத்துல் உலமா' இதழ் ஆசிரியர் இபுறா ஹீம் பாகவீ தலைமையேற்றார். மவ்லவீ அலீ மஹ்ழரீ வரவேற்புரையாற்றினார். நாகர் ஜின்னா தாருல் இஸ்லாமின் பணிகளை விளக்கினார்.

வைகறை ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்களும், வழக்கறிஞர் தங்கச்சாமி அவர்களும் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

மௌலவி முகமது அலி மஹ்ழரீ அவர்கள் இந்த கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். பக்கத்து ஊர்களிலும் இருந்தும் உள்ளூரில் இருந்தும் பொதுமக்கள் திரளாகப் பங்கேற்றனர்.

**ந.நி.**

# கஷ்மீர் பிரச்சனை பின்னணி என்ன?

கஷ்மீரின் கற்கள்.

இவை பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை அல்ல.

இது கஷ்மீர் மக்களின் தற்போதைய ஆயுதம்.

இந்த உண்மைக்குபின் நம் நாட்டிலுள்ள ஊடகங்கள், அரசியல் நோக்கர்கள் இவர்களெல்லாம் அந்த மக்களின் பிரச்னைகளை அரசு அவர்கள் மீது கட்டவிழ்த்திடும் பயங்கர வாதங்களை நன்றாகப் புரிந்து கொண்டார்கள்.

கஷ்மீர் மக்களின் மனதில் கனன்று கொண்டிருப்பது என்ன என்பதை அருந்ததி ராய் உரக்க முழங்கிவிட்டார். அந்த மக்கள் "விடுதலை" என்ற முழக்கத்தை முன்வைத்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள் என்றார்.

உடனேயே அவர் இராஜ குற்றம் ஒன்றை செய்துவிட்டார். கஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதி எனச் சொல்லிட முடியாது எனவும் பேசிவிட்டார் என்றொரு குற்றச் சாட்டையும் அவர்மீது எடுத்து வீசினார்கள்.

சங்கப்பரிவாரத்தினர் - இன்று நாட்டில் நடந்த எராள மான குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியவர்கள்- அருந்ததிராய் அவர்கள் மீது வழக்குகளைத் தொடர வேண்டும் எனக் கோரினார்கள். அந்த வழக்கு களும் , தேச துரோக வழக்குகள் பிரிவினையைத் தூண்டிய குற்றத் தைச் செய்த வழக்குகள் என்ற பாங்கில் அமைந்திட வேண்டும் என்றெல்லாம் கூக்குரலிட்டனர்.

ஆனால் நாமும் நாட்டு மக்களும் மனித உரிமை ஆர்வலர் களும் இப்படி "இராஜ குற்றம்" தேசத் துரோகம், பிரிவினை தேசபக்தி என்றெல்லாம் கூப்பாடு களைப் போட்டு, கஷ்மீர் மக்களின் உண்மையான பிரச்னைகளை அவலங்களை பாதுகாப்புப் படையினரின் கொலைகளை மறைக்க வேண்டாம், நாட்டு மக்களின் கவனத்தை திசை திருப்பிட வேண்டாம் என்றெல் லாம் எடுத்துக் காட்டினோம்.

ஆனாலும் அருந்ததி ராய் மீது வழக்குத் தொடர்ந்தே ஆக வேண்டும் என அடம் பிடித்தார்கள் பரிவாரத்தினர்.

டெல்லியில் இந்தக் கூட்டம் நடந்தால் டெல்லி (பாட்லா ஹவுஸ்) காவல் நிலையத்தில் புகார் ஒன்றையையும் பதிவு செய்தார்கள்.

புகாரைப் பெற்றக் காவல்துறை அருந்ததிராய் மீது வழக்குத் தொடர எதுவுமில்லை. அவர் தனது பேச்சுரிமையைப் பயன்படுத்தி உள்ளார் என்று கூறியது.

ஆனால் டெல்லியில் உள்ள நீதிமன்றத்திற்கு வழக்கை எடுத்துச் சென்றார்கள். குண்டு வெடிப்பு களில் குற்றஞ்சாட்டப்பட்டு நிற்கும் சங்கப் பரிவாரத்தினர்.

நீதிமன்றத்திலும், அரசின் சார்பில் வழக்காடிய வழக்கறிஞர், 'அருந்ததிராய் மீது வழக்கு தொடர போதிய முகாந்தரங்கள் இல்லை' என வாதாடினார்.

ஆனால் நீதிமன்றம் அருந்ததி ராய் மீது முதல் தகவல் அறிக்கையொன்றை பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிட்டது.

நீதிமன்றத்தின் ஆணையை மையப்படுத்தி அருந்ததிராய் கஷ்மீர் பற்றிய பல உண்மைகளை மக்கள் அறிய தந்திருக்கின்றார்.

அந்த உண்மைகளில் கஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியல்ல என்று நான் மட்டும் சொல்லிடவில்லை மாறாக இதை அன்றே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். பண்டித ஜவஹர்லால் மீதும் நீங்கள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யலாம் என வாதித்திருக்கின்றார். இதில் பல வரலாற்றுக் உண்மைகள் தரப்படுகின்றன அவற்றை இங்கே தருகின்றோம்.

# இந்திய யூனியன் உருவானது எப்படி?

அருந்ததி ராய் சொல்லும் விளக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் நவீன இந்தியா உருவான வர லாற்றை நாம் சிறிது தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்கு விடுதலை தரும் சட்டம் ஒன்றை பிரிட்ட னின் நாடாளுமன்றம், 11 ஜூலை 1947ல் நிறைவேற்றியது. இந்தச் சட்டத்திற்கு பிரிட்டனின் நாடாளுமன்றம் வைத்த பெயர் Indian Independence Act 1947. இந்தியாவின் விடுதலைச் சட்டம் 1947.

இந்தச் சட்டத்தின் பின் னணியில் Princely States என்ற இந்திய மாநிலங்கள் தாங்கள் விரும்பும் நாட்டோடு இந்தியா வுடனோ பாகிஸ்தானுடனோ இணைந்திடலாம் என உறுதியும் தரப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் பல மாநிலங்கள் அவற்றின் கீழிருந்த குறுநில மன்னர்கள், ஆட்சியாளர் கள் இவர்களெல்லாம் இந்தியா வுடன் இணைந்தார்கள். நான்கு மாநிலங்கள் மட்டும் இந்தியா வுடன் இணையவில்லை.

**ஜுனாடாஹ்**

அவை ஷவ்ராஷ்டிராவி லுள்ள கத்தியவார் தீப கற்பத்தைச் சார்ந்த "ஜுனாடாஹ்". இது குஜராத்திற்கு பக்கத்திலுள்ள ஒரு தீபகற்பம். நிலத்தால் இந்தியா வுடன் கட்டுண்ட ஒன்று. இதில் பெருவாரியாக வாழ்ந்து கொண் டிருந்தவர்கள் இந்து பெருங்குடி மக்கள். ஆனால் ஆட்சிச் செய்து கொண்டிருந்தவர் முஹம்மத் முஹாபத் கஞ்சு என்ற முஸ்லிம் மன்னர். இவர் பாகிஸ்தானோடு இணையும் ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டார்.

இதை அடுத்து அக்டோபர் 1947இல் இந்தப் பகுதிக்கு எந்தப் பொருளையும் அனுப்ப மாட் டோம் என முடிவெடுத்தது இந்தியா. பொருளாதாரம் ஸ்தம் பித்தது. 25 அக்டோபர் 1947இல் மன்னர் லாகூருக்கு ஓடிவிட்டார். அந்தப் பகுதி இந்தியாவுடன் (இப் போதைய குஜராத்தின் ஒரு பகுதி) இணைந்தது.

**ஹைதராபாத்**

2. அடுத்து ஹைதராபாத் என்ற மாநிலம். இது இந்தியா விலிருந்த பெரிய ஆட்சி மண்ட லம். இதை ஆட்சி செய்து கொண்டிருந்த உஸ்மான் அலீகான் ஆசஃப்ஷா VII, சுதந்திர நாடாக ஹைதராபாத் ஐ வைத்துக் கொள்ள விரும்பினார். அதாவது ஹைதராபாத், இந்தயாவுடனோ பாகிஸ்தானுடனோ இணையாமல் சுதந்திர நாடாக இருக்கும் என அறிவித்தார். தாங்கள் சுதந்திர நாடாக இருப்பதை இந்தியாவும் உலக நாடுகளும் அங்கீகரிக்க வேண்டும் என்றும் விரும்பினார். இந்தியா கெடுபிடிகளைக் கட்ட விழித்துவிட்டது. இதனால் தனது சுதந்திரநாடு என்ற நிலைக்கு ஆபத்து இந்தியாவிடமிருந்து வரும் என்பதை உணர்ந்த ஹைதராபாத் நிஜாம் அவர்கள், இந்தியாவுடன் 29 நவம்பர் 1947 இல் "Standstill Agreement" நிலைமை அப்படியே இருக்கும் என்றொரு ஒப்பந்தத்தைப் போட் டது. இதன்படி நாடு விடுதலை அடைவதற்கு முன்பு அதாவது 15 ஆகஸ்ட் 1947க்கு முன் ஹைதரா பாத் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இருக்கும் என்பதை உறுதிப் படுத்திக் கொண்டது.

ஆனால் காங்கிரஸ் அரசு, இந்தியாவின் நடுவே இன்னொரு நாடு இருப்பதை விரும்பவில்லை. அது நல்லதல்ல என நினைத்தது. ஆகவே ஹைதராபாத் காவல் துறை நடவடிக்கை என்று பின்னாளில் வரலாற்றில் பதியப் பட்ட "Hyderabad Police Action" காவல் துறை நடவடிக்கையை இந்திய அரசு 13 செப்டம்பர் 1947 அன்று மேற்கொண்டது. இதற்கு "Operation Polo" ஆப்பரேஷன் போலோ என்று அப்போதைய இந்திய உள்துறை பெயரும் வைத்தது.

உண்மையில் "Police Action" காவல்துறை நடவடிக்கை அல்ல. மாறாக ராணுவ நட வடிக்கை தான். இதை உலக நாடுகள் An Action of war: இராணுவ நடவடிக்கை எனக் குறிப்பிட்டன. இதை வரலாற்றாசிரியர் மஜும்தா Indian Troops Marched into Hydera bad State என்றே குறிப்பிட்டார்.

இப்படி ஹைதராபாத் இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றாக இணைக்கப்பட்டது. (An Advanced History of Indian .R.C. Majundar H.C. Raychaudhur, Kalikinar Datta: Page 1003)

இங்கே இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். திருவிதாங் கூர் மகாராஜாவும், திருவிதாங்கூர் தனி நாடாகத் தானிருக்கும் என அறிவித்தார், தேச பிரிவினைக்குப் பின். தேசப் பிரிவினைக்கு முன் அவர் இந்தியாவுடன் இணைய வேண்டும் எனக் கூறி இருந்தார்.

ஆனால் பின்னர் தேசப் பிரிவினைக்குப் பின் தான் தந்த வாக்குறுதி செல்லாது. காரணம் தேசத்தை நீங்கள் இந்தியா என்றும், பாகிஸ்தான் என்றும் பிரிக்க முடியும் என்றால், ஏன் திருவிதாங்கூரை தனியாக சுதந்திர நாடாக கருதக்கூடாது எனக் கூறினார். இராணுவ நடவடிக்கை மூலம். திருவிதாங்கூர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

**கஷ்மீர்**

3. கஷ்மீர் இந்தியாவுடன் இணைய மறுத்த முன்றாவது மாநிலம் - (சமஸ்தானம்) - கஷ்மீரில். இங்கே 77.11 சதவிகிதம் முஸ்லிம்களும் 20.12 சதவிகிதம் இந்துக்களும் 2.77 சீக்கியர்களும், புத்தர்களும் வாழ்ந்தார்கள். கஷ்மீரின் அப்போதைய மொத்த மக்கள் தொகை 40,21,165 நாற்பது லட்சத்து இருபத்து ஒரு ஆயிரத்து நூற்று அறுபத்து ஐந்து பேர் (1941) இதன் மொத்த நிலபரப்பு 84,471 சதுர மைல்கள்.

முஸ்லிம்கள் பெருவாரியாக வாழ்ந்த இந்த மாநிலத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தவர் ஹரி சிங் என்ற இந்து மன்னர். முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்தவர்கள்தாம் அப்போதைய கஷ்மீர் சட்டசபை யில் (Legislature Assemblyஇல்) ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானம் இப்படிக் குறிப்பிட்டது. “நிலைமையை மிகவும் உன்னிப்பாக சீர்தூக்கிப் பார்த்து இந்த அவை இந்த மாநிலம் (The State of Kashmir) பாகிஸ்தானோடு இணைவது தவிர்க்க முடியாதது. மாநிலத்தின் பூகோள இணைப்பு, பொருளாதாரம், மொழி, கலாச்சாரம், மதம் இவற்றாலான பிணைப்பு இவையெல்லாம் இதை உறுதி செய்கின்றார்.



ஆனால் ஆட்சி செய்து கொண்டிருந்த மஹாராஜா ஹரி சிங், ஓர் சுதந்திர நாடாக, தனி நாடாக வைத்துக் கொள்ள முடிவு செய்தார். ஆனால் அவருடைய பிரதம அமைச்சர் மெஹர் சந்த் மஹான், வேண்டாம் எனக் கூறிவிட்டார். காரணம் தனி நாடாக நாம் மாறினால் பின்னாளில் சைனாவோ ரஷியாவோ நம்மை தாக்கி தன் வயப்படுத்திடலாம் என்றார். இந்த அச்சத்தை அவர் ஆலோசனையாக தந்திடவே மகாராஜா ஹரி சிங் சுதந்திரநாடு என்ற திட்டத்தைக் கைவிட்டார்.

பிரதம அமைச்சரின் அச்சத்தில் அர்த்தமிருந்தது. கஷ்மீரின் எல்லையில் சைனாவும், ரஷ்யாவுமிருந்தது. கஷ்மீரின் எல்லைகள் வட கிழக்கில் திபெத், வடக்கில் சைனாவின் துர்கிஸ்தான் வட மேற்கில் ரஷ்யாவின் துர்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகியவை இடம் பெறுகின்றன. இதனால் பிரதம அமைச்சரின் ஆலோசனையை மஹாராஜா ஏற்றுக் கொண்டார்.

இந்நியையில் தான் மார்சு திங்கள் 1947ஆம் ஆண்டு மகாராஜா கஷ்மீர் மக்கள் மீது மிகவும் கெடுபிடிகளான வரிகளை சுமத்தினார். இதை “Repressive Tax” என வரலாற்றில் குறிப்பிடுகின்றனர். அதாவது மக்கள் அமுங்கிப் போகும் அளவிலான வரி யொன்று சுமத்தப்பட்டது.

இந்த வரிச்சுமையை தாழமாட்டாமல் மக்கள் மகாராஜாவுக்கு எதிராகக் கிளர்ச்சிகளைச் செய்தார்கள். ஆகஸ்ட் 1947 ஆண்டு, அந்தக் கிளர்ச்சியாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார். வரிசுமைகளுக்கெதிரான கிளர்ச்சி பூஞ் பகுதியில் தான் தொடங்கியது. இந்தக் கிளர்ச்சியாளர்களோடு பாகிஸ்தானோடு இணைந்திட வேண்டும் என்ற கருத்துடையவர்களும் இணைந்து கொண்டார்கள். மகாராஜாவின் கெடுபிடிகள் அதிகமாகவே மக்கள் எதிர்ப்பும் வலுத்தது. மகாராஜா செய்த அநியாயங்களை வரலாறு இப் படிப் பதிவு செய்தது. In August 1947, Maharaja’s fired at demonstrators who supported joining Pakistan burned whoe villages and mascared innocent people.

இதன், பொருள், 1947 ஆகஸ்ட்டு மாதம் மகாராஜாவின் படைகள் பாகிஸ்தானோடு இணைந்திட வேண்டும் என்ற ஆர்ப்பாட்டக்காரர்களைச் சுட்டார்கள். பல கிராமங்களை முழுமையாக எரித்துச் சாம்பலாக்கி, அப்பாவி மக்களை கூட்டாகக் கொலை செய்தார்கள்.

கஷ்மீரிலுள்ள பூஞ் பகுதி ஆர்பாட்டக்காரர்கள் தாங்கள் மகாராஜாவிடமிருந்து விடுதலை அடைந்த கஷ்மீர் ஒன்றை உருவாக்கி விட்டதாக 24 அக்டோபர் 1947 இல் அறிவித்தார்கள். இது நிலைமையை இன்னும் மோசமாக்கியது.

மகாராஜா ஹரி சிங் அவர்களுக்கு பாகிஸ்தானோடு சோந்திட மனமில்லை. மக்களோ தாங்கள் ஏராளமாக மடிந்தாலும் தங்கள் கோரிக்கையை விடுவதாக இல் லை. இதனால் மகாராஜா ஹரி சிங் பாகிஸ்தானோடு இணை வதை தள்ளிப்போட பாகிஸ்தா னோடு ஒரு “Stand Still Agreement” நிலையை தக்க வைக்கும் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டனர்.

ஆனால் முஸ்லிம்கள் மீதான கெடுபிடிகளைத் தொடர்ந்தார். இதனால் ஆத்திரமடைந்த வட எல்லைப் பகுதியில் வாழ்ந்த புஷ்துக்கள் என்ற முஸ்லிம்கள் - மகாராஜாவுக்கெதிரான கிளர்ச்சியில் தங்களையும் இணைத்துக் கொண்டார்கள். புஷ்து இன மக்கள், இவர்கள் முஸ்லிம்கள் கொரில்லா வகைப் போரில் வல்லவர்கள். இவர்கள் கொரில்லா போர் ஒன்றை தொடங்கினார்கள். இவர்களின் போரையும் கஷ்மீர் முஸ்லிம்களின் ஆர்ப்பாட்டத்தை யும் தாங்கிட முடியாமல் ராஜ ஹரிசிங், வைசிராய் மவுண்ட பேட்டனிடம் உதவி கேட்டார். மவுண்ட் பேட்டன் இந்திய படைகளை அனுப்பி உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் பதிலுக்கு கஷ்மீரை இந்தியாவுடன் இணைத்திட வேண்டும் எனவும் கூறினார். நாடு விடுதலை அடைந்த பின்னரும் சில காலம் பவுண் பேட்டன் வைசிராயாக இருப்பார் என்பது இந்திய விடுதலை சட்டத்தின் ஒரு பகுதி.



பண்டித நேரு, ஹரிசிங், ஷேக் அப்துல்லாஹ் பேச்சுவார்த்தை

தனது படைகளால் புஷ்த்து முஸ்லிம்களின் தாக்குதலை தாக்குபிடிக்க இயலாது என்பதால், வேறு வழி இன்றி கஷ்மீர் மகாராஜா ஹரிசிங் ஒத்துக் கொண்டார். 24ஆம் நாள் அக்டோபர் 1947 ஆம் நாள் இந்தியப் படைகள் அனுப்பப்பட்டன. 26 அக்டோபரில் 1947ல் இணையும் ஒப்பந்தம் கையெழுத்தானது.

அப்போது கஷ்மீரில் மக்கள் தலைவராக திகழ்ந்த ஷேஹ் அப்துல்லாஹ் ஜம்மு கஷ்மீர் தேசிய கான்பிரன்ஸ் என்றொரு அமைப்பை நடத் தினார். அவரே ஹரிசிங் மகாராஜாவுக்குப் பின் கஷ்மீரின் ஆட்சித் தலைவராக நியமிக்கப் பட்டார்.

நடந்த நிகழ்வுகளால் ஆத்திரமடைந்த பாகிஸ்தான் ஐக்கிய நாடுகள் சபையில் பிரச்னையை எழுப்பியது. ஐக்கிய நாடுகள் சபையில் பண்டித நேரு எங்கள் இணைப்பு தற்காலிகமானது. கஷ்மீர் மக்கள் கருத்துக்களைக் கேட்டுத்தான் இறுதி முடிவு எடுப்போம் என்று கூறினார். பாகிஸ்தானும் தனது தரப்பு வாதங்களை சொன்னது. இந்தப் பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபை ஒரு குழுவை கஷ்மீருக்கு அனுப்பியது அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் தான் ஐக்கிய நாடுகளின் பாது காப்பு சபை தீர்மானம் எண் 47 ஐ 1948 21ஆம் நாள் நிறைவேற்றியது.

அன்று அந்த மக்களுக்குத் தந்த வாக்குறுதி இன்றளவும் நிறைவேற்றப்படவில்லை. இதையே அருந்ததிராய் இங்கே பல்வேறு ஆதாரங்கள் வழி குறிப்பிடுகின்றார்.

4. திரிபுரா இதுவும் சுதந்திரமாக இருக்கவே விரும்பியது. இதுபோன்றதொரு நடவடிக்கை மூலம்தான் அதுவும் இணைக்கப்பட்டது.


Sources: 1. An Advanced History of India - R.C. Majundar, H.C. Rayachaudhuri, Kalikinkar Datta. London Macmillan & Co. Second Edition.

2. The Transfer of Power in India by V.P. Menon

3. Freedom at Midnight: Dominique Ladierre & Larry Collins Refrim 2007.

# அருந்ததி ராயின் அறிக்கை

நான் டெல்லியில் பேசியதைத்தான் பண்டித நேரு அவர்கள், 27. 10.1947 இல் சொன்னார்.

(27.10.1947) இல் பண்டித நேரு - இந்தியாவின் பிரதம அமைச்சர் பாகிஸ்தானின் பிரதம அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய தந்தியில், இப்படிக் கூறினார்.

1. ***நான் ஒன்றை தெளிவு படுத்திட விரும்புகின்றேன். கஷ்மீரில் தற்போது (1947 இல்) ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு உதவி செய்வது என்பது கஷ்மீரை இந்தியாவுடன் இணைத்துக் கொள்வதற்கான திட்டமிட்ட செயலல்ல. (இந்த நெருக்கடி நிலை மக்கள் கிளர்ச்சி, புஷ்து முஸ்லிம்களின் கொரில்லா தாக்குதல் என்பதை மேலே தெளிவு படுத்தியுள்ளோம்)இதில் எங்களுடைய கருத்து என்னவெனில் தர்கத்துக்குரிய எந்த பகுதியையும் (மாநிலத்தையும்) இணைப்பது அல்லது இணைக்காம விருப்பது என்பது அந்தந்த பகுதியிலுள்ள மக்களின் விருப்பப்படியே நடக்க வேண்டும். இந்தக் கருத்தை நாங்கள் இடைவிடாமல் மக்கள் மன்றத்தில் சொல்லி வருகின்றோம். இந்தக் கொள்கையை நாங்கள் பின்பற்றி வருகின்றோம்.***

*ஆதாரம் :* (Telegram 402, Primin 2227 dated: 27 October 1947. to PM of Pakistan, repeating telegram addressed to PM of UK)

(as quoted in The Hindu : page 10 of November 28, 2010)

2. ***இன்னொரு தந்தியில் (31 அக்டோபர் 2010) பண்டித நேரு அவர்கள், பாகிஸ்தான் பிரதமரிடம் இப்படிக் கூறினார். கஷ்மீரை இந்தியாவோடு இணைத்தது, கஷ்மீர் மகாராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கத்தான் அத்தோடு அங்கு அதிகமாக வாழ்ந்திடும் மக்களின் பிரதிநிதியாக இருக்கும் அமைப்பின் ஒப்பு தலும் இதற்குண்டு. இந்த அமைப்பு ஷேஹ் அப்துல்லாஹ் நடத்திய ஜம்மு கஷ்மீர் தேசிய கான்பிரன்ஸ் கட்சியைக் குறிப்பிடுகின்றார். அது அதிகமாக முஸ்லிம் அங்கத்தினர்களைக் கொண்டது. இருந் தாலும் அதன் இணைப்பை (கஷ்மீரின் இணைப்பை) ஒரு நிபந்தனையுடனயே ஏற்றுக் கொள்கின்றோம். அந்த நிபந்தனை சட்டம் ஒழுங்கு நிலை நிதான நிலைக்கு திரும்பியவுடன் கஷ்மீரின் மக்கள்தாம் இணைவதைப் பற்றி முடிவு எடுப்பார்கள். அந்த மக்கள் தான் எந்த நாட்டுடன் (இந்தியாவுடன் அல்லது பாகிஸ்தானுடன்) இணைவது என்பதை முடிவு செய்வார்கள்.***

(Telegram no. 255, dated 31st October 1947)

**இணைப்பு பிரச்னை**

3. ***1947 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2 ஆம் நாள் நாட்டு***



***மக்களுக்கு வானொலி மூலம் ஆற்றிய உரையில் பண்டித நேரு அவர்கள், இப்படிக் குறிப்பிட்டார்கள். நெருக்கடியான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி கஷ்மீர் மக்களுக்கு தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு முழு வாய்ப்புகளையும் வழங்காமல் (கஷ்மீரை இந்தியாவோடு இணைப்பதில்) நாங்கள் ஆத்திரப்படமாட் டோம். கஷ்மீர் மக்கள் தான் இதில் இறுதி முடிவை எடுக்க வேண்டும். நான் நமது கொள்கை ஒன்றை தெளிவுப்படுத்திட விரும்புகின்றேன். எந்த ஒரு மாநிலத்தையும் இந்தியாவுடன் இணைப்பதில் அல்லது பாகிஸ்தானுடன் இணைப்பில் பிரச்னையாகுமேயானால் இணைப்பு என்பது அந்த மக்களால் முடிவு செய்யப் படுவதாகவே இருக்க வேண்டும். இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான்***

கஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் பத்திரத்தில் ஒரு தனிப் பிரிவை சேர்த்திருக்கின்றோம்.

4. நவம்பர் 3 ஆம் நாள் 1947 ஆம் ஆண்டு நாட்டு மக்களுக்கு ஆற்றிய இன்னொரு உரையில் பண்டித நேரு அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள். நாங்கள் ஏற்கெனவே பிரகடனப் படுத்தியபடி கஷ்மீரின் இறுதி முடிவு கஷ்மீர் மக்களின் கைகளில்தாம் இருக்கின்றது. இந்த உறுதியை நாங்கள் கஷ்மீர் மக்களுக்கு மட்டுமல்ல, உலக மக்களுக்கே வழங்கி இருக்கின் றோம். நாங்கள் இதிலிருந்து திரும்பிப் போக முடியாது, போக மாட்டோம்.

5. 21 நவம்பர் 1947 ஆம் நாள் பாகிஸ்தான் பிரதம அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், “நான் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கின்றேன் கஷ்மீரில் அமைதியும், சட்ட ஒழுங்கும் திரும்பிய உடன் கஷ்மீரின் இணைப்பு, கருத்துக் கணிப்பு மக்களின் வாக்கெடுப்பு (Referendum) இவற்றின் மூலம் தான் முடிவு செய்யப்படும். இந்த கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு இவை ஐக்கிய நாடுகளின் பார்வையின் கீழ் நடைபெறும்”.

ஆதாரம்:Nehru’s Letter No.: 368 Primin dated 21, November 1947.


### ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பு

6. நவம்பர் 25,1947 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய அரசியல் நிர்ணய சபையில், (Indian Constituent Assembly) பண்டித நேரு அவர்கள், இப்படிக் குறிப்பிட்டார் கள்.

நம்முடைய நம்பகத் தன்மையை நிரூபிப்பதற்கு நாம் ஓர் ஆலோசனையை வழங்கி இருக்கின்றோம். அது, (கஷ்மீர்) மக்களுக்கு தாங்கள் யாரோடு இணைந்திட வேண்டும் என்பதை அவர்கள் தங்கள் எதிர்காலத்தை முடிவு செய்கின்ற வாய்ப்பினை வழங்கிடும் போது அந்த மக்களின் கருத்துக்களை பெறுவோம். அதையும் ஐக்கிய நாடுகள் சபையைப் போன்ற ஓர் பாரபட்சமற்ற அமைப்பின் மேற் பார்வையின் கீழ்தான் நடத்துவோம். இப்போது கஷ்மீர் எதிர் நோக்கும் பிரச்சனை, மக்களின் எதிர்காலத்தை முடிவு செய்ய வேண்டியது வன்முறை யையும், அடக்கு முறையுமா? அல்லது மக்களின் விருப்பமா என்பதே!

7. 1948 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 5 ஆம் நாள் இதே அரசியல் அமைப்பு சபையில் தாக்கல் செய்த அறிக்கையில் பண்டித நேரு அவர்கள் மேலும் இப்படிக் குறிப்பிட்டார் கள்.

இணைப்பின் இந்த நேரத்தில் கூட நாங்கள் யாருடைய கோரிக்கையுமில்லாமல், ஓர் அறிவிப்பைச் செய்கின்றோம். அது கஷ்மீர் மக்களின் கருத்துக்களைத் தெரிந்திடாமல், அதுவும் ஓர் கருத்துக் கணிப்பின் மூலமோ ஓர் வாக்கெடுப்பின் மூலமோ கஷ்மீர் மக்களின் கருத்துக்களை தெரிந்து அந்த மக்களின் விருப்பத்திற்குக்



கட்டுப்படுவோம். அத்தோடு நாங்கள் இன்னொன்றையும் சொல்லிடக் கடமைப்பட்டுள்ளோம். கஷ்மீரில் மக்களின் உண்மையான பிரதிநிதித்துவ அரசு ஒன்று அமைந்திட வேண்டும். அதே போல் சர்வதேச கண்காணிப்பின் கீழ் கஷ்மீர் மக்களின் கருத்துக்களைத் தெரிந்திடும் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை நடத்திட வேண்டும்.

Source: The Statement of Pandit Nehru in the Indian Constituent Assembly on 5th March 1948.

8. 16 ஜனவரி 1951 இல் லண்டனில் நடைபெற்ற பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இப்படிக் கூறினார்கள்.

கஷ்மீர் மக்கள் தாங்கள் எந்த நாட்டோடு இணைந்திட வேண்டும் என்ற முடிவை எடுத்திட ஐக்கிய நாடுகளின் சபையுடன் இந்தியா உழைக்கும் என அடிக்கடி இந்தியா கூறி இருக்கின்றது. இதில்

**கஷ்மீர் மக்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திர மாகச் தெரிவிக்க எல்லா வசதிகளும் செய்துத் தரப் படும். ஒரு வெகு ஜன வாக்கெடுப்பு கஷ்மீர் மக் களிடையே நடத்தப்படும் அதன் மூலம் கஷ்மீர் மக்கள் தங்கள் எதிர்காலத் தை முடிவு செய்து கொள்ளலாம் என்பது நாங்கள் தொன்று தொட் டே கூறி வருவது. உண் மையில் ஐக்கிய நாடுகள் சபை இதில் வருவதற்கு முன்பே இது எங்களது முடிவாக இருக்கிறது.**

**எந்த நாட்டோடு சேர்ந்திட வேண்டும், என்பதை முத வில் கஷ்மீர் மக்கள் முடி வெடுக்க வேண்டும். பின் னர் இந்தியாவும் பாகிஸ் தானும் நேரடியாக முடிவெ டுக்கும். இங்கே ஒன்றை நினைவு கூர வேண்டும். நாங்கள் (இந்தியாவும் பாகிஸ் தானும்) பல விவ காரங்களில் ஒப்பந்தங் களைச் செய்துள்ளோம். நான் சொல்வது பல அடிப்படை விஷயங் களைப் பேசித் தீர்த்திருக் கின்றோம் என்பதை ஒரு விஷயத்தை நாங்கள் எல் லோரும் ஒத்துக் கொண்டு ள்ளோம். அது கஷ்மீர் மக்கள் தாம் தங்கள் எதிர்காலத்தை உள்ளேயும் வெளியேயும் முடிவு செய் திட வேண்டும். எங்க ளுடைய ஒப்பந்தமில்லாம லே எந்த நாடும் கஷ்மீர் மக்களுக்கு விருப்பமுமில் லாமல் கஷ்மீரை தங்க ளோடு இணைத்திட இய லாது.**

Source: The Statesman
18th January 1951

*மேலே நாம் குறிப்பிட்ட வற்றில் பண்டித ஜவஹர்லால் நேரு தொடர்ந்து ஒன்றை குறிப்பிட்டு வருவதை நாம் உணரலாம்.*

*அது கஷ்மீர் மக்களின் எதிர் காலத்தை கஷ்மீர் மக்களே முடிவு செய்திட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.*

*இதையே தொடர்ந்து பண்டித நேரு அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் ஜூலை ஆறாம் நாள் கூறினார்.*

*ஜனவரி 2ஆம் நாள் 1952 ஆம் ஆண்டு டாக்டர் முகர்ஜி என்பவரின் கேள்விக்குப் பதில் சொல்லிடும் போதும் குறிப் பிட்டார். இதில் இன்னும் கொஞ்சம் தெளிவாகக் குறிப்பிட்டி ருந்ததால், அதனை இங்கே குறிப்பிடுகின்றோம்.*

***டாக்டர் முகர்ஜியின் கேள்வி:*** *கஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதியை பாகிஸ்தானே வைத்தி ருக்கின்றது. இது விவகாரத்தில் காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது.*

***பண்டித நேருவின்பதில் :*** *(கஷ்மீர்) அது இந்தியாவின் சொத் தோ பாகிஸ்தானின் சொத்தோ அல்ல. மாறாக, அது கஷ்மீர் மக்களுக்குச் சொந்தமானது. கஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த போது நாம் கஷ்மீர் மக்களின் தலைவர்களிடம் தெளிவாகச் சொன்னோம். 'கஷ்மீர்' மக்களின் தீர்ப்புக்கு நாங்கள் கட்டுப்படு வோம். அந்த மக்கள் நீங்கள் வெளியேறுங்கள் என்று சொன் னால் கஷ்மீரை விட்டு வெளி யேறுவதில் எந்தத் தயக்கத்தையும் காட்டிட மாட்டோம். நாம் இதை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் சென்றுள்ளோம். அங்கே மிகவும் அமைதியான முறையில் கஷ்மீர் பிரச்னையைத் தீர்த்திட நாங்கள் முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை தெளிவுப்படுத்தியுள் ளோம். நாம் ஒரு பெரும் தேசம் என்ற அடிப்படையில் நாம் அதிலிருந்து பின் வாங்கிட இயலாது. இறுதி முடிவை கஷ்மீர் மக்களிடமே விட்டுவிடு கின்றோம். நாம் அந்த மக்களின் முடிவுக்கு கட்டுப் படுவது என முடிவு செய்திருக் கின்றோம்.*

*இந்த வாக்குறுதி இன்ற ளவும் நிறைவேற்றப்படவில்லை*

*அருந்ததி ராய், இவற்றையெல்லாம் மேற்கோள் காட்டி என்மீது வழக்குத் தொட முடியுமென்றால் அதே வழக்கை நேருவின் மீதும் தொடரலாம் என்கின்றார்.*

Source :The Hindu
Sunday Nov.28, 2010

*இந்தப் பின்னணிகள் அன்று முதலே கஷ்மீர் மக்கள் மீது தொடருவது அநியாயம் என்பது தெளிவாகும்.*

*இப்போதைய நிலையில் கஷ்மீர் மக்கள் பாகிஸ்தானோடு இணைந்திட விரும்பம் உள்ளவர் களே என்பது சந்தேகமோ அவர்கள் இந்தியாபின் கெடுபிடி களிலிருந்து அநியாயங்களி லிருந்தும், "விடுதலை" வேண்டும் என்றே கோரி வருகின்றார்கள்.*

*இதுவே அருந்ததிராயின் கருத்து.*

*இனி அருந்ததிராய் மீது தொடரப்படம் வழக்கில் அவர் ஜெயித்தால் நிலைமை என்ன வாகும்? வழக்குத் தொடர்வோர் கவனிக்கவும்*

***எம்.ஜி.எம்.***

# கர்கரே நூல் : 16வது அறிமுக கூட்டம்! சென்னையில் பிரமாண்ட பொதுக்கூட்டம்!



பெருகி வரும் தீவிரவாதத்தை எதிர்க்கும் முகமாக தீவிரவாத எதிர்ப்பு பொதுக்கூட்டம் ஒன்று 12.12.2010 அன்று சென்னை இராயப்பேட்டை ஐஸ்ஹவுஸ் ஷேக் தாவூத் தெருவில் நடைபெற்றது. இக்கூட்டம் நடைபெற போவது தெரிந்ததுமே பல பேர்களின் வயிற்றில் இது புளியை கரைத்தது. இந் நிகழ்ச்சியை விளம்பரப்படுத்தும் நோக்கில் நாம் வைத்திருந்த விளம்பர பலகைகளை அகற்றும்படி ஐஸ்ஹவுஸ் பகுதி டி3 காவல் நிலைய ஆய்வாளர் உத்தரவிட்டார். ஆனால் அப்பகுதி பொது மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துகூட்டம் கூடவே இறுதியில் அந்த விளம்பர பலகையில் உள்ள ஒரு சில படங்கள் நீக்கி விட்டு அதை கருப்பு மையிட்டு அழித்து விட்டு மீண்டும் வைத்துக் கொள்ளுங்கள் என கூறிவிட்டார். திருவல்லிக்கேணி காவல் நிலைய எல்லைக்குள் வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகை டி1 காவல் நிலைய ஆய்வாளரால் நீக்கப்பட்டு உடைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக போனில் மாவட்ட பொறுப்பாளர் சாதிக் அவர்கள் அணுகிய போதுஅவர் விஷமத்தனமாகவும் நம்மை கோபப்படுத்தும் விதமாகவும் பதிலளித்தார். இன்னும் சிலரோ நம் நிகழ்ச்சி வெற்றிகரமாக நடக்கக் கூடாது என்ற எண்ணத்தில் நம்முடைய போஸ்டர்களின் மீது வேறு சில போஸ்டர்களை ஒட்டியிருந்தார்கள்.



இது போன்ற பல தொல்லைகளை மீறி இந்நிகழ்ச்சி அல்லாஹ்வின் கிருபையால் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. சுமார் ஆயிரத்துக்கும், அதிகமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அனைவரும் எந்தவித சலசலப்புமின்றி 100க்கும் மேற்பட்ட காவல்துறையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் ஆரம்பம் முதல் கடைசி வரை இருந்து கருத்துகளை மனதில் ஏற்றிச்சென்றனர்.

வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் மாவீரன் கர்கரே என்ற தலைப்பிலும் விடுதலை இராஜேந்திரன் பெருகிவரும் இந்துத்துவா தீவிரவாதம் என்ற தலைப்பிலும் வழக்கறிஞர் முத்துக் கிருஷ்ணன் பாபரி மஸ்ஜித் தொடரும் அநீதி தலைப்பிலும் உரை நிகழ்த்தினார்கள்.




# கர்கரேயை கொலை செய்தது யார் ?

## நிலை (GEARS CHANGE) மாற்றம்

*35) ஜுலை-ஆகஸ்ட் 2008: பிரமோத் முத்தலிக் என்பவன் ராஷ்டிரீய ஹிந்து சேனா (RHS) என்ற இயக்கத்தை தீவிரவாதத்திற்கு எதிரான இயக்கம் என்ற பெயரில் R.S.Sன் சிந்தனையொத்த இயக்கமாக ஆரம்பித்தான். மாநிலம் முழுவதிலுமுள்ள 700 பேரையும் பெங்களூரிலிருந்து 150 பேரையும் கொண்டு இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மாநிலத்திலிருந்து தீவிரவாதத்தைக் களைவதற்காகத் தான் இவ்வியக்கம் தொடங்கப் பட்டதாக முத்தலிக் தெரிவித்தான். (புனே மிரர் 23 ஆகஸ்ட் 2008)*

*பிரமோத் முத்தலிக் ஸ்ரீராம் சேனாவிற்கும் தலைவனாவான். 432 ஹிந்து மனித வெடிகுண்டுகள் அவனுடைய தலைமையில் அவனுடைய இயக்கத்தில் சேர்ந்திருப்பதாகக் கூறினான். மங்களூரிலும், பெல்காமிலும், ஷிமோகாவிலும் ஸ்ரீராம் சேனா இத்தகைய தற்கொலை படையினருக்கு பயிற்சியளித்ததாகவும் கூறினான். (தி மில்லி கெஜட் 1-15 நவம்பர் 2008)*

*36) 2 ஆகஸ்ட் 2008: பைசாபாத்தில் (உ.பி) கோர்ட் வளாகத்தில் சாதுவின் வேஷத்தில் இருந்த ஒரு தீவிரவாதி வெடிக்கும் நிலையில் வெடிகுண்டுகளை தன்னுடைய பையில் வைத்து எடுத்து வந்தார். அவர் பெயர் நன்காவு தாஸ் (தி மில்லி கெஜட் 1-5 நவம்பர் 2008)*

*37) 24 ஆகஸ்ட் 2008: கான்பூரில் (உ.பி) ராஜீவ்மிஷ்ரா மற்றும் புபேந்தர்சிங் என்ற பங்ரங்தள் இயக்கத்தைச் சேர்ந்த இருவர் வெடிகுண்டுகளை தயாரித்துக் கொண்டிருந்த போது வெடித்து இறந்துவிட்டனர். இவர்கள் மிகப்பெரிய தாக்குதல்களை நிகழ்த்த திட்டமிட்டிருந்ததாக கான்பூர் மண்டல IGP செய்தியாளர்களிடம் கூறினார். மிக அதிக அளவிலான வெடிகுண்டுகளைத் தவிர ஒரு டைரியும், கையில் வரையப்பட்ட ஒரு வரைபடமும்*

சென்ற இதழ் தொடர்ச்சி

*(பெரோஸாபாதில் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் இடங்களை பற்றியது) அங்கு கிடைத்தது. (அவுட்லுக் 15 செப்டம்பர் 2008 கம்யுனலிஸம் கோம்பட் செப்டம்பர் 2008)*

*இந்த வழக்கின் விசாரணையில் STF, பஜ்ரங் தளத்தின் உறுப்பினர்கள் மும்பையை சேர்ந்த 2 செல்போன்களை தொடர்ச்சியாகக் குண்டு வெடிப்புக்கு முன் தொடர்பு கொண்டதைக் கண்டுபிடித்தது. பின்னர் விசாரணையில் அந்த 2 எண்களின் சிம் கார்டுகளும் போலி பெயரில் வாங்கப்பட்டது தெரிய வந்தது. அந்த சிம்மிலிருந்து அழைக்கப்பட்ட தொலைபேசி விவரங்களை பெற அந்த சேவையை வழங்கிய தொலைபேசி நிறுவனத்தை காவல் துறை தொடர்பு கொண்டது. மிஷ்ராவின் வீட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இந்த வெடிகுண்டு குவியல் குஜராத் பெங்*

களூர் போன்ற குண்டு வெடிப்புகளை நிகழ்த்த போதுமானது என்று காவல்துறையினர் கூறினர். (டைம்ஸ் ஆஃப் இந்தியா, மும்பை 29 அக்டோபர் 2008)

38) 21 செப்டம்பர் 2008: துரேஷ் காமத் என்பவர் சட்ட விரோதமாக அதிக அளவில் ஜெலட்டின் குச்சிகளையும் டெட்டனேட்டர்களையும் மற்ற வெடி பொருட்களையும் புத்தூரிலுள்ள தனியார் வணிக வளாகத்தில் பதுக்கி வைத்ததற்காக தக்ஷின் கன்னடா கர்நாடகாவின் குற்றப்பிரிவு காவல்துறை, மங்களூர் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப் பட்டார்.

39) 3 அக்டோபர் 2008: பஜ்ரங்தள் மற்றும் வி.எச்.பி 2 அக்டோபர் 2008 அன்று தசரா விழாவை முன்னிட்டு நடத்திய "துர்கா மாதா தவ்த்" ஊர்வலத்தில் இளைஞர்கள் கத்தி, கம்பு, கொடிகளுடன் பங்கேற்றனர். (லோக்மட் தினசரி, புனே, 4 அக்டோபர் 2008)

இதே போன்று மஹாராஷ்டிரா முழுவதும் பல ஊர்வலங்கள் நடத்தப் பட்டன. அதில் கத்தி, கம்பு, விளக்குகள், திரிசூலங்கள் போன்றவற்றுடன் முஸ்லிம்களுக்கு எதிரான குரல்கள் எழுப்பப்பட்டன. இதில் மிகப் பெரிய ஊர்வலம் சங்லியில் 5000 பேருடன் நடந்தது.

40) 29 செப்டம்பர் 2008: பி.ஜே.பி.யின் மாணவர் அணியான ABVP-யோடு தொடர்புடைய இந்தூரை மையமாகக் கொண்டு இயங்கும் இந்து ஜாக்கிரண் மஞ்ச் தீவிரவாத குழுவினர் மாலேகானிலும் (மகாராஷ்ட்ரா). மொடாசாவிலும் (குஜராத்) குண்டு வெடிப்புகளை நிகழ்த்தினார்கள். இதில் 7 பேர் (அனைவரும் முஸ்லீம்கள்) கொல்லப் பட்டனர் (இந்தியன் எக்ஸ்பிரஸ், புனே, 23 அக்டோபர் 2008) பின்னர் இந்த வழக்கு விசாரணையில் அபினவ் பாரத் என்ற இந்துத்துவ பிராமணிய தீவிரவாத குழுவும், சில ராணுவ அதிகாரிகளும், சில மதத் தலைவர்களும் இந்த குண்டு வெடிப்புகளில் ஈடுபட்டு கொண்டிருந்தது தெரிய வந்தது. இதே கும்பல்தான் சம்ஜவ்தா எக்ஸ்பிரஸ், அஜ்மீர் தர்கா மற்றும் இன்னும் சில இடங்களில் நடந்த குண்டு வெடிப்புகளுக்கும் காரணம் என சந்தேகிக்கப்பட்டது.

இதன் பின்னணியில் பல குண்டு வெடிப்புகளின் உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன. 2002 - முதலே அபினவ் பாரத் தீவிரவாத குழு நாடளவில் பல குண்டு வெடிப்புகளை நிகழ்த்த தயாராகிக் கொண்டிருந்தது. டிசம்பர் 2002-ல் மத்தியப் பிரதேசப் போலீசார் போபால் இரயில் நிலையத்தில் சில வெடிக்காத வெடிகுண்டுகளைக் கண்டெடுத்தார்கள். ஒரு வருடத்திற்கு பிறகு இதே போன்றதொரு வெடி குண்டு போபாலின் லம்பா கேராவுக்கு அருகில் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த இரண்டும் தப்லீக் ஜமாத்தின் முக்கியஸ்தர்களைத் தாக்குவதற்காக வைக்கப் பட்டது. அவர்கள் 5 லட்சம் முஸ்லீம்கள் கூடக் கூடிய கூட்டத்திற்கு வருகை தர இருந்தார்கள். இராம நாராயண் கல்சங்கராம் மற்றும் சுனில் ஜோஷி இந்த இருவரும் தான் இதற்கு காரணம் என்று கண்டு பிடிக்கப்பட்டது. அந்த இருவருக்கும் பின்னர் அபினவ் பாரத்தில் உயர்ந்த பதவிகள் கொடுக்கப் பட்டன என்று மகாராஷ்டிரா ATS ஆல் கண்டு பிடிக்கப்பட்டது. இவர்களையும் இதில் தொடர்புடைய இன்னும் சில பஜ்ரங்தள் உறுப்பினர்களையும் ATS விசாரித்தது. (தி இந்து, டெல்லி, 20 நவம்பர் 2008). ஆனால் இந்த விசாரணையின் மூலம் என்ன வெளியானது அல்லது என்ன நடவடிக்கை இந்த தீவிரவாதிகளுக்கு எதிராக எடுக்கப் பட்டது என்பது தெரியவில்லை. மாறாக இவர்கள் மிகவும் சுதந்திரமாக நடந்து செல்ல அனுமதிக்கப் பட்டார்கள். இவ்வாறு இவர்களை விடாமல் இருந்து இருந்தால் மாலேகான், மொடசா, அஜ்மீர், சம்ஜவுதா எக்ஸ்பிரஸ், மக்கா மஸ்ஜித் மற்றும் இன்னும் சில இடங்களில் நடந்த குண்டு வெடிப்புகள் நடந்திருக்காது.


(தொடரும்)




உங்கள் ஃபைலை மற்றவர்கள் திறக்கவே கூடாது. அதை திறப்பதற்கு Password கொடுத் தால் மட்டுமே திறக்க வேண்டும் என நீங்கள் விரும்பி னால் அவ்வாறும் செய்யலாம்.

அதற்கு முதலில் எந்த ஃபைலை Password Protection கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அந்த ஃபைலை Open செய்து கொள்ளுங்கள்.

பின்னர் Save as என்ற Optionஐ தேர்வு செய்யுங்கள். அதில் வருகின்ற திரையில் Tools என்ற பட்டனின் மூலையில் சிறியதாக தெரிவதை கிளிக் செய்யுங்கள். அதில் வருகின்ற மெனுவில் General என்பதை தேர்வு செய்து கொள்ளுங்கள்.







அடுத்ததாக வரும் திரையில் உங்கள் ஃபைலை திறக்க என்ன பாஸ்வேர்ட் தர விரும்புகிறீர்களோ அதை தாருங்கள். அதே போல் உங்கள் டாகுமென்டை மாறுதல் செய்ய என்ன பாஸ்வேர்ட் தர வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதனையும் தாருங்கள்.





பின்னர் OK என்பதை தேர்வு செய்யுங்கள். அடுத்தாக வரும் திரையில் நீங்கள் ஃபைலை


Open செய்வதற்கும் மாறுதல் செய்வதற் கும் என்னென்ன பாஸ்வேர்ட் தந்தீர்களோ அதையே மீண்டும் தாருங்கள்.





பின்னர் Save என்பதை தேர்வு செய்து உங்கள் பாஸ் வேர்ட்களை உங்கள் ஃபைலில் Save செய்து கொள்ளுங்கள். பின்னர் உங்கள் ஃபைலை மூடிவிட்டு திரும்பவும் Open செய்யுங்கள்.




இப்போது உங்கள் ஃபைலை செய்யும்போது அதனை திறக்க Password கேட்கும். சரியான பாஸ்வேர்ட் தரவில்லை என்றால் டாகுமென்ட் திறக்காது. பின்வரக் கூடிய Error Message உங்களுடைய திரையில் தோன் றும். சரியான பாஸ்வேர்டை தந்தால் மட்டுமே திறக்கும். அதே





போல் அடுத்ததாக மற்றொரு பாஸ்வேர்டை கேட்கும் அது உங்கள் டாகுமென்டை மாற்றம் செய்ய அனுமதி வழங்குவதற்காக கேட்கப்படும் பாஸ்வேர்ட். இதில்




நீங்கள் சரியான பாஸ்வேர்ட் தரவில்லையென்றால் டாகுமென்ட் Read Only என்ற முறையில் திறக்கும். இவ்வாறு திறக்கப்படும் ஃபைல்களை படித்துக் கொள்ளலாம். அதே ஃபைலில் மாற்றம் ஏதும் செய்யமுடியாது. அப்படி ஏதாவது மாற்றம் செய்து Save செய்தாலும் அது வேறு ஃபைலில் தான் Save ஆகும்.

கடைசியாக நாம் பார்க்க இருப்பது View என்ற டூல். இதில்



உள்ள டூல்கள் பல டூல்களை திரையில்கொண்டு வரவும் மறைக்கவும் செய்ய உதவும்.

இதில் உள்ள Print Layout என்பது தேர்வு செய்யப் பட்டிருந்தால் தான் உங்களுடைய Ruler Status Bar போன்றவற்றை திரையில் கொண்டுவர உதவும்.


இதில் உள்ள Status Bar, Gridlines போன்றவற்றை தேர்வு செய்தால் அவை திரையில் தெரியும், அவற்றின் தேர்வுகளை நீக்கிவிட்டால் அவை திரையை விட்டு அகலும்.

அதே போல் உங்களுக்கு தேவையான அளவில் உங்க ளுடைய டாகுமெண்டை Zoom செய்து பார்த்துக் கொள்ளலாம். இதனால் மிகச் சிறிய எழுத்துகளில் டைப் செய்யப்பட்டவையையும் மிகப் பெரிதாக்கி படித்துக் கொள்ளலாம்.


Split window என்பது உங்களுடைய டாகுமெண்டை திரையை இரண்டாக்க உதவும்.

View மெனுவில் உள்ள மிக முக்கியமான டூல் Macros ஆகும். நீங்கள் அடிக்கடி உபயோகிக்கும் சில விஷயங்களை பதிவு செய்து வைத்துக் கொண்டு பின்னர் உபயோகிக்க Macros உதவும். மிகச்சரியாக சொல்வதென்றால் வேர்டில் உங்களுக்கு தேவையான சில புரோகிராம்களை எழுத இந்த மாக்ரோஸ் உதவும்.

உதாரணத்திற்கு ஒரு மாக்ரோஸை உருவாக்கி பார்ப்போம்.





முதலில் Macros என்பதை தேர்வு செய்து Record Macro என்பதை தேர்வு செய்யுங்கள். பின்னர் வரக்கூடிய திரையில்




உங்களுடைய மாக்ரோ புரோகிராமிற்கு என்ன பெயர் வேண்டுமோ அந்த பெயரைத் தாருங்கள்.

பின்னர் கீபோர்ட் என்பதை தேர்வு செய்யுங்கள்.

பின்னர் வரக்கூடிய திரையில் உங்கள் மாக்ரோ இயங்க வேண்டிய Keyboard Shortcut ஐ தாருங்கள்.




அதாவது எந்த ஷார்ட்கட் கீயை அழுத்தினால் உங்கள் மாக்ரோ இயங்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அந்த ஷார்ட்கட் கீயை Press Shortcut Key என்ற இடத்தில் வைத்து அழுத்திவிட்டு என்பதை தேர்வு செய்யுங்கள். பொதுவாக Control கீயுடன் இணைத்து A B போன்ற போன்ற ஏதாவது ஒரு Shortcut கீயை உபயோகிப்பது வழக்கம்.


ஆனால் வேர்டில் உள்ள வேர்டுக்கென்றே உள்ள Shortcut கள் அதிகமாக Control உடன் இணைந்து வருவதால் மாக்ரோஸ் புரோகிராமுக்கு கண்ட்ரோல் கீயுடன் Alt என்ற கீயையையும் இணைத்து அத்துடன் A B போன்ற கீகளை உபயோகித்து Shortcut உருவாக்கினால் நல்லது.

தேவையான Shortcut கொடுத்தப்பின் Assign என்பதை தேர்வு செய்யுங்கள்.

பின்னர் Close என்பதை தேர்வு செய்யுங்கள்.


உங்களுக்கு தேவையான வற்றை வேர்டில் உருவாக்குங்கள். பின்னர் மாக்ரோவில் சென்று Stop Macro என்பதை தேர்வு செய்யுங்கள்.

உங்கள் டாகுமெண்டை Save செய்யுங்கள்.




பின்னர் புதியதாக ஏதாவது ஒரு டாகுமெண்டை திறந்து அதில் நீங்கள் உங்கள் மேக்ரோ வில் கொடுத்த Shortcut கீயை அழுத்திப் பாருங்கள். நீங்கள் பழைய டாகுமெண்டில் உருவாக் கியவை தானாக இந்த டாகு மெண்டில் வருவதை கண்டு அதிசயித்து போவீர்கள்.

நீங்கள் உருவாக்கிய இந்த மாக்ரோஸை அழிக்க மாக்ரோஸ் என்பதற்குள் சென்று உங்க ளுடைய மாக்ரோவை தேர்வு செய்து Delete Macro என்பதை தேர்வு செய்தால் அது அழிந்து விடும்.




அதன் பின்னர் அந்த மாக்ரோ வேலை செய்யாது. புரோகிராமிங் தெரிந்தவர்கள் எடிட் மாக்ரோ என்பதை தேர்வு செய்து விசுவல் பேசிக் நிகழ்ச்சி நிரலுக்குள் சென்று புரோகிராம் எழுதிக் கொள்ளலாம்.

இத்துடன் வேர்ட் முடிவடைகிறது. இன்ஷா அல்லாஹ் வரக்கூடிய இதழிலிருந்து எக்ஸெல் கற்றுக் கொள்ளலாம்.

## ஹனீப்பிடம் மன்னிப்பு கேட்டது ஆஸ்திரேலியா அரசு!

கடந்த 2007ம் ஆண்டு இங்கிலாந்தின் கிளாஸ்கோ நகரில் குண்டு வெடிப்புடைத்த முயற்சி. இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இது தொடர்பான விசாரனையின் போது ஆஸ்திரேலியாவில் பணியாற்றி வந்த பெங்களூரை சேர்ந்த டாக்டரான முஹம்மது ஹனீப் கைது செய்யப்பட்டார். கிளாஸ்கோ சமபவத்திற்குப் அவருக்கும் தொடர்பிருப்பதாக கூறி ஹனீப் சிறையில் அடைக்கப் பட்டார். பிரிட்டிஷ் அதிகாரிகள் கொடுத்த தகவலின் பேரில் ஆஸ்திரேலியா காவல் துறையும், குயின்ஸ்லேண்ட் காவல் துறையும் சேர்த்து இவரை கைது செய்தது. இதன் பிறகு கிளார்க் கமிஷன் விசாரணை நடத்தி ஹனீப் குற்றமற்றவர் என்று அறிவித்தது. இந்த நிலையில் ஆஸ்திரேலியா அரசுக்கு எதிராக அந்த நாட்டின் முன்னாள் குடியேற்றத் துறை அமைச்சர் கெவின் ஆண்ட்ரூஸ் மீது ஹனீப் மான நஷ்ட வழக்கு தொடர்ந்தார். தற்போது ஆஸ்திரேலியா அரசுக்கும் ஹனீப் புக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா காவல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் ஹனீப்புக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று இதன் மூலம் இப்பிரச்சினை முடிவுக்கு வரும் என்றும் கூறியுள்ளது. அட்டர்னி ஜெனரல் அலுவலகம் மன்னிப்பு கேட்டு கொள்ளும் அறிக்கையை வெளியிட்டது. இழப்பீடு பற்றிய விவரங்களை அது ரகசியமாக வைத்துள்ளது. இழப்பீடு தொகை 10 லட்சம் டாலராக இருக்கும் என்று கூறப்படுகிறது.

மனைவி பிர்தௌஸ் மற்றும் மூன்று வயது மகள் ஹனியாவுடன் 10 நாள் விடுமுறையில் ஆஸ்திரேலியா வந்துள்ள ஹனீப் இதுபற்றி குறிப்பிடுகையில் “இத்துடன் இப்பிரச்சினை முடிவுக்கு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. தவறான குற்றச்சாட்டின் பேரில் நான் கைது செய்யப்பட்டது எனக்கு மிகுந்த வேதனையான அனுபவத் தை கொடுத்தது. இன்று ஏற்பட்டுள்ள உடன்பாடு எனக்கு பெரும் நிம்மதியை கொடுத் துள்ளது. எனது குடும்பத்தினரு டன் இனி நிம்மதியான வாழ்வை தொடர்வேன்” என்றார்.


இந்தியாவில், பல குண்டு வெடிப்புகளில் அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறையில் சித்திரவதைகளைச் சந்திக்கின்றார்கள். வாழ்க்கையைப் பறிகொடுக்கின்றார்கள். ஆனால் எந்த இழப்பீடுமில்லை.

## புதைக்கப்பட்ட மக்கள்!
## மறைக்கப்பட்ட வரலாறுகள்!

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை!


டாக்டர் அங் சுவீ

தமிழ் வடிவம் : மு.குலாம் முஹம்மத்


### ஆஜீசாஹாலித். . . ?

அஜீசா ஹாலித் உயிரோடு இருக்கின் றாள் என்ற எண்ணம் என்னை சற்று இயங்கலாம் என உந்தித்தள்ளியது.

ஆனால் இதயத்தில் ஈரமே இல்லாத, இஸ்ரேலிய இராணுவத் திடம் சிக்கிக் கொண்டோம்.

குழந்தைகள், பெண்கள், வயோதிகர்கள், இவர்களைப் பிணமாக்குவது. அந்தப் பிணங் களின் மேல் புல்டோசர்களை ஏற்றி, சிதறிய பிணங்களை மண்ணோடு மண்ணாக மக்கிப் போகிட செய்வது. இவை யெல்லாம் - இந்த இஸ்ரேலிய இராணுவத்தினருக்கு இதயங் களில் எந்த நெருடலை யும் ஏற்படுத்திடவில்லை. இவர் கள் இனி பாலஸ்தீன மக்களுக்கு - அகதிகளாக அண்டை நாட்டில் அண்டிப்பிழைக்க வந்த மக்க ளுக்கு சேவை செய்ய விடுவார்கள் என்ற எண்ணமும் ஏற்பட வில்லை.

பால்மோரிசும், நானும் பேசிக் கொண்டிருந்தது; கமரேடோ ஹோட்டலுக்குள் பத்திரிகை யாளர்களும் தொலை பேசி நிலையங்களைச் சார்ந்தவர் களும் தங்கி இருந்த அறைகளில் தாம்.

நாங்கள் பேசிக் கொண்டி ருக்கும் போதே, நார்வே - ஐ சார்ந்த தொலைபேசி நிலையத்தவர்கள் அங்கே வந்தார்கள். அவர்கள் தாங்கள் பதிவு செய்து கொண்டு வந்த வீடியோ பதிவுகளைப் போட்டுக் காட்டினார்கள். ஆனால், காஸா மருத்துவமனை, அதிலிருந்து வெளிவரும் சாலை கள், ஐக்கிய நாடுகள் தலைமையகம் வரை இட்டுச் செல்லும் சாலைகள், அனைத்திலும் பிணங்கள் அடுக் கடுக்காய் குவிந்து கிடந்தன. இரத்தம் தெப்பக்குளம் போல் காட்சியளித்தது. பார்க்கவே மனம் வெதும்பிற்று.

நாம் செய்த சேவைகள் அனைத்தையும் பாழாக்கி விட்டார் கள் என்று பரிதவிப்பதை தவிர வேறொன்றும் செய்ய முடிய வில்லை.

தொலைக்காட்சியில் இவற் றையெல்லாம் பதிவு செய்தவர்கள் உறைந்து போய் தான் நின்றார்கள். ஆனால் ஒருமுறை தாங்கள் நன்றாகத்தான் பதிவு செய்திருக் கின்றோம் என்பதைத் தெரிந்த வுடன், தங்கள் பணி முடிந்தது என்ற திருப்தியோடு அவ்விடம் விட்டு அகன்றார்கள். அதற்கு மேல் அவர்களிடம் எதிர்பார்ப் பதற்கெதுவுமில்லை.

இந்தத் தொலைக்காட்சிப் பதிவுகள் மக்கள் மன்றத்துக்கு வரவேயில்லை. அமெரிக்கா உத்தரவிட்டதால் அது வெளி யிடப்படவில்லை.

இந்த வகையில் ஊடகங் களைச் சார்ந்தவர்களும் அந்த மக்களுக்குத் துரோகத்தையே செய்து கொண்டிருந்தார்கள்.

ஊடகத்தைச் சார்ந்தவர் கள் தங்களை கடமையைச் முறை யாகச் செய்திருந்தால் உலகெங் கும் ஒரு பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும். ஒரு வேளை இஸ்ரவேலர்கள் அதற்குப் பயந்து கொலைகளை ஒரு நாள் முன்னரே நிறுத்தி இருக்கலாம். ஆனால் ஊடகங் கள் தங்கள் பணியைச் செய்ய வில்லை.

அந்த வீடியோக்களில் நாங்கள் நேரில் காணாத பல காட்சிகளையும் கண்டோம்.

குழந்தைகளை கொலை செய்வதில் இஸ்ரவேலர்கள் பல குரூரங்களைக் கையாண்டிருந் தார்கள்.

நேரடியாக இஸ்ரேலியர் களின் துப்பாக்கிச் சூடுகளை எதிர்கொண்டு இறந்து போவது என்பது ஒன்று, அல்லாமல் தாங்கள் ஓடிப்பிடித்து விளை யாடிகளிக்கும் மழலைகளைச் சித்திரவதை செய்து கொலை செய்வது என்பது ஒன்று.

பல குழந்தைகளை வரிசை யாக நிறுத்தி விளையாட்டுப் பொருள்கள் போல் தோற்றந் தரும் பொருள்களை முன்னே வைத்திருக் கின்றனர்.

பாவமறியாத அந்த மழலை கள் அவற்றைப் பொறுக்கி எடுக்கப் பாய்ந்து வருகின்றார் கள். அவர்கள் மேல் துப்பாக்கிக் குண்டுகளைப் பாய்ச்சிக் கொலை செய்கின்றார்கள்.

சக மழலைகள் மாய் வதைப் பார்த்த அந்த மழலைகள், தங்கள் தோழிகளைத் காத்திட ஓடி வருகின்றார்கள். அவர் களையும் கொலை செய் கின்றார்கள் அந்த பாதகர்கள்.



அதனால்தான் சொன்னேன், ஷாப்ரா ஷத்திலாவில் முதலில் இறந்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள். அல்லல் பட்டு மரணத்தைச் சந்திப் பவர்கள் ஐய்யகோ! என் சொல்வேன்!

அதற்கு மேல் அந்தக் கொடூரங்களை என்னால் சகிக்க இயல வில்லை. கண்களை இறுக்க மூடிக் கொண் டேன். அதையும் பிய்த் துக் கொண்டு கண்ணீர் கரை புரண்டு ஓடியது.

ஓடிக்கொண்டிருந்த வீடி யோக்களில் தோன்றும் கோரங் களை நான் காணவிரும்ப வில்லை. பால்மோரிஸ் எனக்கு ஆறுதல் சொன்னார். என் மனம் வெதும் பிற்று. அழவேண்டாம் இனி அந்த வீடியோக்களை உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். அத்தாட்சி களை சேகரிக்க வேண்டும். எங்கேனும் ஒரு இடத்திலிருந்து இந்த யூதர்களுக் கெதிரான போர் ஒன்றை தொடர்ந்தாக வேண்டும். இந்த இஸ்ரேலுக்கு எதிரான சாட்சியங்களாக இவற்றை மாற்றி யாக வேண்டும் என முடிவு செய் தேன்.

நார்வே ஊடகத்தைச் சார்ந்தவர்களிடம் முழுமையாக வீடியோக்கள் எல்லாவற்றையும் போட்டுக் காட்டிட வேண்டி னோம். அவர் களும் போட்டுக் காட்டினார்கள்.

அதில் பார்த்த ஓர் நிகழ்ச்சி என் நெஞ்சைப் பிளந்தது. 17ஆம் தேதி (17.09.1982) நான் அறுவை சிகிச்சை செய்த குழந்தை ஒன்று ஒரு விளையாட்டு மைதானத்தில் பிணமாகக் கிடந்தது. இன்னும் பல குழந்தைகளும் அதே மைதானத்தில் பிணமாகக் கிடந்தார்கள்.

வீடியோவை போட்டுக் காட்டிக் கொண்டிருந்தவர் களிடம் இந்தக் காட்சி எங்கே பதிவு செய்யப்பட்டது எனக் கேட்டேன்.

அவர்கள் ஓர் விளையாட்டு மைதானத்தில் வைத்துப் பதிவு செய்யப்பட்டது என்றார்கள். குழந்தைகள் எப்படி அதிலும் காஸா மருத்துவமனைக்குள் சிகிச்சைப் பெற்றுக் கொண்டி ருந்த குழந்தைகள் எப்படி மைதானத்திற்கு வந்தார்கள் எனக் கேட்டேன்.

அதற்கு அவர்கள், இந்த மைதானத்தில் ஐக்கிய நாடுகள் சபையினால் பாதுகாக்கப்பட்ட மருத்துவ முகாம்கள் இருக் கின்றன எனக் கூறி எல்லாக் குழந்தைகளையும் இந்த முகாமுக்கு அழைத்து வந்து விட்டார்கள். பின்னர் இங்கே வைத்துக் கொலை செய்து விட்டார்கள் என்றார்கள்.

உண்மையிலேயே அந்த விளையாட்டு மைதானங்களில் மருத்துவ முகாம்கள் என்ற இருந்தனவாா? என அந்த வீடியோ தயாரிப்பாளர்களைக் கேட்டேன். அவர்கள் இல்லை எனப் பதில் சொன்னார்கள்.

அப்படியானால் ஐக்கிய நாடுகள்சபையின் பெயரை இஸ்ரவேலர்கள் தங்கள் கொலை பாதங்களுக்குப் பயன்படுத்தினார்களா? என்றேன்.

அதற்கு அவர்கள், இஸ்ரேலியர் இந்தக் கொலைகளைக் செய்வதற்கு பல பினாமி கொலை காரர்களைக் கொண்டு வந்துள்ளார்கள். அவர்கள் இஸ் ரேலிய இராணுவ உடையை அணிந்திருக்க மாட்டார்கள்.

சாதாரண உடையில்தாம் தோற்றந்தருவார்கள். ஆனால் குரூரமாகச் கொலை செய்வார்கள். இவர்களெல்லாம் ஐக்கிய நாடுகள் சபையின் பணிக்காக ஒதுக்கப்பட்ட கட்டடங்களிலும், அறைகளிலுந்தான் தங்க வைக்கப் பட்டிருக்கின்றார்கள் என்றார்கள்.

அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனேன் நான். என் உள்மனது இனி எதிர்க்க வேண்டிய மனித இன எதிரிகள் ஏராளமானோர் இருக்கின்றார்கள் என்றது.

இவற்றிற்கெல்லாம் எதிராக ஓர் எதிர்ப்பைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற முடிவு பலமானது, இறுக்கமானது.

அந்தத் தொலைக்காட்சி நிறுவனத்தார் அதாவது தொலைக்காட்சி ஊடகத்தைச் சார்ந்தவர்கள் என்னிடம் என்னையும் பவுல் மோரீசையும் பற்றி விசாரிக்கத் தொடங்கி னார்கள்.

நாங்கள் மருத்துவர்கள். காஸா மருத்துவமனையில் இஸ்



ரேலிய துப்பாக்கியால் சுடப்பட்டு உயிர் பறிபோகாமல் முறிந்தும் நொறுங்கியும் கிடந்த மக்களுக்கு சேவை செய்ய வந்தோம் என்றோம். இதை கூர்ந்து கேட்ட அவர்கள்.

எல்லோரையும் பிணமாக்கி மண்ணோடு மண்ணாக மக்கிப் போகச் செய்து விட்டார்கள். இனி நீங்கள் சேவை செய்ய யாருமில்லை. இனி நீங்கள் உங்கள் நாடுகளுக்குச் போக வேண்டியதுதான் என்றார்கள்.

நான் பவுல் மோரிசை தனியாக அழைத்துச் சென்று இப்படிக் கோரமான கொலைகளைச் செய்தவர்களுக்கு எதிராக நாம் ஏதாவது செய்தாக வேண்டும். இவர்களிடம் இந்த வீடியோ பதிவுகளில் ஒரு பிரதியை வாங்கிக் கொள்ள வேண்டும். நாம் நாடு திரும்பியதும் இஸ்ரேலின் இந்த அட்டூழியங்களுக்கெதிராக நம்மால் ஆனவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்றேன்.

அதற்கு பவுல்மோரிஸ் இதில் உனக்கு நான் எப்படிப் பதில் சொல்வது என்றே தெரியவில்லை. இதுவெல்லாம் ஆபத்தானவை. யாரேனும் இது போன்ற பணிகளை மேற்கொண்டால் நாம் துணை நிற்கலாமே அல்லாமல், நாமாகச் இதற்கு முன்னே நின்றோம் என்றால் இந்தப் பாதகர்கள் நம்மை மிகவும் எளிதாக அழித்து விடுவார்கள்" என்றார்.

நான் சற்றும் மனந்தளரவில்லை. நீதிக்கான இந்தப் போராட்டத்தில் இறந்தால் அதுவே மிகவும் சிறந்த மரணம் எனக் கருதினேன்.

இவர்கள் நம்மை உடனேயே நமது நாடுகளுக்குத் திரும்புங்கள் என்றால் நாம் சற்று சாதுரியமாக விசாவை நீட்டி வாங்கிக் கொள்ள வேண்டும். போதிய அளவில் சாட்சியங்களைத் தயார் செய்து விட்டே பெய்ரூத் - ஐ விட்டு வெளி யேறிட வேண்டும் என்றே முடிவு செய்தேன். என்னைப் பொறுத்த வரை இனி உயிர்வாழ்வதற்கு இதை விட உயர்ந்த இலட்சியம் ஒன்று இல்லை. உண்மையைச் சொன் னால் நான் எல்லா நம்பிக்கை யையும் - கடவுள் மீதுள்ள நம்பிக் கையையும் இழந்து விட்டேன். இனி ஏன் வாழ்ந்திட வேண்டும் என்ற வினாவுக்கு;

அகதிகள் முகாமில் வாழ்ந் தோருக்கு நீதிதேடிப் போராடிட வாழ்ந்திட வேண்டும் என்ற பதில் மட்டுமே எஞ்சி நின்றது.

நானும் பவுல் மோரிசும் அங்கேயே இன்னும் அதிகநேரங் களைக் கழித்தோம்.

பிபிசி என்ற பிரிட்டன் நாட்டுத் தொலைக்காட்சி குழு மம் இருந்த இடத்திற்கு சென் றோம். நான் எனது பிரிட்டன் உறவைச் சொல்லவே அவர்கள் இன்னும் கொஞ்சம் நெருங்கி வந்தார்கள்.

நார்வே தொலைக்காட்சி குழுவினரவிட இவர்களிடம் சற்று நெருக்கம் அதிகமானது.

அவர்கள் ஒளிப்பதிவில் அன்றைய பதிவுகளைப் போட்டுக் காட்டிடச் சொன்னேன்.

அவர்கள் ஏற்கெனவே போட்டுப் பார்த்துவிட்டார்கள். எங்களுக்காக ஓரிரு பகுதிகளைப் போட்டுக் காட்டுகின்றோம் என்று கூறினார்கள்.

அவற்றிலும் அதே காட்சி கள் இதில் கோரம் என்னவெனில் எங்கள் மருத்துவ திறமையால் ஓரளவுக்கு நடக்கவும் தவிழவும் விட்டக் குழந்தைகளையெல்லாம் கொலை செய்திருக்கின்றார்கள்.

பல மணி நேரம் நாங்கள் அந்தக் குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்திருக்கின்றோம். அவர்களின் முகங்கள் எங்களுக்கு நன்றாக நினைவிருக்கின்றன.

ஆனால் அவர்கள் கொலை செய்யப்பட்டுக் கிடக்கின்றனர்.

நெஞ்சை பிளந்த இந்தக் கொலைகள், சொன்ன சேதி என்னவெனில் நாங்கள் எங்கள் மருத்துவ அறிவைப் பயன்படுத்தி வாழ வைத்த மழலைகளை சதிகாரர்கள் சந்தடியில்லாமல் கொலை செய்துவிட்டார்கள். ஆடுகளைக் அல்லல்பட்டு காப்பாற்றிக் கசாப்புக்கடைக் காரர்களிடம் தந்துவிட்டோம்.

அந்த வீடியோ காட்சி களில் சில வயோதிக பெண்கள், தங்கள் குடும்பத்தினரைக் காப்பாற்றிட குழந்தைகளையும் இளம் வயதி னரையும் பின்னே நிறுத்தி முன்னே நிற்கிறார்கள். அந்த வயோதிகப் பெண்ணை துளைத்த விசைத் துப்பாக்கிக் குண்டுகள், சல்லடை யாக்கிச் சரிக்கின்றன. பின்னர் அந்தக் குழந்தைகளும், இளம் வயது பெண்களும், அடுத்தடுத்து வந்த குண்டுகளுக்குப் பலியானார் கள்.

காஸா மருத்துவமனையில் நாங்கள் சிகிச்சைச் செய்து கொண்டிருந்த பல பெண்கள் அங்கே பிணமாகக் கிடப்பதை கண்டேன்.

உலகில் இஸ்ரவேலர்களைப் போன்ற கோழைகளை யாரும் எங்கேயும் சந்திக்க இயலாது.

ஆமாம்! ஷாப்ரா - ஷத்திலா அகதிகள் முகாம்! பாலஸ்தீனி லிருந்து இதே இஸ்ரவேலர்களால் கெடுபிடியால் விரட்டப்பட்டவர் கள் பக்கத்து நாடான லெபனா னில் தஞ்சம் புகுந்து சர்வதேச கண்காணிப்புகளின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அகதிகள் முகாம்களில் வாழ்கின்றார்கள். அதிலிருந்து ஆண்களை யெல் லாம் போராளிகள் எனக் கூறி பலமுறை இந்த முகாம்கள் மீது குண்டுகளை மழையாகப் பொழிந் தார்கள்.

சமாதானம் என்ற போது, ஆண்களெல்லாம் பாலஸ்தீன் விடுதலைப்படையினர், அவர் களை வெளியேற்றிவிடுங்கள். நாங்கள் குண்டுகள் போடுவதை நிறுத்தி விடுவோம் என்றார்கள்.

பன்னாட்டு கண்காணிப் பாளர்களின் நேரடிப் பார்வையின் கீழ் அந்த ஆண்களெல்லாம் வெளி யேற்றப்பட்டார்கள்.

அந்தக் கோரம் நிறைந்த காட்சியை - மகனை தாய் பிரிவதும் கணவனை மனைவி பிரிவதும் மழலைகளையும் குடும்பத்தையும் குடும்பத் தலை வன் பிரிவதும் கண்கொண்டு காண முடியவில்லை - அன்று.

ஆண்களெல்லாம் போய் விட்டார்கள். இனி அமைதி நிலவும் குண்டு மழை பொழியாது என எதிர்பார்த்த என்னைப் போன்றவர் களெல்லாம் ஏமாந்தோம்.

ஆண்களை அப்புறப் படுத்தி விட்டு பெண்களையும் குழந்தைகளையும் மிகவும் கோர மாகக் கொலை செய்கின்றனர். கேட்டால் முட்டைகளை உடைக்கின்றோம். ஆம்லேட் போட என ஏகடியம் பேசு கின்றார்கள்.

மனிதர்களால் சகிக்க வியலாத இந்தக் கோரங்களைச் சந்திக்கவா நாம் இங்கே வந்தோம்? என்றது என் மனது.

இனி எந்தக் காட்சியையும் காண மனம் சகிக்காது. அதனால் பத்திரிகையாளர்கள், தொலைக் காட்சி நிறுவனங்களைச் சார்ந்த வர்கள், இவர்களெல்லாம் தங்கி யிருந்த காம்ரேட் ஹோட்டலி லிருந்து நானும் பவுல் மோரிசும் வெளியே வந்தோம்.

பெய்ரூத் வந்த நாளிலிருந்தே சம்பாதித்த நண்பர் ஒருவரின் இல்லத்திற்கு என்னை பவுல் மோரிஸ் அழைத்துச் சென்றார். அந்த வீடு மிகவும் பெரியதாகவே இருந்தது. முதல் மாடிக்குமேல் மொட்டை மாடி ஒன்று. நான் பவுல் மோரிசிடம் என்னை அந்த மொட்டை மாடியில் சற்று தனியாக இருக்க விடுங்கள் எனக் கூறி மேலே சென்றேன். இனி ஏன் வாழ வேண்டும்? என்ற வினா என்னை அழுத்திக் கொண்டே இருந்தது.

இன்ஷா அல்லாஹ்

**தொடரும்**



# V.K.R.

## மூலம், பவுத்திரம் (கட்டி) ஆஸ்பத்திரி

(தமிழக அரசு பதிவு பெற்றது)

**Dr. T.H.** பத்மநாபன் R.I.M.P.
(தமிழக அரசு பதிவு பெற்ற மருத்துவர்)

குறிப்பு :
1) **ஆப்ரேஷன், பத்தியம் இல்லாமல் சித்த மருத்துவ முறையில் ஆயுட்கால உத்திரவாதத்துடன் குணப்படுத்தப்படும்.**
2) **ஆப்ரேஷன் மற்றும் பல சிகிச்சைகள் செய்தும் குணமடையவில்லையா ? கவலை வேண்டாம்.**
3) **ஆசனவாயில் ஏற்படும் மூலம்** (Piles) **பவுத்திரகட்டி** (Fistula) **ஆசன வெடிப்பு** (Ano-in Fissure) **நோய்களுக்கு மட்டும் சிகிச்சையளிக்கப்படும்.**

| | |
|---|---|
| **நெ. 9, ஜி.எஸ்.டி. ரோடு (MEPZ எதிரில்), சானிடோரியம், தாம்பரம், சென்னை–45.** | **97908 47383**<br>**99403 06717** |
| **நெ. 35/ஏ, ராஜாஜி தெரு, செங்கை டிரஸ்ஸஸ் மாடியில், செங்கல்பட்டு.** | **98943 56195** |

Kalpa Health Care

## பாரம்பரிய சித்த மருத்துவத்தில் அற்புத சிகிச்சை
## குழந்தையின்மைக்கு உன்னத மருத்துவம்

பாரம்பரிய சிகிச்சை அனுபவம் கொண்ட B.S.M.S. பட்டப்படிப்புள்ள
சித்த மருத்துவர்கள் சிகிச்சையளித்து உன்னத குணமளிக்கும் ஒரே ஸ்தாபனம்

ஆண்களுக்கு
- ஆண்மைக்குறைவு
- விந்தணுக்கள் குறைவு
- விறைப்புத்தன்மை குறைவு

பெண்களுக்கு
- P.C.O.S. (**பாலிஸிடிக் ஒவேரியன் சின்ட்ரோம்**)
- மாதவிடாய் கோளாறுகள்
- கருப்பைக்கட்டிகள்
- வெள்ளைப்படுதல்
- ஹார்மோன் பிரச்சனைகள்

**இதர சிறப்புச் சிகிச்சைகள்:**
மூலம், ஆஸ்த்துமா, சோரியாஸிஸ் மற்றும்
இதர தோல் நோய்கள், சைனசைட்டிஸ், கல்லடைப்பு, ஆர்த்தரட்டிஸ்

மருத்துவர்கள் : **Dr. B.** ரகுவரன், B.S.M.S., **Dr.** அபர்ணாரகுவரன், B.S.M.S.,
பெண்களுக்கான சிறப்பு மருத்துவர் **Dr.** அபர்ணா ரகுவரன் சிகிச்சையளிக்கிறார்

விலாசம்: **கல்பா ஹெல்த்கேர்**
எண். 3, சண்பார்க் அபார்ட்மெண்ட், 92, சௌத் வெஸ்ட்போக் ரோடு, தி.நகர், சென்னை–600 017.

**புதன்கிழமை மாலை 5.30 மணி முதல் 6 மணி வரை மக்கள் தொலைக்காட்சியில் ஆலோசனைக் கண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

தொடர்புக்கு :
**97888 99907**
**www.kalpahealthcare.com**



Owned and Published by M. Gulam Mohamed from 235 Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed, Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Chennai - 600 002.